Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ குருப் யோநம :

ஸ்ரீ ஸத்யகிரி மாஹாத்ம்யம்

என்னும்

திருப்பரங்குன்றம் ஸ்தல புராணம்

மூலமும் உரையும்

வெளியீடு

ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்

திருப்பரங்குன்றம்

2018

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



வித்யாலயத்தின் வெள்ளிவிழா நினைவாக சமர்ப்பிக்கப்பட்ட
ரத்னகிரீடம் மற்றும் தங்க சிம்மாசனத்தில்

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி

திருப்பரங்குன்றம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ குருப் யோநம :

ஸ்ரீ ஸத்யகிரி மாஹாத்ம்யம்

என்னும்

திருப்பரங்குன்றம் ஸ்தல புராணம்

மூலமும் உரையும்



வெளியீடு

ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்

திருப்பரங்குன்றம்

2018

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
சிவமயம்

நூல் விளக்கக் குறிப்பு

பெயர்	:	திருப்பரங்குன்றம் ஸ்தல புராணம்
மொழி	:	ஸம்ஸ்க்ருதம், தமிழ்
எழுத்து	:	க்ரந்தம், தமிழ்
முதற்பதிப்பு	:	1931
இரண்டாம் பதிப்பு	:	2014
மூன்றாம் பதிப்பு	:	2018
எழுத்து அளவு	:	12 புள்ளிகள்
தாள்	:	Maplitho 8
பக்கங்கள்	:	264 + 14
வடிவமைப்பு	:	ஹைலைட் கிராஃபிக்ஸ்
ப்ரதிகள்	:	1000

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
முருகன் துணை

பதிப்புரை

சந்ததம் பந்தத் தொடராலே சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென்றென்றுற்றுனை நாளும் கண்டுகொண்டன்புற்றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா தென்பரங்குன்றிற் பெருமாளே

- ஸ்ரீஅருணகிரிநாத ஸ்வாமிகள்

எல்லாம்வல்ல இறைவன் குன்றமமர்ந்த குமரன் தெய்வானை மணாளன் முருகப் பெருமானின் திருவருளாலும், அங்கயற்கண்ணி உடனமர் ஆலவாயண்னல் சொக்கநாதப் பெருமானின் திருவருளாலும், ஸ்ரீகாஞ்சீ மஹாஸ்வாமிகளின் அருளாசியாலும், அல்லூர் குலபதி சாம்பவஸ்ரீ வை. விச்வநாத சிவாசார்ய ஸ்வாமிகள் அவர்களால் கடந்த 1993ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்ட நமது ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம் நம் குருநாதர் சிவஸ்ரீ க. ராஜா பட்டர் அவர்களின் நெறிப்படுத்தலின் மூலமாக 25 ஆண்டுகளை மிகச் சிறப்பாக நிறைவு செய்துள்ளது.

இவ்வித்யாலயத்தின் மூலமாக பல்வேறு அறப்பணிகள் இதுவரை செய்யப்பட்டு வந்துள்ளன. அவற்றுள் ஒன்று நம் சமயத்தின் கருத்துகளை விளக்குகின்ற நூல்வெளியீடுகளும் ஆகும். அவ்வழியில் 25ஆம் ஆண்டு நிறைவு = வெள்ளிவிழாவை முன்னிட்டு, பல நூல்கள் வெளியிடத் திருவருள் கூட்டியுள்ளது. அந்நூல் வரிசைகளுள் புராணங்களில் “பரங்கிரி” “ஸத்யகிரி” “ஸத்யாசலம்” “ஸத்யசைலம்” என்றெல்லாம் அழைக்கப்படுகின்ற திருப்பரங்குன்றம் திருத்தலத்தின் தலபுராணமும் ஒன்றாகும்.

முருகப்பெருமானின் ஆறுபடைவீடுகளுள் முதல்வீடாகத் திகழ்வதும், தெய்வயானையை பெருமான் மணம்புரிந்து திருமணக்கோலத்தில் காட்சி தருவதும், ஞானசம்பந்தப் பெருமானாலும், சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளாலும் பாடல்பெற்றதும், அருணகிரிநாத ஸ்வாமிகளால் 20 பாடல்களால் போற்றிப் பரவப்பட்டதுமாகிய இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூவகைச் சிறப்புக்களையும் கொண்டது. கல்யாணமூர்த்தியாகிய இப்பெருமானை வழிபடுவதாலும், இத்தலபுராணத்தைப் படிப்பதாலும் எப்பொழும் மங்களமான வாழ்வுகிட்டும் என்கிறது ஸத்யகிரி மாஹாத்ம்யம் எனும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்நூல் வடமொழியில் சுமார் 1600 சுலோகங்களில் அமைந்திருக்கும் இப்புராணத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு இஞ்சிக்கொல்லை ப்ரஹ்மஸ்ரீ ராமசந்திர சாஸ்த்ரிகள் அவர்களால் இயற்றப்பட்டது என்று குறிப்பிடுகிறார்கள் பதிப்பாசிரியர் ஸ்ரீ ராமசுவாமி அவர்கள்.

முதல் முதலாக 1931ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்நூலை 2014ஆம் ஆண்டு அப்போதைய அறநிலையத்துறை செயலர் உயர்திரு கண்ணன் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க நாம் நம் வித்யாலயத்தின் மூலமாகப் பதிப்புப் பணிகளைச் செய்துகொடுத்திருந்தோம். திருப்பரங்குன்றம் திருக்கோயில் வெளியீடாக அது அப்போது வெளியிடப்பட்டது.

தற்போது நமது வித்யாலயத்தின் வெள்ளி விழா மலராக வெளியிடப்படுகிறது. முருகனடியார்கள் அனைவரும் ஓதி உணர்ந்து முருகப்பெருமானின் பேரருளைப் பெற வேண்டுகிறோம்.

இந்நூல் வெளியிடுவதற்கான பொருளுதவியைச் செய்த மதுரை, ஸ்ரீதயாஸாகர் அறக்கட்டளையினருக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூலாக்கப்பணியில் உதவிய ஈரோடு B. அரவிந்த சிவம், சென்னை S. மணிகண்ட சிவம் ஆகியோருக்கும், பிழை திருத்தம் செய்து உதவிய மதுரை சிவஸ்ரீ S. உக்ரபாண்டிய பட்டர் அவர்களுக்கும் நூலை நல்லமுறையில் வடிவமைத்து அச்சிட்டுத்தந்த மதுரை ஹைலைட் க்ராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற்றுப் படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

பேரன்புடன்
ஸ்ரீஸத்குருநாதர் அவர்களின் அருளாணையின் வண்ணம்
சிவசரணகமலைக சரண்யன்
சிவஸ்ரீ G. கார்த்திகேய சிவம்
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீஸ்கந்தாசல (ஸ்கந்தகிரி) க்ஷேத்ரம்

என்ற

திருப்பரங்குன்றம் ஸ்தல புராணம்

மூலமும் உரையும்

வித்வான்களால் மொழிபெயர்த்து
சோதனை செய்யப்பட்டு,

மதுரை ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேஶ்வராள்
திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் தேவஸ்தானம்
டிரஸ்டி மகா – ள – ள – ஸ்ரீ
R. துரைஸாமி நாயுடுகாரு மூலம்

மதுரையிலிருக்கும் பண்டுருட்டி
வெங்கடசாமி நாயுடு அவர்கள் குமாரத்தி
ஸ்ரீமதி கோவிந்தம்மாளின்
பொருள் உதவிகொண்டு,

மதுரையிலிருக்கும் திருவாதவூர்
ப. ராமஸ்வாமி ஐயரால்

மதுரை மஞ்சனக்காரத் தெரு,
ஹரிஸமய திவாகரம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது

1931

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
முருகன் துணை

அறிவிப்பு

"ஸத்யாசல"மெனப் புராணத்தில் கூறப்பட்டுள்ள "திருப்பரங்குன்றம்" க்ஷேத்ரம் மூர்த்தி தீர்த்த விசேஷங்களை வெளியிடும் இந்த ஸ்தல புராணத்தை, க்ரந்த மூலமும், தமிழ் உரையுடனும் அச்சிட்டு வெளியிட முயன்றுவந்ததில் அது சித்தமாகக் கொஞ்சம் தாமதப்பட்டது. அதனால் இது, நிர்விக்னமாய் முடிவுபெற அநுக்ரஹிக்க அனவரதமும் குஹஸ்வாமியை வேண்டிவந்தனம். அந்த ஸுப்ரஹ்மண்யரே பழனி முதலிய பல இடங்களிலும், தற்காலம் திருமங்கலத்திலும் சர்க்கார் தாசில்தார் உத்யோகம் வகித்து, உடல் பொருள் ஆவியினால் ஆண்டவனுக்கு ஈடுபட்டு, பூததயையால் பக்த கோடிகளுக்கும் பாமரர்களுக்கும் கைங்கர்யரூபமான பலவித தர்மங்களை நடத்திவரும் மகான் மகா – ள – ள – ஸ்ரீ R.துரைஸ்வாமி நாயுடுகாரைக் காட்டித்தந்தனர். அவர், ஈச்வர ஆக்ஞைப்படி இந்த விசேஷ தர்மத்திற்கும் பாத்திரரானார். உடனே கடவுள் க்ருபையால் அவர் மதுரை ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேச்வராள், திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் தேவஸ்தானங்கட்குப் பணிவிடை செய்யும் பொருட்டு டிரஸ்டியாக நியமிக்கப்பட்டார்.

இவர் விசேஷமுள்ள இந்த ஸ்தல புராணத்தை ஏழைகளும் எளிதில் வாங்கிப் பயிலும்படி உபகாரஞ்செய்து, இதின் கிரயத் தொகையை ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கு விபூதி அபிஷேகத்திற்கு வினியோகப்படுத்தவும் தீர்மானித்தனர். இதற்காக இந்த பக்த சிகாமணி பலவிதங்களிலும் எடுத்துக்கொண்ட சிரமம் போற்றத்தக்கது. இவரது நன்முயற்சியின் பலனாக முருகக்கடவுள் அநுக்ரஹிக்க, இந்த புராணம் புஸ்தக ரூபமாக விரைவில் வெளிவந்தது. இதுவும் வியக்கத்தக்கதே. பக்தாநுக்ரஹபரரான பகவானின் லீலாவிநோதங்களைப் புராண மூலமாய் யாவரும் தெரிந்து கொண்டாடத்தக்க தருணமேற்படுத்திய இந்தப் பக்தசிகாமணிக்கு எல்லோரும் நன்றி பாராட்டுவாராக. இவருக்குத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீர்க்காயுளும் அபீஷ்டஸித்தியும் அசஞ்சல பக்தியும் மேன்மேலும் தர்ம சிந்தையும் ப்ரார்த்தித்து அருளும்படியாய் ஈசனை ப்ரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கு விபூதி அபிஷேக கைங்கர்யம் செய்யவேண்டுமென்று கருதியிருந்த (மதுரை மேலாவணி மூலவீதி பச்சரிசிக்காரர் சந்திலிருக்கும் பண்டுருட்டி வெங்கடசாமி நாயுடவர்கள் குமாரத்தி) ஸ்ரீமதி கோவிந்தம்மாளுடைய பாக்ய விசேஷத்தை என்னென்போம். இந்தப் புராண நூலில் கிடைக்கும் ஊதியமும் விபூதி அபிஷேகக் கைங்கர்யத்திற்காம் என்பதறிந்த இந்த அம்மாள் இந்நூலிற்குரிய பொருளுதவி முழுமையுஞ்செய்தது இக்காலத்தில் அருமையாம். இந்த அம்மாள் செய்த உதவியானது, மேற்குறிப்பிட்ட கைங்கர்யபலனைத் தருவதோடு, எல்லோரும் குமரக்கடவுளின் திருவிளையாடலின் பெருமையைப் பயின்றுய்யத்தக்க வித்யாதாந பலனையும் தருகிறது. இங்ஙனம் ஒரு பேருதவியால் இருபேறெய்து மேல் இருநிலங்-கொண்டாடுமன்றோ! இத்தகைய தருமத்தைச் செய்த இந்த மாது சிரோமணிக்கு முருகக்கடவுள் இம்மையில் இஷ்டஸித்திகளையும், மறுமைப்பலனையும் கொடுத்தருள் புரிவாராக.

திருப்பரங்குன்றத்திலிருந்த காசிவாஸி ஸ்ரீலஸ்ரீ செந்திநா-தையரவர்களும் அவர் தம்பி சம்புநாதையரவர்களும் மனத்தினாலும் சரீரத்தினாலும் இந்நூல் விஷயத்திற்செய்த உதவி என்றும் மறக்கத்தக்கதில்லை.

இந்த ஸ்தல புராணத்திற்கு முகவுரை எழுதி உதவிய, மதுரை திருஞானஸம்பந்தமூர்த்தி ஆதீனம் தமிழ் வித்வானும், மதுரை ஸெயின்டுமேரி ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதருமான மகா-ள-ள-ஸ்ரீ கோவிந்தசாமி ஐயரவர்களுக்கு மனமார்ந்த வந்தனமுரியதாகுக.

இந்தப் புஸ்தகம் அச்சிடும் விஷயத்தில் மதுரை "ஹரிஸமய திவாகரம்" அச்சுக்கூடத்தின் அதிகாரிகளும் சிப்பந்திகளும் எடுத்துக் கொண்ட சிரத்தையையும் சிரமத்தையும் அறியும் ஸ்ரீ ஹரியே அவர்களுக்குக் கைமாறு சாதிக்கப் பிரார்த்தனை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்தப் புஸ்தகம் எதிர்பாராதபடி வெகு விரைவாய் அச்சிட்டு வெளியிடப்பட்டிருப்பதால் சோதித்துப் பிழைகள் திருத்தக் கொஞ்சமும் சாவகாசம் நேராதொழிந்தது. அதற்கு வருந்துகின்றனம். இதில் கண்ட பிழைகளைப் பெரியோர்கள் பொறுத்தருள்க. இனி மறுபதிப்பில் இதனை நன்கு சோதித்து வெளியிடலாகும்.

மதுரை
ப்ரஜோத்பத்தி௵
சித்திரைமீ

ப. ராமஸ்வாமி ஐயர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
முருகன் துணை

முதல் பதிப்பின் முகவுரை

உலகத்தில் தோன்றிய மனிதர்கள் நன்மை தீமை உணர்ந்து உய்யும் பொருட்டு பரமேச்வரன் அருளிய கலைகள் பதினெட்டு எனப் பெரியோர் பகருவர். அக்கலைகளாவன:- வேதம் நான்கு, வேதாங்கம் ஆறு, உபாங்கங்கள் நான்கு, உபவேதம் நான்கு என்பனவாம். அவற்றுள் புராணமென்பது உபாங்கம் என்னும் பகுதியைச் சார்ந்ததாகும். இறைவன் அருளிய வேதங்கள் கவர் பொருள் பட்டுச் சந்தேகிக்கநின்ற இடத்துப் புராணங்களைக்கொண்டு தீர்மானிக்க வேண்டுமென்று சிவமகாபுராணத்திலுள்ள வாயு ஸம்ஹிதை பூர்வ பாகம் முதலாவது அத்தியாயத்தில் கூறப்பெற்றுள்ளது. இதனையுணர்ந்த பெரியோர் வேதத்திலும் புராணம் மிகுந்த பலமுடையதென்று கூற ஒரு சிறிதும் பின்னிடார். புராணம் என்னும் சொல் பழைமையுடையது என்னும் பொருட்டு, அதனை இங்குப் பழமை சான்ற வரலாறுகளைக் கூறும் நூலுக்கேற்றி வழங்குவார்கள். அப்புராண நூல்கள் உலகத்தின் தோற்றம், ஒடுக்கம், முனிவர் அரசர்களின் வழிமுறை, அவர்கள் சரித்திரம், மந்வந்தரம் என்னும் ஐந்து விஷயங்களையும் தம்பால் விரவிக்கொண்டிருத்தலை இலக்கணமாகவுடையன என்பர் நூலுணர்ந்தோர்.

இத்தகைய இலக்கணம் அமைந்த புராணங்கள் அஷ்டாதசமெனக் கணக்கிடப்படுவனவாம். அவையாவும் வேதவியாசரால் வடமொழியிற் செய்யப்பெற்றனவாம். அப்பதினெண் புராணங்களுள், இறைவன் திருக்கோயில் கொண்டருளும் சிற்சில தலங்களின் மான்மியம் உரைக்கப்படும் பகுதிகள் உள்ளன. அந்தந்தப் பாகங்களைத் தனித்தனியே வேறு பிரித்து அந்தந்தத் தலங்களின் பெயரோடு சார்த்திப் பிற்காலத்திய ஆன்றோர் அவற்றிற்குத் தல புராணமெனப் பெயரிடலாயினர். இப்படிப்பட்ட தல புராணங்களில் ஒன்றாகும் திருப்பரங்கிரிப் புராணம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்பரங்கிரி உலகத்திலுள்ள ஆன்மகோடிகள் உய்யும் பொருட்டு, குன்றமெறிந்த குமரவேல் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும், ஆறுபடை வீடுகளில் முதற்படை வீடாகும்; என்று தொட்டு மதுரையோ அன்று தொட்டு இப்பரங்கிரியும் தமிழ்நாட்டில் தலைநின்ற புகழ்வாய்ந்ததாகும். கலியுக வரதனாய், தன்னை வழிபடுவோர்களுக்கு வேண்டிய இஷ்டஸித்திகளை யீந்தருளும் முருகப்பெருமான் எழுந்தருளும் பெருமையுடையது. மதுரையிலிருந்த கடைச்சங்கத்துத் தமிழ்ப் புலவர்களின் திலகமான நக்கீரரால் கூடற்குடவயின்..... என்று தாம் இயற்றிய திருமுருகாற்றுப்படையில் புகழ்ந்துரைக்கப்பட்டது. சைவசமயாச்சாரியர்களின் பாடல்பெற்றது. தலம், தீர்த்தம், மூர்த்தி விசேஷங்கள் மூன்று ஒருங்கே அமையப்பெற்றது. இவ்விசேஷங்களைப் புராணத்தை ஒருவர் படிக்கின் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதில் விளங்கும்.

இப்புராணம் வடமொழியிலிருந்து வந்தது. அதனை வடமொழியில் தேற்றேர்ந்த வல்லுநரன்றி மற்றையோர் உணர்தற்கில்லாதிருந்தது. அப்பெருங்குறையை நீக்குவான் வடமொழி சுலோகமும் அதன் தமிழ் மொழிபெயர்ப்புமாகச் சேர்த்து வெளியிட வேண்டுமெனக்கருதி அப்பதியில் முருகப்பெருமான் திருவருளைப் பெறும்பொருட்டு வாசஞ்செய்துகொண்டிருந்த ப்ரஹ்மஶ்ரீ ப. ராமசாமி ஐயரவர்கள் தக்க வடமொழி விற்பன்னரைக் கொண்டு ஆராய்ச்சிசெய்து வெளியிட்டது நம்மவர் செய்த புண்ணியமென்றே சொல்லவேண்டும். அவர்களுக்கு மும்மைப்பயனும் அளித்தருளும் முழுமுதற் கடவுளாகிய முருகப்பெருமான் நீண்ட ஆயுளையும், திடகாத்திரத்தையும், சகல சம்பத்துக்களையும் அளித்தருள்வாராக.

சுபம்

மு. கோவிந்தசாமி ஐயர்,
மதுரை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஹரி: ஓம்

ஶ்ரீ கணேஶாய நம:

விக்நத்வாந்த-நிவாரணைக-தரணிர்-விக்நாடவீ-ஹவ்யவாட்-

விக்நவ்யால-குலாபிமாந-கருடோ விக்நேப-பஞ்சாநந: ।

விக்நோத்துங்க-கிரி-ப்ரபேதந-பவிர்-விக்நாம்புதேர்-வாடவோ

விக்நாகௌக-கந-ப்ரசண்ட-பவநோ விக்நேஶ்வர: பாது ந: ॥

ஷண்முகம் ஷட்குணம் சைவ குமாரம் குக்குடத்வஜம் ।

தேவஸேநாபதிம் வந்தே ஸர்வகார்யார்த்த ஸித்தயே ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ ஐஹா மணவத்யெ நஃ

வாஙிஜாஸந வந்ஹாஜெ வஜ்ஜவா்திஶாநந ।

வஞாாதி ஸாதாநாய த்ராஹி ஶாம் ஶிவிவாஹந ॥

ஸாநாஜந ஸஷொஹ ஐநாஙகாஸாஐவிய ।

ஐநஷிதஐவாம்ஹொஜ த்ராஹி ஶாம் ஶிவிவாஹந ॥

வாஷாஹய ஹஷாஜ ஜிதஐநயவிரஹ ।

ஜயஶீஞ ஜிதாஶித் த்ராஹி ஶாம் ஶிவிவாஹந ॥

ஸஶாஶிவஞாடாக்ஷ ஜாதாவ கஷைஸா ।

காாணவணஹாஐய த்ராஹி ஶாம் ஶிவிவாஹந ॥

வாஙிங்கநாஐண வாஹதநிஷெவித ।

கநஜஐஹிஶாயா த்ராஹி ஶாம் ஶிவிவாஹந ॥

ஹிஶாஜிதநயாவாத் வஜவாஸாநாயக ।

ஶீதஹயாஐஹித் த்ராஹி ஶாம் ஶிவிவாஹந ॥

கநெககொடி ஸ்ரஹாணஸாஷிஷிதஜகாண ।

ஐஷொக்கூடமதைஶவ த்ராஹி ஶாம் ஶிவிவாஹந ॥

ஷநாய வாதாய வாாதநாய வாஞாவிநாயத ஜொசநாய ।

ஶிவாவஞாஜிஸூநிகெதநாய நஶொ நஃ ஶஜ்ஜாஸம்ஹவாய ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ குஹாய நம:

விஜ்ஞாபனம்

'ஸ்ரீ ஸத்யாசல க்ஷேத்ரம்' என வடமொழிப் பெயர் புனைந்துள்ள திருப்பரங்குன்றத்தின்கண் இக்கலியில் ப்ரத்யக்ஷ வரதரென ஸான்னித்யமாய் விளங்கும் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியின் மஹிமை, அந்தக்ஷேத்திரம், அங்குள்ள தீர்த்தங்களில் இவைகளின் பெருமை, இத்யாதி வைபவங்களடங்கிய இச்சிறந்த புராணத்தை மொழிபெயர்த்தச்சிட்டு வெளியிட எண்ணங்கொண்டு முயன்றிருந்த மதுரை ப்ரஹ்மஸ்ரீ வெங்கடேச்வர தீக்ஷிதர் அவர்களின் மனோபீஷ்டம் காலகதியால் நிறைவேறாமற் போனபடியால், அவர் குமாரர் ப்ரஹ்மஸ்ரீ மஹாதேவ தீக்ஷிதரிடமிருந்து கிடைக்கப்பெற்ற (இஞ்சிக்கொல்லை ப்ரஹ்மஸ்ரீ ராமசந்திர சாஸ்த்ரிகளால் மொழி பெயர்க்கப்பட்ட) த்ராவிட வ்யாக்யான ஸஹிதமாயுள்ள அப்பிரதியையும், ஸத்யாசல வாஸியான ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய கனபாடியிடமிருந்து கிடைக்கப்பெற்ற அபூர்வமான ஓலைப்பிரதிமூலத்தையும் ஒத்துப் பார்த்து, வித்வான்களின் பேருதவியால் சோதனை செய்து இதனை அச்சிட்டு வெளியிடமுயன்றது, சதுர்வித புருஷார்த்தங்களை-யுமளிக்கும் ஸாக்ஷாத் ஸ்ரீஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியினுடைய பாதகமலங்களை அனவரதமும் த்யானஞ்செய்துகொண்டிருக்கும் பக்தகோடிகளுடன், பூவுடன்சேர்ந்த நாரும் மணம் பெற்றதென்றாற்போல் என்போன்ற பாமரர்களும், மூர்த்திவிசேஷம் தீர்த்தவிசேஷங்களைத் தெரிந்து நீராடி பக்தானுக்ரஹபரரான ஸ்ரீ ஸ்கந்த மூர்த்தியைக் கண்ணாரத் தரிசித்து வாயாரப்போற்றி மனமார ஆனந்தக் களிப்புற்று, பக்தபரிபாலகரான ஸ்ரீ குஹ கருணாநிதியின் க்ருபா கடாக்ஷத்திற்குப் பாத்ர பூதர்களாக வேண்டுமென்ற இச்சிற்றறிவுடையோனின் பேரவா வொன்றே.

Digitization by Tamil Heritage Foundation of America. THFA(USA)

எவ்விதத்திலும் யோக்யதையற்ற இச்சிறியேனை, முடவன் கொம்புத்தேனுக்காசைப் பட்டாற்போன்றுள்ள இப்பெருங் காரியத்தில் ப்ரவர்த்திக்கும்படி தூண்டின என் நண்பர்களுக்கும், மூலமுரைகளை சோதனை செய்துதவிய வித்வான்களான (சோழவந்தான் ப்ரஹ்மஶ்ரீ சங்கரசாஸ்த்ரிகள், மதுரை ப்ரஹ்மஶ்ரீ கீழ்மங்கலம் கிருஷ்ண சாஸ்த்ரிகள், மதுரை ப்ரஹ்மஶ்ரீ மீனாக்ஷிஸுந்தர சாஸ்த்ரிகளாதி) பெரியோர்களுக்கும் ஹ்ருதய பூர்வமாய் வந்தனமளித்து, இப்புஸ்தகத்தை ஶ்ரீ வல்லீ தேவஸேநா ஸமேத ஶ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் பாதாரவிந்தங்களில் ஸாஷ்டாங்க நமஸ்கார பூர்வமாய் ஸமர்ப்பிக்கின்றேன்.

மஹான்கள் இதிலுள்ள எவ்வித குற்றங்குறைகளையுங் கொள்ளாது ஶ்ரீ குஹஸ்வாமியின் குணகணங்களென்று பாராட்டுவதுடன், இனிவரும் பதிப்பு குற்றமற்று வெளிப்படும் பொருட்டு அவைகளைக்காட்டித் திருத்திக்கொடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ப. ராமஸ்வாமி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீமதே குமாரஸ்வாமிநே நம:

॥ ஸ்ரீ ஸத்யாசல க்ஷேத்ர மாஹாத்ம்ய விஷய ஸூசிகா ॥

ஸத்யாசலமென்னும் திருப்பரங்குன்ற க்ஷேத்ர மாகாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களின் குறிப்பு:-

1. முதலாவது அத்யாயம்:-

ஸாக்ஷாத் பரமேச்வரர் பார்வதிதேவியாருக்கு உபதேசித் தருளிய ஆறெழுத்து மந்திரத்தின் லக்ஷணத்தை, தாயார் மடிமீதமர்ந்திருந்த பாலஸுப்ரஹ்மண்யர் க்ரஹித்துக்கொண்டு, தம் பிதாவாகிய பரமசிவனுக்கு ப்ரணவத்தின் பொருளைப் பின்னர் உபதேசித்தமையால் "குமரகுரு" என்னும் திருநாமம் பெற்ற விவரம் கூறுகின்றது.

2. இரண்டாவது அத்யாயம்:-

க்ஷேத்ரோத்பத்தி; தீர்த்தமகிமை; குமார ஸ்வாமி தவம்புரிதல்; பரமேச்வரன் ஸத்யேச்வரர் என்னும் திருநாமம்பூண்டு குமாரஸ்வாமிக்கு ப்ரஸந்நராய் அநுக்ரஹித்தல்; பிதாவுக்கு மந்த்ரோபதேசம் செய்ததால் குமாரஸ்வாமிக் கேற்பட்ட தோஷ நிவர்த்தி; ப்ரஹ்மதேவரால் நடத்திவைக்கப்பட்ட புஷ்யோத்ஸவ மஹிமை, இவ்விவரங்கள் கூறப்படுகின்றன.

3. மூன்றாவது அத்யாயம்:-

காம்பில்ய தேசாதிபதியான சிபிசக்ரவர்த்தியானவர், காசி முதல் ஸேதுபர்யந்தம் தீர்த்தயாத்ரை செய்து வருங்கால் ஸத்யாசல க்ஷேத்ரத்தை அடைந்ததும் அங்கு ஏற்பட்ட ஆகாசவாணியைக் கேட்டு கௌதமமாமுனிவரால் விதிக்கப்பட்ட தர்மாநுஷ்டானம் செய்து, காச்மீரதேசத்திலிருந்து ஐந்நூறு ப்ராஹ்மணர்களை ரதத்திலேற்றித் தருவித்து அவர்களுக்கு க்ருஹதானம் செய்யும்பொழுது ஒருவர் குறையக்கண்டு மன்னவன் மனம் வருந்துங்கால், ஸாக்ஷாத் பரமசிவன் ப்ராஹ்மண வேஷம் தரித்து "ஸத்யாசலாதீசர்" என்னும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருநாமம் பூண்டு, மனைவி மக்களுடன் சிபிசக்ரவர்த்தி முன் தோன்றி க்ருஹதானம் பெற்று சக்ரவர்த்தியை ஆசீர்வதித்த விவரம் கூறுகின்றது.

4. நான்காவது அத்யாயம்:-

தைவத்யுதி முனிவர் காலவமகரிஷிக்கு ஸத்யாசல க்ஷேத்ரத்தின் மாகாத்ம்யத்தை எடுத்துரைத்தல்; கல்பக விநாயகர் உற்பத்தி; ப்ரஹ்மதேவர் ஸரஸ்வதியை மணம் புரிந்து ஸ்ருஷ்டி கர்த்ருத்வமடைதல்; அவர் கல்யாணத்திற்கு வந்த மகாவிஷ்ணு "வித்ருமாஸ்ய"ரென்னும் திருநாமத்துடன் ஈச்வர ஸந்நிதானத்தில் மேற்கு முகமாய் வீற்றிருத்தல்; சாமுண்டியென்னும் துர்காதேவி தவம் புரிந்து மஹிஷாஸுரனை வதஞ்செய்து ப்ரதாந தேவதையாய் வடக்கு முகமாய் வீற்றிருத்தல்; திராவிட அரசனாகிய "கோவிதாரத்வஜ"னுக்கு அகஸ்திய மகரிஷியின் சிஷ்யரான "ப்ரஹ்மிஷ்ட" ராலேற்பட்ட சாபமாகிய வெண்குஷ்டம் நிவர்த்தியானது, முதலிய விவரங்கள் கூறப்படுகின்றன.

5. ஐந்தாவது அத்யாயம்:-

ஸத்யாசல க்ஷேத்ரத்தில் ஒன்பது தீர்த்தங்களுண்டான விவரமும், அவைகளின் வைபவங்களும், அதில் தபோதனர்களான அகஸ்த்யாதி முநீச்வரர்கள் வாஸமும், கிரிப்ரதக்ஷிண (மலைப்ராகார)த்தின் மகிமையும், கார்த்திகை ஸோமவார மகிமையும் கூறப்படுகின்றன.

6. ஆறாவது அத்யாயம்:-

வஸிஷ்ட மாமுனிவர் உத்தரவின்படி ஹரிச்சந்த்ரமகாராஜன் தீர்த்தாடனம் செய்யும்பொழுது வ்ருத்தாசலத்தில் ரோமசமுனிவரைத் தரிசித்து அவரால் ஸத்யவ்ருதம் உபதேசிக்கப்பெற்றுப் பின் ஸத்யாசலத்தில் கௌதமமுனிவரைத் தரிசித்து, அவரநுக்ரஹித்தபடி ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஸ்வாமியை அபிஷேக நிவேதநாதிகளால் பூஜை செய்து நமஸ்கரித்து, மண்டபங்கள், ப்ரகாரங்கள், திருமதில்கள்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோபுரங்கள் முதலியவற்றுடன் ஸ்வாமிக்குத் திருக்கோயில் கட்டுவித்து, மகாரதமும் நிர்மாணம் செய்வித்து, சிவத் விஜர்களால் பூஜைகள் நடப்பித்து, தைமாஸம் சுக்லபக்ஷம் உத்திரட்டாதி நக்ஷத்ரத்தன்று மஹோத்ஸவம் ஆரம்பித்து ஸகல வைபவங்களுடனும் ஸ்வாமியை எழுந்தருளச்செய்து, புனர்வஸு நக்ஷத்ரத்தன்று ரதோத்ஸவமும், புஷ்ய நக்ஷத்ரத்தில் தீர்த்தோத்ஸவமும் நடத்தி வைத்து, குஹஸ்வாமிக்கு விலையுயர்ந்த திருவாபரணங்கள் அளித்த விவரமும், அவர் ஸத்யதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து ஸத்யவ்ருதம் த்ருடமாகப்பெற்ற விபரமும்; மாகஸ்நாந மகிமையும்; தாரகமந்த்ரோபதேச ப்ரபாவமும்; ஸ்ரீ ராமபிரான் தரிசன வரலாறும்; மற்றும் க்ஷேத்ர மாகான்ம்யமும் கூறப்படுகின்றன.

7. ஏழாவது அத்யாயம்:-

ஹாலாஸ்ய க்ஷேத்ரத்திலிருந்த சங்கப்புலவர் தலைவரான நக்கீரகவி தினந்தோறும் திருப்பரங்குன்றத்திற்கு வந்து சரவணப்பொய்கையில் நீராடி கிரிவலம்வந்து, கல்விச் செருக்கால் முருகக்கடவுளைத் தரிசியாது மதுரைக்குத் திரும்பியதால் சிக்ஷிக்கப்பட்டு அகங்காரம் நீங்கி குஹஸ்வாமியை ப்ரார்த்திக்க, ப்ரபு ப்ரஸந்நராய் நக்கீரருக்கு அநுக்ரஹித்து, கங்காஸ்நாநம் செய்ய வேண்டுமென்று அவர் பிரார்த்திக்க, குஹஸ்வாமியின் ஆஞ்ஞைப்படி மலையின் உச்சியில் பாதாளகங்கை ப்ரவஹித்த விவரங்கள் கூறப்படுகின்றன.

8. எட்டாவது அத்யாயம்:-

அவ்விதம் மலையின் உச்சியில் ப்ரவஹித்த பாதாளகங்கையில் ஸ்கந்தமூர்த்தி ஸ்நாநம் செய்து, நக்கீரரையும் வீரபாகு முதலிய கணநாயகர்களையும், மற்ற தேவர் முனிவர்களையும் ஸ்நாநம் செய்ய விடை கொடுத்து மறைந்தது; க்ருத்திகா ஸோமவார மகிமையைக் கேட்டு, தேவர்கள் மகரிஷிகள் சக்ரவர்த்திகள் எல்லோரும் அன்று வந்து அந்த பாதாள கங்கையில் ஸ்நாநஞ்செய்து, தங்களால் இயன்ற தானங்கள் கொடுத்து,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முருகனைத் தரிசித்தது; ப்ரஹ்ம தேவரிடமிருந்து க்ஷேத்ரமகிமையைக் கேட்ட நாரதமா முனிவர் ஸத்யாசல (திருப்பரங்குன்ற)த்தை அடைந்து முருகபிரானைத் தரிசித்து அக்கடவுள் கைவல்யப்பொருளை உபதேசித்தருளப்பெற்று அவர் ஸமீபத்திலேயே இருந்தது; இத்யாதி விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

9. ஒன்பதாவது அத்யாயம்:-

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யப்பெருமான் அகஸ்த்யமாமுனிவருக்கும் நாரதமாமுனிவருக்கும் அநுக்ரஹித்த ப்ரகாரம், தத்வஸ்வரூபங்களை நந்திகேச்வரர் ஸநத்குமார மகரிஷிக்கு உபதேசித்த விவரம் கூறுகின்றது.

10. பத்தாவது அத்யாயம்:-

"விச்வாசீ" என்னும் அப்ஸரஸ்த்ரீக்கேற்பட்ட நாரதமா முனிவரின் சாபவிமோசனம் கிடைத்த விவரமும் ; மகாபக்திமானாகிய "ராஜசேகரன்" என்னும் காஞ்சீபுரத்தரசன் தாந்த்ரிக மதாசாரத்தைக் கைக்கொண்டதால் அவனுக்குக்கிடைத்த நரகவாதனையும் பிசாசு ஜன்மமும் தீரப்பெற்ற விவரமும் கூறப்படுகின்றன.

11. பதினோராவது அத்யாயம்:-

தேஜோரூபியாய் நின்ற ஸாக்ஷாத் பரமசிவன் முடிதேடிப் பொய்ம்மொழி புகன்ற ப்ரஹ்ம தேவருக்கேற்பட்ட சாபவிமோசனம், அவர் திருப்பரங்குன்றத்திற்கு வந்து மூன்று அச்வமேத யாகமும் கோடிலிங்க ப்ரதிஷ்டையும் செய்ததாற்பெற்று, கார்த்திகை மாஸம் க்ருத்திகா நக்ஷத்ரத்தன்று குஹஸ்வாமிக்கு ரதோத்ஸவம் நடத்திவைத்து, பசுபதியால் அநுக்ரஹிக்கப்பட்ட விவரமும், க்ஷேத்ர மகிமையும், க்ருத்திகாவ்ருத அநுஷ்டான க்ரமமும், அதன் பலனும் கூறப்படுகின்றன.

12. பன்னிரெண்டாவது அத்யாயம்:-

ஷண்முகநாதன், சூரபத்மன் முதலிய அஸுரர்களை ஸம்ஹரித்துவிட்டு வந்து திருச்செந்தூரில் தங்கிச் சற்று சிரமபரிகாரஞ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்துகொண்டு, பின் திருப்பரங்குன்றத்திற்கெழுந்தருளுங்கால், அரக்கர் இடுக்கண்களைந்து தங்களுக்கு க்ஷேமம் விளைவிக்கப் பெற்ற மகாவிஷ்ணுவாதி தேவர்கள், தாங்களடைந்த பரமஸுகத்திற்குக் கைம்மாறாகத் தேவேந்த்ரனுடைய கன்னிகையான தேவஸேநாம்பிகையை ஸ்ரீ பாலஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்குப் பாணிக்ரஹணம் செய்துகொடுக்க நிச்சயித்து, திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ குமார ஸ்வாமிக்கும் தேவஸேநாதேவிக்கும் திருக்கல்யாண மஹோத்ஸவம் நடத்திவைத்து, தேவர்களும் முநிவர்களும் தரிசித்தானந்தக் கடலில் மூழ்கினர். பின் எல்லோரும் அவ்விடத்திலுள்ள புண்யதீர்த்தங்களில் ஸ்நானம்செய்து ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஸ்வாமியின் க்ருபாகடாக்ஷத்திற்குப் பாத்ரராய், பரிசு பெற்று, பக்தானுக்ரஹம் செய்யும்படி பகவானைப் பிரார்த்தித்து, தங்கள் ஸ்வ ஸ்தானத்திற்கு ஏகினரென்ற விவரம் கூறுகின்றது.

ஓம். தத். ஸத்.

சுபமஸ்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஓம் ஶரவணபவாய நம: ||

ஸத்யாசல க்ஷேத்ரமென்ற திருப்பரங்குன்றத்திலுள்ள

விசேஷ தீர்த்தங்கள் 9

(அத்-5. ச்லோ 3½ - 20½, 108-111)

1. **"ஸ்வாமி புஷ்கரிணி"** – மலைக்கு ஈசானதிக்கில் தபஸ்புரிய ஆரம்பிக்கும் காலத்தில் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியால் உண்டாக்கப்பட்டது. இந்த தீர்த்தத்திற்குச் சரவணப் பொய்கை எனப் பெயர் வழங்குகின்றது. இதற்கு அநேகம் திருநாமங்களுள:–

(அத்-2. ச்லோ 29 - 31)

அவையாவன :–

1.	ஞானதீர்த்தம்	9.	குமாரஸரஸ்
2.	ஸர்வ தீர்த்தம்	10.	பக்தி தீர்த்தம்
3.	குஹகங்கை	11.	முக்தி தீர்த்தம்
4.	ஸத்ய கங்கை	12.	பரதீர்த்தம்
5.	சிவகங்கை	13.	பராத்பர தீர்த்தம்
6.	சிவப்ரதை	14.	சத்ருக்ன தீர்த்தம்
7.	குமார பத்மினி	15.	ஸர்வரோக நிவாரண தீர்த்தம்
8.	ஶ்ரீதை	16.	ஸர்வதீர்த்தோத்தமோத்தமம்

2. **"ஸத்ய தீர்த்தம்"** – மலைக்கு வடக்கில் தண்டபாணி-கோயிலுள்ளது. ஸத்யம், ஞானம், ஸுகம் இவைகளைக் கொடுக்கக் கூடியது. ஹரிச்சந்த்ர மகாராஜாவால் ஸேவிக்கப்பட்டு அவருக்கு ஸத்ய வ்ரதத்தை த்ருடம் செய்வித்தது.

3. **"பாதாள கங்கை"** – மலையின் உச்சியில் தென் பாகத்தில் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியால் சங்கப்புலவர் தலைவரான நக்கீர கவியின்பொருட்டு தருவிக்கப்பட்டது.

இந்த மூன்று தீர்த்தங்களும் மிகவும் உத்தமமானவை. இவைகளில் ஒருதரம் ஸ்நானம் செய்தால் 24 க்ருச்ரபலனுண்டாகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அத் 12-சுலோ 97-100) மற்ற தீர்த்தங்களில் ஸ்நாநம் ஒருதரம் செய்தால், 3 க்ருச்ரபலனுண்டாகிறது.

4. "புத்ர தீர்த்தம்" - மலைக்கு வாயுமூலையிலுள்ளது. இதற்கு "சோத்துக்கடைக்கிணறு" எனப்பெயர் வழங்குகின்றது.

5. "புஷ்பமார்தவ தீர்த்தம்" - மலைக்கு ஈசான திக்கிலுள்ளது. அகல்யைக்கு நிஜ சரீரத்தைக் கொடுத்தது.

6. "வைத்ய ஸாரம்" - புஷ்பமார்தவ தீர்த்தத்திற்கு மேற்கிலுள்ளது; ஸகல ரோகங்களையும் நிவர்த்தி செய்வது; சந்த்ரனுக்கு க்ஷயரோகத்தையும் அக்னிக்கு த்வந்த்ய ரோகத்தையும் தீர்த்தது.

7. "ஹிமமார்தவ தீர்த்தம்" - மலைக்கு ஆக்நேய திக்கிலுள்ளது; ஈசன் திருவடி தேடிய திருமால் நீராடி தாப சாந்தி அடைந்தது.

3 முதல் 7 வரை உள்ள இந்த ஐந்து தீர்த்தங்களும் பர்வதத்துடன் வந்தன. மயில் வாகனனாலவைகள் பெயரிடப்பட்டன.

8. "க்ஷீரகுண்டம்" - மலைக்கு ஆக்நேயத்திலுள்ளது. காமதேனு லிங்கவடிவான மலையிற் சொரிந்த பால் நிர்மால்யம் தங்கியது.

9. "ப்ரஹ்ம தீர்த்தம்" - மலைக்கு வடக்கில் துர்க்காதேவியின் இடது பக்கமாக வடமேற்கே நானூறு வில்லடி தூரத்தில் ப்ரஹ்மாவின் தண்டத்தினாலுண்டாக்கப்பட்டது. ஸர்வரோகங்களையும் நாசம் செய்து இஷ்டஸித்திகொடுப்பது. இதற்கு ப்ரஹ்மகுண்ட மென்றும், ப்ரஹ்மகூப மென்றும் பெயருண்டு. இப்பொழுது சன்னாசிக்கிணறு எனப்பெயர் வழங்கி வருகின்றது. இந்தத் தீர்த்தமானது, "ஸித்ததீர்த்தம்" "ஞானதீர்த்தம்" எனவும் திருநாமம் பெற்றுள்ளது.

பின்னுமுள்ள தீர்த்தங்கள் (அத். 12, சுலோ-91-96)

10. "பாண்டவ தீர்த்தம்" - பாண்டவர்களா லுண்டாக்கப்பட்டது. மலையின் வாயு மூலையிலுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

11. "கல்யாண தீர்த்தம்" – மலைக்கு வடக்கில், திருக்கல்யாண காலத்தில், ஸ்நாநார்த்தம் குஹஸ்வாமியாலுண்டாக்கப்பட்டது.

12. "மண்டல தீர்த்தம்" – மலைக்கு வடக்கே, பரமசிவனது ஜடாமண்டலத்திலிருந் துண்டானது.

13. "ஸித்த தீர்த்தம்" – மலைக்கு ஈசான திக்கிலுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

𑌶𑍍𑌰𑍀 𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀 𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌯 𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍 𑌪𑌰𑌾𑌚𑌲 (𑌸𑌤𑍍𑌯𑌗𑌿𑌰𑌿) 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍 ॥

𑌶𑍍𑌰𑍀 𑌗𑌣𑍇𑌶𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌶𑌶𑌿𑌵𑌰𑍍𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌘𑍍𑌨𑍋𑌪𑌶𑌾𑌨𑍍𑌤𑌯𑍇 ॥

𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌾𑌮𑌲 𑌸𑌮𑌰𑌸𑌮𑌯𑍇𑌕𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌕𑌹𑍍𑌰𑌾𑌸𑌕𑌾𑌮𑍇
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑍇 𑌸𑌂𑌕𑍃𑌤𑌿𑌕𑌾𑌰𑌣𑍇 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌯𑌕𑍇 𑌚 ।
𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌜𑌗𑌤𑌿𑌵𑌿𑌜𑌯𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌘𑍍𑌨𑍋𑌪𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑍈
𑌹𑍇𑌰𑌮𑍍𑌬 𑌕𑌂 𑌭𑌜𑌤 𑌸𑌤𑌤𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌵𑌿𑌨𑌾𑌯𑌕𑍈𑌰𑍍𑌦𑍈𑌤𑍍𑌯𑍈𑌃 ॥

𑌦𑍇𑌵𑌸𑍍𑌵𑌰𑌂 𑌵𑌰𑌂 𑌤𑌪𑌮𑌾𑌹𑌿𑌮𑌜𑍍𑌯𑌾𑌘𑌵𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌹𑌿𑌤𑌾𑌨𑌨𑌾𑌯𑌾𑌮𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥

𑌕𑌨𑌕𑌾𑌨𑌨𑌦𑍇𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌬𑌨𑌿𑌯𑌿𑌮𑍍𑌭𑌤𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌕𑌂𑌬𑌿𑌕𑌾𑌪𑌤𑌿𑌶𑍀𑌶𑌾𑌨𑌮𑌨𑌿𑌶𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑌰𑌾𑌚𑌲𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌸𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌿𑌨𑍀𑌮𑌪𑌿 ।
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌦𑍇𑌵𑌯𑌾𑌨𑌾𑌮𑍍𑌬𑌾𑌂 𑌚 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌸𑌤𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌧𑌿𑌪𑌮𑍍 ॥

𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑌰𑍍𑌦𑍇𑌵𑌾𑌹𑍍𑌯𑌾𑌂 𑌯𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌸𑌰𑍍𑌵𑌮𑌙𑍍𑌗𑌲𑌾 ।
𑌤𑌯𑍋𑌰𑌸𑍍𑌤𑍁 𑌶𑌰𑌣𑌾𑌤𑍍 𑌪𑌂𑌸𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋 𑌜𑌯𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌉𑌮𑌾𑌕𑍋𑌮𑌲𑌹𑌸𑍍𑌤𑌾𑌬𑍍𑌜 𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑌲𑌲𑌾𑌟𑌿𑌕𑌮𑍍 ।
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌸𑍍𑌰𑌜𑌮𑍍 ॥

𑌷𑌡𑌾𑌨𑌨𑌂 𑌕𑍁𑌙𑍍𑌕𑍁𑌮𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌂
𑌮𑌹𑌾𑌮𑌤𑌿𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌯𑍂𑌰𑌵𑌾𑌹𑌨𑌮𑍍 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑍂𑌨𑍁𑌂 𑌸𑍁𑌰𑌸𑍈𑌨𑍍𑌯𑌨𑌾𑌥𑌮𑍍
𑌗𑍁𑌹𑌂 𑌸𑌦𑌾𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

𑌸𑍂𑌤 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌮𑍁𑌨𑌯𑍋𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑍁𑌗𑌾𑌵𑌰𑍍𑌤𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑍋 𑌮𑍁𑌨𑌿𑌃 ।
𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌵𑌤𑍍𑌯𑌾𑌃 𑌸𑍁𑌤𑍋 𑌮𑌹𑌾𑌨𑍍 ॥

𑌶𑌿𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌧𑍃𑌤𑍍𑌵𑌾 𑌲𑍋𑌕𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌹𑍇𑌤𑌵𑍇 ।
𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌚𑌤𑍁𑌰𑍋𑌵𑍇𑌦𑌾𑌨𑍃𑌗𑌾𑌦𑍀𑌨𑍍 𑌬𑌾𑌦𑌰𑌾𑌯𑌣𑌃 ॥

𑌪𑍈𑌲𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌭𑌜𑍍𑌯𑌾𑌦𑍌 𑌪𑍃𑌥𑌕𑍍𑌪𑍃𑌥𑌗𑌸𑌙𑍍𑌕𑌰𑌮𑍍 ।
𑌦𑌶𑌧𑌾𑌚𑌾𑌷𑍍𑌟𑌧𑌾 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌿 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃 ॥

𑌮𑌹𑍍𑌯𑌂 𑌕𑌰𑍁𑌣𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌦𑌾𑌦𑍍 𑌗𑍁𑌰𑍁𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌵𑌤𑍀𑌸𑍁𑌤𑌃 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌂 𑌪𑌾𑌦𑍍𑌮𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌚 𑌶𑍈𑌵𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌤𑌥𑌾 ॥

𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌂 𑌨𑌾𑌰𑌦𑍀𑌯𑌂 𑌚 𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌮𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍 ।
𑌆𑌗𑍍𑌨𑍇𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍈𑌵𑌰𑍍𑌤𑌂 𑌲𑍈𑌙𑍍𑌗𑍍𑌯𑌂 𑌵𑌾𑌰𑌾𑌹𑌮𑍇𑌵 𑌚 ॥

𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑌂 𑌚 𑌵𑌾𑌮𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌯𑌂 𑌕𑍌𑌰𑍍𑌮𑌨𑍍𑌤𑍁 𑌗𑌾𑌰𑍁𑌡𑌮𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌂 𑌚𑍇𑌤𑌿 𑌪𑍁𑌣𑍍𑌯𑍋𑌯𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌃 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌶𑍈𑌵𑌾𑌨𑌿 𑌶𑍈𑌵𑌂 𑌚 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ।
𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌂 𑌤𑌥𑌾 𑌲𑍈𑌙𑍍𑌗𑌂 𑌵𑌾𑌰𑌾𑌹𑌂 𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑌮𑍇𑌵 𑌚 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌯𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌤𑌥𑌾 𑌕𑍌𑌰𑍍𑌮𑌂 𑌵𑌾𑌮𑌨𑌂 𑌚 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌂 𑌚 𑌦𑌶𑍈𑌤𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌲𑌕𑍍𑌷𑌾𑌨𑌿 𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌯𑌾 ॥

𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯𑍈𑌵 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌯𑌾 𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍇𑌨 𑌚 ॥

𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌶𑌿𑌵𑌮𑍇𑌤𑌾𑌨𑌿 𑌶𑌿𑌵𑌸𑍍𑌤𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌤𑍇 ।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌹𑌿 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌤𑌚𑌤𑍍𑌤𑌥𑌾 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥

𑌨𑌾𑌰𑌦𑍀𑌯 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌚 𑌗𑌾𑌰𑍁𑌡𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌂 𑌪𑌾𑌦𑍍𑌮𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌦𑍍𑌵𑍇 𑌅𑌗𑍍𑌨𑍇𑌰𑌾𑌗𑍍𑌨𑍇𑌯𑌮𑍇𑌕𑌕𑌮𑍍 ॥

𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍈𑌵𑌰𑍍𑌤𑌂 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌮𑍀𑌶𑌸𑍍𑌯𑌤𑌮𑍍 ॥

𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌨𑍀𑌶 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌸𑍍𑌸𑌾𑌮𑍍𑌯 𑌪𑍁𑌰𑌾𑌣𑌿 𑌵𑍈 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑍋𑌽𑌧𑌿𑌕𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌮𑍍 ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌹𑍇𑌶𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇 𑌪𑍁𑌰𑌾𑌣𑌕𑍇 ।
𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌮𑌧𑌿𑌕𑌂 𑌦𑍈𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌜𑌗𑌤𑌾𑌂𑌪𑌤𑌿𑌮𑍍 ॥

𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌦𑌿𑌨𑌾𑌧𑍀𑌶𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌾𑌹𑍍𑌨-𑌸𑌾𑌯𑌾𑌹𑍍𑌨-𑌸𑌮𑌯𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑌿 𑌹𑌿 ॥

𑌅𑌗𑍍𑌨𑌿𑌂 𑌵𑍈𑌶𑍍𑌵𑌾𑌨𑌰𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ।
𑌆𑌗𑍍𑌨𑍇𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍈𑌵𑌰𑍍𑌤𑌮𑌪𑌿 𑌤𑍌 𑌜𑌗𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑍌 ॥

𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍌 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌵𑌦𑌤𑍋𑌸𑍍𑌯 𑌤𑌨𑍂 𑌉𑌭𑍇 ।
𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑌃 ॥

𑌯𑌥𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌧𑌿𑌕. 𑌉𑌮𑌾𑌪𑌤𑌿𑌃 ।
𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌪𑌤𑌿𑌃 𑌪𑌾𑌶𑌵𑌿𑌮𑍋𑌚𑌕𑌃 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌪𑌾𑌪𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌾𑌪𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑌾𑌪𑌜𑌾𑌤𑌿𑌪𑌾𑌤𑌕𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 ।
𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌪𑌾𑌵𑌨𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌪𑌾𑌵𑌨𑌮𑍍 ॥

𑌸𑌰𑍍𑌵𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌮𑌯𑍋𑌪𑍇𑌤 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌭𑍁𑌃 ।
𑌕𑍃𑌮𑌿𑌕𑍀𑌟𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍇𑌵𑌿𑌤𑌂 𑌯𑌂 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌹𑌿 ॥

𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌿 𑌶𑌿𑌵𑌂 𑌸𑌾𑌂𑌬𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌬𑌕𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑍈𑌶𑍍𑌚𑍈𑌤𑍈𑌸𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌮𑍍 ॥

𑌤𑌦𑍍𑌵𑍀𑌕𑍍𑌷𑌂 𑌮𑍁𑌨𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌃 𑌶𑍈𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌗𑌮𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌂 𑌬𑌹𑍁𑌭𑌿𑌃 𑌸𑌮𑌾𑌦𑍃𑌤𑌮𑍍 ॥

𑌤𑌤𑍍𑌰𑍈𑌕𑌾𑌦𑌶𑌮𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌶𑌲 𑌪𑌾𑌪𑌹𑌰-𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰-𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌮𑍍𑌮𑌤𑌮𑍍 ॥

𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑍈𑌕-𑌰𑍂𑌪𑌸𑍍𑌯-𑌸𑌮𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌸𑍍𑌯-𑌵𑍈𑌭𑌵𑌮𑍍 ।
𑌸𑌨𑍍𑌦𑌰𑍍𑌭𑌾𑌣𑌾𑌂 𑌪𑌰𑌂 𑌪𑌾𑌵𑌨𑍀𑌯𑌂 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர்
திருக்கோவிலின் முன் காக்ஷி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒ৺ வாஜமாவெ நஃ

॥ ஸ்ரீ ஸத்யகிரி மாஹாத்ம்யம் ப்ராரம்யதெ ॥

ஸ்ரீ ஸத்யகிரி மாஹாத்ம்யம்

என்னும்

திருப்பரங்குன்றம் ஸ்தல புராணம்

அத ப்ரதமோऽத்யாய:

(ருஷய:) ஸநத்குமார உவாச -

ஹமவந் நதிகெஶாந ஶிவஹக்தி வராயண ।
கூாரணெ கூயம் வவூம் தவ:சரிதஜூதஜ ॥

கூஸிம்ஹூமெ விஶெஷெண கியதூம் ச ஹூஹூெந ச ।
ஸவஜ்ஞோ ஹமவாந் ஸவூம் வெதிவுதாகஜூதஜ ॥

கூயாநாவிஜிதம் கிஞிசு திரஷொகெஷு விஜஹெ ।
தஹாசு ஹவகம் வரஜூாஜ ஶிஷ்டாஹிகூம் ஹூஹஸ ச ॥

தெந ஸவூம் தவவாா வெராகதஜெகாகதொ ஜெநெ ।
ஜோகாநாஜவகாராய கூாம் வாஹஸுதஜநஜ ॥

தவவெவகவெவாஜஹம் ஶிஷ்டாவெ ஹகிஜா கூயி ।
தஜளவெண வரஜூாஜ ஜயாம்கூா கூவாநிமெ ॥

ஹஹஸஜவி வக்ஷ்யஜி ஸாயவொ ஜொகாக்ஷகா: ।
கூஜா தவஷொ வரதம் யயாவஜநவஜவுஶ: ॥

வகுவஜவநாஶாய ஜொகொவகூதி காஜயா ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
சிவமயம்

தமிழ் உரை

முதலாவது அத்யாயம்

(உரை) ஸநத்குமாரமுனிவர் அருளுவதாவது :-

"ஷட்குண ஸம்பன்னராயும் சிறந்த சிவபக்தராயுமுள்ள நந்திகேச்வரரே! ஸர்வ ப்ராணிகளிடையே ஹ்ருதய குகையின் கண்ணே வஸிப்பவரும், குமரர் எனப் பெயர் பெற்றவருமான ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யமூர்த்தியால் முன் ஓர் காலத்தில் எதைக் கருதி எவ்விடத்தில் எவ்வாறு மேன்மையான தபஸ் செய்யப்பட்டது? தாங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்களாகையால் ஆச்சர்யமாயுள்ள விருத்தாந்தங்களனைத்தையுமறிவீர்கள்; மூவுலகங்களிலும் தங்களாலறியப்படாததொன்றுமில்லை; மேலும் தாங்கள் ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்கு சிஷ்யர்களாயிருக்கின்றீர்கள்; ஆகையால் தங்களைக் கேட்கின்றேன்," (என்று ஸநத்குமார முனிவர் நந்திகேச்வரரைப் பார்த்து),

"முனிவரே! முன் ஒரு காலத்திற் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினால் தங்களை நிமித்தமாகக்கொண்டு உலகத்தின் நன்மையைக் கருதி ரஹஸ்யமாய் எல்லாம் கூறப்பட்டுள்ளன. தாங்கள் எப்படி ஸுப்ரஹ்மண்யமூர்த்தியின் பக்தியுள்ள சிஷ்யரோ, அதுபோல யானும் தங்களுக்குச் சிஷ்யன் அல்லவா! கருணாநிதியே! அந்தப் பெருமையினாற் கேட்கின்றேன்; கிருபை செய்யவேண்டும். உலகத்தை ரக்ஷிக்கின்றவர்களாகிய ஸாது ஜனங்கள் ரஹஸ்யமாகிய விஷயங்களையுங்கூட தமது சிஷ்யர்களுக்குபதேசிக்கின்றார்கள்! அல்லவா! ஆகையால் எனது பாபம் நிவர்த்தியாகும் பொருட்டும், உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டும் ஸுப்ரஹ்மண்ய பகவான் செய்த தபஸினுடைய விதியை க்ரமமாக உள்ளபடி சொல்லியருளல் வேண்டும்", என்று ப்ரார்த்தித்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸூத உவாச

ஐத்யுக்தோ முநிநாநந்தீ ஸத்திஸாவேந ஸாவிதঃ ।
யஸ்யவாச குமாரஸ்ய தவஸோ வருத்தமாஸ்ராக ॥

தஸ்ய க்யஷிஷ்யாஸி நைமிஸாரண்யவாஸிநঃ ।
ஸஜ்ஹேண க்யாம் வக்ஷ்யாம் ஸவாவாவபூணாஸிநீம் ॥
ஸவாஜ்ஞொகொவகாராகூம் ஷைவாத்து ஸூரிதம் த்விஜாঃ ॥

வரா கைவ்ஞாஸஸிவமெ ஸவைஷைவ நமஸ்ரதெ ।
ஸவாருஜ்ஞாரஸொஹாஸெ்ய நாநா முநிமணாவரதெ ॥

சுவ்லரொமணஸஜ்ஞெணா விமாநைரஹிரஜ்ஜிதெ ।
கமாசிஜ்ஜமயெ ஷெவொ ஹமவாஜீமுஞொஹிதঃ ॥

வாவாதஸ்ரா ஸஹிதஸ்ஸ்ஸம்ஹঃ க்யாஜ்ஞாக்யநியঃ ।
ஶாக்ஷாயணீ க்யாம் ஶ்ருகூா உநঃ வுஹூாமகாரிணீம் ॥

நமஸ்ரதஸ்ய மராம் ஸக்தஸ்ரா [1]மஹாஸத்திஸமந்விதா ।
ஐஷம் வெராவாச ஷெவெஶம் குதஜ்ஞாநசிகீஷயா ॥

ஸூதமுனிவர் அருளுவதாவது:-

நைமிசாரண்ய வாஸிகளே! இவ்விதம் ஸநத்குமாரராற் கேட்கப்பட்டு உண்மையான பக்தியினாற் பாவிக்கப்பட்ட நந்திகேச்வரர், அன்பினோடு ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினுடைய எந்தத் தபஸின் லக்ஷணங்களைக் கூறினாரோ, அந்தப் பரிசுத்தமானதும் பாவங்களனைத்தையும் நாசஞ்செய்வதுமாகிய சரித்திரத்தை இப்பொழுது சுருக்கமாக உரைக்கின்றேன்.

முனிவர்களே ! ஸர்வ உலகங்களுக்கும் உபகாரமாகத் தெய்வத்தால் ஒரு சங்கதி தெரிவிக்கப்பட்டது; அதாவது, முன்னர்

[1] மஹாவிநய ஸம்யுதா - பாடபேதம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவர்களெல்லோராலும் வணங்கப்பெற்றதும், அநேக மஹரிஷிக் கூட்டங்களாற் சூழப்பட்டதும், ஸர்வாலங்காரங்களினாலும் அழகு பொருந்தியதும், அப்ஸரஸ்களால் நிறைந்ததும், விமானங்களாற் காந்திபெற்றதுமாகிய கைலாஸமலையின் கொடுமுடியில், ஒரு ஸமயத்தில் ஷட்குணைச்வர்ய ஸம்பன்னரும் விஷயத்தைக் கண்டத்திற் தரித்தவருமான சிவபெருமான் பார்வதிஸமேதராய் எழுந் தருளியிருக்கையில், ரஹஸ்யமாய் ஒரு கதையை திருவாய் மலர்ந் தருள ஆரம்பித்தனர். தாக்ஷாயணீ தேவியானவள் மனதுக்கு மிகவும் ஆனந்தத்தைத் தருகிற அந்தக் கதையைக் கேள்வியுற்று பக்தியினால் மிகுந்த வணக்கமுடையவளாய், குருவாகிய தேவேசரை நமஸ்கரித்து ஆன்மஞானமடைய விருப்பமுற்றவளாய் பின் வருமாறு கேட்க ஆரம்பித்தாள்.

ஸ்ரீ பார்வத்யுவாச -

ஶைவஶைவ [1]மஹாஶைவ ஸர்வஶைவ நமஸ்க்ருத ।
ஸர்வஜ்ஞ பரமேஶான ஸர்வலோகைகநாயக ॥

---

[1]ஸர்வஜ்ஞதாத்ருப்திரநாதிபோத:
ஸ்வதந்த்ரதா-நித்யமலுப்தஶக்தி:
அனந்தஶக்திஶ்ச விபோர்விதிஜ்ஞா:
ஷடாஹுரங்கானி மஹேஶ்வரஸ்ய ॥

ஸர்வஞ்ஞதை (முற்றறிவு), த்ருப்தி (வரம்பிலின்ப முடைமை), அநாதி போதம் (இயல்பாகவே பாசங்கள் நீங்கிநிற்றல்), ஸ்வதந்த்ரத்தை (தன்வய முடைமை), அலுப்த சக்தி (பேரருளுடைமை) அநந்த சக்தி (முடிவிலாற்றலுடைமை), என்னும் ஆறு, (சக்திகள்) குணங்கள் சிவபெருமானிடத்திற் பொருந்தியுள்ளன எனப் புராணம் கூறுவதால், சிவஸாம்யம் பெற்றவர்க்கு இக்குணங்களும் வெளிப்படும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑍁 𑌮𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌾 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌾 𑌶𑍁𑌭𑌾 ।
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇𑌨 [1]𑌷𑌡𑌰𑍍𑌣𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑌵 𑌶𑌙𑍍𑌕𑌰 ॥

𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌕𑌥𑌯 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌕𑍃𑌪𑌾 𑌯𑌦𑍍𑌯𑌸𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌮𑌯𑌿 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑍍𑌰𑌦𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌭𑍂𑌤𑌲𑍇 ॥

𑌇𑌦𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌭𑌵𑌤𑌾 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌪𑍃𑌷𑍍𑌟𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌮𑌯𑌾𑌨𑍈𑌵 𑌨𑌜𑌾𑌨𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ॥

𑌉𑌪𑌦𑍇𑌶𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑍋𑌯𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌤𑌵𑍇𑌶𑍍𑌵𑌰 ।
𑌆𑌵𑌶𑍍𑌯𑌕𑍇𑌨 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑌿𑌙𑍍𑌕𑌰𑌾 𑌤𑌵 𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 ॥

𑌸𑌮𑌯𑍋𑌯𑌦𑌿𑌦𑌾𑌨𑍀𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌂 𑌕𑍌𑌤𑍂𑌹𑌲𑌂 𑌹𑌿 𑌮𑍇 ।
𑌇𑌤𑌿 𑌪𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍁 [2]𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍁𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌯 𑌚𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌗𑍁𑌰𑍁𑌶𑍍𑌶𑌿𑌵𑌃 ।
𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌯𑌥𑌾𑌵𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑍈𑌭𑌵𑌮𑍍 ॥

---

[1] 𑌷𑌡𑌕𑍍𑌷𑌰𑌸𑍍𑌯 - 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍

[2] 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌮𑌗𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑍀𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑌶𑌸𑌶𑍍𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌯𑍋𑌶𑍍𑌚𑍈𑌵 𑌷𑌣𑍍𑌣𑌾𑌂 𑌭𑌗 𑌇𑌤𑍀𑌰𑌣𑌾 ॥

𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌲𑌯𑌂 𑌚𑍈𑌵 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌾𑌗𑌤𑌿𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ।
𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌸𑌵𑌾𑌚𑍍𑌯𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 ॥

ஸம்பூர்ணமான ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, ஸம்பத்து, ஞானம், வைராக்யம், இவ்வாறும் "பக" என்று சொல்லப்படுகின்றன. இவைகள் யாரிடத்தில் சேர்க்கையாயிருக்கின்றனவோ அவருக்கு "பகவான்" என்று பெயர்.

பூதங்களுடைய உற்பத்தி, நாசம், வரவு, போக்கு, வித்தை, அவித்தை, இவைகளை அறிந்தவராரோ அவர் பகவான் என்று சொல்லப்படுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

க்ருபாம் மயி மஹேஶானே ப்ரபன்னஜனவத்ஸல: |
உத்பத்தி [illegible] ||
ப்ரணவாத்யஸ்ய மந்த்ரஸ்ய ஷடக்ஷரவிஷயம் வத |
ப்ரோவாச ஸர்வலோகேஶ ஸர்வஸித்திப்ரதஸ்ய ச ||

ஸ்ரீபார்வதிதேவியார் அருளுவதாவது:-

"ஸமஸ்ததேவர்களாலும் வணங்கப்பெற்ற தேவாதி தேவரான மஹாதேவா! இப்பிறவிக் கடலினின்று கரையேற்றுவதாகிய தங்களுடைய பாதாரவிந்தங்களிலே அசைவற்றதும் பரிசுத்தமும் மங்களகரமுமாகிய பக்தியானது எப்பொழுதும் எனக்கு உண்டாகும்படி அருளுக. தங்களுக்கு அடியாள்மேற் க்ருபையிருப்பது மெய்யாயின், ப்ரணவத்தோடு கூடியதும் தங்களுக்கு உரியதுமாகிய ஆறெழுத்து மந்த்ரத்தினுடைய லக்ஷணங்களை இப்பொழுது எனக்குச் சொல்லி யருளவேண்டும். ஸர்வாந்தர்யாமியான சங்கரா பூவுலகில் ஸர்வஸித்திகளையும் அளிக்கத் தகுந்த இந்த மஹாமந்த்ரத்தினுடைய லக்ஷணமானது முன்னர்த் தங்களால் எனக்கு அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிறது; ஆனால் அது என்னால் கேட்கப்படவே இல்லை; அவ்வாறு கேட்கப்படாமையின் காரணமும் எனக்குப் புலப்படவில்லை; ஈச்வரா! இந்த மந்த்ரத்தை உபதேசித்துக் கொள்வதற்கு இதுவே ஸமயம்; எவ்விதத்திலும் தங்களுக்கு நான் அடிமையல்லவா? இது ஸமயம்; இந்த மந்த்ரத்தை ச்ரவணஞ் செய்வதற்கு எனக்கு மிகவும் ஆவலாக இருக்கிறது; ஆகையால், இதுவே தருணம்" எனத்தெரிவித்து வேண்டிக் கொண்டாள்.

இவ்வாறு தேவியினால் ப்ரார்த்திக்கப்படவே, ஸமஸ்த தேவ நாயகரும், ஸமஸ்த லோக குருவானவரும் ஸர்வலோக ரக்ஷகருமான சிவபெருமான், புன்னகைசெய்து தேவியினிடத்திற் கருணை கூர்ந்து குமாரஸ்வாமி தன் (தேவியின்) மடிமீது வீற்றிருக்கும் பொழுது, வேதங்களின் ஸாரமானதும், மிகவும் மேன்மை பொருந்தியதும், ப்ரணவத்தோடு கூடியதுமாகிய இவ்வாறெழுத்து மந்த்ரத்தின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கைலயங்கிரியில் குமரக்கடவுள் தேவியின்
மடிமீதிருக்கும்போது சிவபிரான் உமைக்கு ப்ரணவத்தோடு கூடிய
க்ஷடாக்ஷரத்தை உபதேசித்தல்.

பக்கம் – 18

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லக்ஷணத்தை ரஹஸ்யமாய், உற்பத்தி முதல் முடிவுபர்யந்தம் வியாக்யானத்துடன் விஸ்தாரமாகத்திருவாய்மலர்ந்தருளினர்.

ஶ்ரீ ஶிவ உவாச -

ஶ்ருணு தேவி ப்ரவக்ஷ்யாமி ஸ்கந்தஸ்யாஸ்ய ச வைபவம் ।
தவ புண்யவஶேநாஸ்ய ஸஞ்ஜாதா புத்திரீத்ருஶீ ॥

ஸப்தகோடிமஹாமந்த்ராஸ்தந்த்ராம்ஶாம்ஶஸம்பவா: ।
வேதாஸ்ஸாங்காஶ்ச சத்வாரஸ்ஸஷடங்கா: பதக்ரமா: ॥

உத்வாஹாஶ்சைவ தந்த்ரே ஸர்வா வை ஜீவகோடய: ।
சதுஷ்ஷஷ்டிகலாஶ்சைவ ஸர்வே மந்த்ராம்ஶஸம்பவா: ॥

அணோரணீயான்மந்த்ரஶ்ச மஹதோபி மஹத்தர: ।
அநேககோடிவர்ணைஶ்ச வ்யாப்யவ்யாப்துஶ்சைவ ஶக்யதே ॥

கிஞ்சித்வதஸ்யா வக்ஷ்யாமி ஜாயதே ச யதா மநு: ।
அஜ்ஞாநேந ஜகத்ஸர்வம் சராசரமிதம் ஶிவே ॥

ஶ்ரூயதே வை வாணிதஸ்ஸ யதா சாமுகீ ஸபா ।
விதிதே சைவ வ்ருத்தாந்தே ஸர்வவித்யாமயே மநள ॥

[1]அணிமாத்யாஶ்ச ஸித்யந்தி சார்வீ வச கிங்கரா: ।
ஸாவதாநமநா பூத்வா ஶ்ருணு ஸ்கந்தஸ்ய வைபவம் ॥

அகாரஶ்ச உகாரஶ்ச மகாரஶ்ச ததைவ ச ।
வர்ணத்ரய ஸ்வரூபேண மந்த்ர: ஷட: ப்ரவர்த்ததே ॥

ருக்வேத: ப்ரதமோ வர்ணோ யஜுர்வேதோ த்விதீயக: ।
ஸாமவேதஸ்த்ருதீயஶ்ச ஹோமார்க்ஷஸ்ஸமாஹ்ருத: ॥

---

[1] அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி:, ப்ராகாம்யம், ஈஶித்வம், வஶித்வம் சேதி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாதபிந்து ஸமாயுக்தஶோஙாரம் ப்ரணவம் விதுः ।
பரமாத்ம ஸமாயோகாத்தவந்நித்யஸுதः ॥

அகாரோ விஷ்ணுதைவத்யஉகாரோ ப்ரஹ்மதைவதம் ।
உகாரோ ருத்ரதைவத்யம் நாதம் பரஶிவம் விதுः ॥

ஸர்வேஷாமேவ மந்த்ராணாம் ப்ரணவம் பீஜமுச்யதே ।
தத்த்வஸ்ருஷ்டிரேநத்ரம் பஞ்சாக்ஷரஸ்ய வியாந்தः ॥

பஞ்சாக்ஷரஸ்ய ஸ்வரூபத்து கத்யிஷ்யாமி தத்த்வத ।
மாநஸாத்யஸ்வரூபம் ஹாஸத்து தந்நஸம் ॥

வாசஸ்ய ஸ்வரூபம் ஶ்ராவம் ஶ்ரீபஞ்சஸ்வராங்கிதம் ।
மாநஸாத்யஸ்வரூபம் பஞ்சாக்ஷரமிதீரிதம் ॥

கஸ்ய மந்த்ரஸ்ய தத்பாஶம் வேத்தி யோ மந்த்ரஸாதகः ।
ஸ ஏவ ஸர்வ லோகாநாமீஶ்வரோ பவதி த்ருவம் ॥

கஸ்ய மந்த்ரஸ்ய மாஹாத்ம்யம் கஸ்ய மந்த்ரஸ்ய விதயதே ।
அநேந ஸத்ரஶோ மந்த்ரோ ந பூதோ ந பவிஷ்யதி ॥

மந்த்ராணாமேவ ஸர்வேஷாம் நாயகः பஞ்சவர்ணகः ।
ஶதாருத்ரீய மத்யே ச மந்த்ரரூபேண பாடிதः ॥

தக்ஷிணாமூர்த்தி ரூபேண குருணா போபதேஶிதம் ।
ஜப்த்வேமம் மந்த்ரராஜோ [1]த்ர ஶிலாயாம் ஸமாஶிவே ॥

மாஹாத்ம்யம் விஸ்தராச்சக்துஂ ஶக்யம் வர்ஷகோடிபிः ।
உபதிஷ்டமதோஸ்யாம் ஶிவே ஸர்வார்த்த ஸாதகே ॥

[1]அபி ஶிலாதலே இதி பாடாந்தரம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌗𑍋𑌪𑍍𑌯𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑍇 𑌗𑍁𑌪𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑌿 ।
𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌬𑍀𑌜𑌾𑌦𑌿𑌕𑌂 𑌭𑌦𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌨𑍍𑌨𑍈𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑌿 ॥

𑌗𑍁𑌪𑍍𑌤𑌂 𑌭𑌜𑌤𑌿 𑌕𑌾𑌲𑍇𑌨 𑌗𑍋𑌪𑌨𑍀𑌯𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ।
𑌅𑌨𑍇𑌕𑌜𑌨𑍍𑌮-𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧-𑌶𑍍𑌰𑍌𑌤-𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌾𑌮𑍍 ॥

𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌜𑌪𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

𑌜𑌪𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌥𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌾𑌨𑌿 𑌵𑌿𑌲𑌯𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ॥

𑌨 𑌸𑌂𑌶𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌤𑌨𑍍𑌮𑌯𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌅𑌹𑍋 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌹𑌿 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍀𑌦𑍃𑌶𑍀 ॥

𑌕𑌾𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌪𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑍇 𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌵𑌾𑌪𑍍𑌯𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌨𑌰𑌃 ।
𑌜𑌪𑌿𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌸𑍈𑌷𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌬𑌨𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ॥

𑌵𑌰𑍍𑌣𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌧𑌾𑌤𑍁𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌤𑍁 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌮𑍍 ।
𑌗𑌾𑌰𑍁𑌡𑌂 𑌚 𑌮𑌣𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌮𑌿𑌦𑌂 𑌶𑌿𑌵𑍇 ॥

𑌨𑌾𑌦𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑍋 𑌦𑍇𑌵𑌿 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 ।
𑌕𑍃𑌪𑌯𑌾 𑌨 𑌵𑌿𑌦𑌿𑌤𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌾𑌨𑍀𑌂 𑌚 𑌮𑌯𑍇𑌰𑌿𑌤𑌮𑍍 ॥

𑌶𑌿𑌵𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌨𑌃 ।
𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 𑌭𑍇𑌦𑍇𑌨 𑌭𑌿𑌨𑍍𑌨𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ॥

𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑍈𑌵 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌤𑍍 ।
𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑍇𑌨 𑌭𑌦𑍍𑌰𑍇𑌣𑍈𑌵 𑌨 𑌭𑍂𑌤𑌿𑌂 𑌕𑍍𑌷𑌰𑌤𑍇 𑌭𑌯𑌃 ॥

𑌕𑌰𑍍𑌷𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑌨𑍍𑌯𑌾𑌤𑍍 ॥

𑌯𑌥𑌾 𑌸𑌰𑌿𑌤𑌾𑌂 𑌗𑌙𑍍𑌗𑌾 𑌰𑌸𑌾𑌨𑌾𑌮𑌮𑍃𑌤𑌂 𑌯𑌥𑌾 ।
𑌗𑌿𑌰𑍀𑌣𑌾𑌂 𑌚 𑌯𑌥𑌾 𑌮𑍇𑌰𑍁𑌃 𑌗𑍌𑌰𑍇𑌵 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌦𑌾𑌮𑍍 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அபாம் ச த்ரிபதா யத்வத்தேஜஸாம் பாஸ்கரோ யதா ।
ம்ருகாணாம் ச யதா ஸிம்ஹோ வாஹநாநாம் கரீ யதா ॥

பாத்ராணாமுத்தமம் பாத்ரம் வேதவித்ப்ராஹ்மணோ யதா ।
தவ மாஹாத்ம்யவஶாத்தேவி மந்த்ரோயம் ஸமுத்த்ருதஃ ॥

அஷ்டோத்தரஸஹஸ்ரம் து ஜபம் க்ருத்வா திநே திநே ।
தேந மே ப்ரீதிரதுலா பவிஷ்யதி ந ஸம்ஶயஃ ॥

உச்சரீராத்தகமந்த்ரம் யோ ஜபேத்ப்ரயதாயதஃ ।
ஸகோடிகுலஸம்யுக்தோ மல்லோகே நிவஸேத்த்ருவம் ॥

ந புநர்ஜாயதே பூமௌ மோக்ஷார்த்தீ மாநவோத்தமஃ ॥

ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தம் மந்த்ரோயம் மோக்ஷதாயகஃ ।
ஜபேத் தர்மார்த்தகாமார்த்தீ நோபேந்ந ஸமுதாயகஃ ॥

தர்ம ஏவ பரம் ப்ரஹ்ம தர்ம ஏவ பரா கதிஃ ॥

தர்ம ஏவ பரா வித்யா தர்ம ஏவ பரம் தபஃ ॥

தத்த்வம் பரமந்த்ரம் பரப்ரஹ்மேதி கேசந ।
கேசித் பரஶிவம் வேத்தி கேசித்த்வேவம் பராத்பரம் ॥

ஆநந்தமிதி கேசித்து மோக்ஷோபாயம் ச கேசந ।
வதந்தி லோகே பஹுதா ஸ்வஸ்வபுத்த்யநுஸாரதஃ ॥

ந கோபி நிஶ்சயம் வேத்தி பரதத்த்வஸ்ய பார்வதி ।
அஹமேவாஸ்ய மந்த்ரஸ்ய ருஷிஶ்சந்தஸ்ததைவ ச ॥

சந்தஶ்ச ஜகதீ ப்ரோக்தா மோக்ஷார்த்தே விநியுஜ்யதே ।
க்ருதே ஜபம் து மோக்ஷார்த்தே ஸர்வாஸ்ஸித்த்யந்தி ஸித்தயஃ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தஸ்மாத்ஜலஸ்ய ஸம்ஜ்ஞா ஸாக்ஷாத்ஸு வாசனத: ।
ஸாக்ஷாத்ரூபம் வஹ்நாஸி தஸ்மாத்ஜோகேஷா விஸிஷ்யதே ॥

ஸாக்ஷாத்சிவபெருமான் அநுக்ரஹிக்கிறதாவது:-

ஓ தேவி! இம்மந்த்ரத்தினுடைய மஹிமையைச் சொல்லுகின்றேன்; கேட்பாயாக. புண்ணிய விசேஷத்தினால் உனக்கு இப்பொழுது இவ்வித புத்தி உண்டாயிருக்கிறது. ஏழுகோடி மஹாமந்த்ரங்களும், அங்க பதக்ரமங்களோடு கூடிய நான்கு வேதங்களும், எல்லா ஜீவராசிகளும், அறுபத்துநான்கு கலை ஞானங்களும், இம் மந்த்ரத்தின் அம்சத்தினின்று உண்டாயிருக்கின்றன; இம்மந்த்ரமானது அணுவுக்கணுவாகவும் மஹத்துக்கு மஹத்தாகவுமிருக்கின்றது. இம்மந்த்ரத்திற்கு அநேக கோடி வருஷம் பொருளுரைத்தாலும் சொல்லி முடியாது. ஆயினும் மங்களே! தெரிந்தவாறு உரைக்கின்றோம்; எல்லா வித்தைகளின் உருவாயும் மஹிமை உடையதாயுமுள்ள இம்மந்த்ரம் அறியப்பட்டதேயாயின், அக்ஞானத்தினால் ஸத்யம் போல் தோன்றுகின்ற ஸ்தாவர ஜங்கமங்களாகிற இவ்வுலகம் அனைத்தும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். அணிமா முதலிய அஷ்டஸித்திகளும் வேலையாட்களைப்போல் ஊழியம் செய்யும்; ஆகையால் இம்மந்த்ரத்தின் மஹிமையை ஒரே மனதாயிருந்து கேட்பாயாக.

இம்மந்த்ரமானது "அ"கரம், "உ"கரம், "ம"கரம், என்ற மூன்று எழுத்துக்களால் உண்டாயிருக்கின்றது. முதலாவது எழுத்து "ருக்"வேதமும், இரண்டாவது எழுத்து "யஜுர்" வேதமும், மூன்றாவது எழுத்து "ஸாம"வேதமுமாக "ஓங்கார"ஞ் சொல்லப்படுகின்றது. நாதபிந்துக்களோடு கூடிய இந்த ஓங்காரத்தைப் "ப்ரணவம்" என்று சொல்லுகின்றார்கள்; இந்த எழுத்துக்களுடைய சேர்க்கையானது "அதர்வண" வேதத்தினால் சொல்லப்படுகின்றது, "அ"கரத்திற்கு "விஷ்ணு"வைத் தெய்வமாகவும், "உ"கரத்திற்கு "ருத்ர"ரைத் தெய்வமாகவும், "நாத"த்தைப் [1]"பரசிவ" மாகவும் சொல்லுகின்றார்கள்;

[1] ஈண்டு பரசிவம் என்பது மகேச்வரரை உணர்த்தி நின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்த ப்ரணவமானது எல்லா மந்த்ரங்களுக்கும் காரணமாகச் சொல்லப்படுகின்றது; இந்த ப்ரணவத்தை ஐந்தெழுத்து மந்த்ரத்திற்கு முதலில் விதிப்படி சேர்த்துச் சொல்லவேண்டும்.

பஞ்சாக்ஷர மந்த்ரத்தினுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகின்றேன், கேள். தவர்க்கத்தின் கடைசியான "ந்" என்கின்ற எழுத்தோடு ஸ்வரம் என்று ஏற்பட்ட உயிரெழுத்தின் முதலாவதான அகரமுஞ் சேர்ந்துண்டான "ந"கரமும், பவர்க்கத்தின் அந்த்ய சப்தமான "ம்" என்கின்ற சப்தத்தை ப்ரதமஸ்வரமான அகரத்துடன் சேர்த்துவந்த "ம"கரமும், வாந்தமான சகரத்தை மத்ய ஸ்வரமான இகரத்துடன் சேர்த்துவந்த "சி" என்ற எழுத்தும், லகரத்திற்கடுத்த வகரத்தை ப்ரதம தீர்க்கஸ்வரமான ஆகாரத்துடன் சேர்த்துவந்த "வா" என்கிற எழுத்தும், மகரத்திற்கடுத்த யகரத்துடன் அகரஞ்சேர்ந்துண்டான "ய" என்கிற எழுத்துமாகிய இவ்வைந்து அக்ஷரங்களும் "பஞ்சாக்ஷரம்" என்று சொல்லப்படும். இம்மந்த்ரத்தினது உண்மைப்பொருளை மந்த்ரஸாதகனான எவன் அறிகின்றானோ, அவன் ஸமஸ்த உலகங்களுக்கும் ஈச்வரன் என்பது திண்ணம். இம்மந்த்ரத்தின் மஹிமை மற்றெந்த மந்த்ரத்திற்கும் ஏற்படாது; இதற்கு ஸமானமான மந்த்ரம் சென்ற காலத்திலுமில்லை; வருங்காலத்திலும் உண்டாகமாட்டாது. ஆகையால் இது ஸமஸ்த மந்த்ரங்களுக்கும் மேலானது; ஏகாதச கோடி ருத்ரர்களையும் ஸம்ஸாரரோக நிவர்த்தகரான ருத்ரமூர்த்தியையும் பிரதிபாதிப்பதான ஸ்ரீருத்ரங்களினுள் ஒரு மந்த்ரமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. ஆதிகுருவான "தக்ஷிணாமூர்த்தி" யால் ஸமஸ்தசிஷ்யர்களுக்கும் உபதேசிக்கப்பட்டது; எக்காலும் மங்கள வடிவையுடைய பார்வதியே! மற்ற மந்த்ரங்களாகிய பிரஜைகளுக்கெல்லாம் இறைவனை ஒத்த இம்மந்த்ரமானது நமது ஸித்தியின் பொருட்டு யாவராலும் ஜபிக்கத் தகுந்தது.

இம்மந்த்ரத்தின் மஹிமையை விரித்துரைக்க எவ்வளவு கோடி வருஷங்கள் சென்றாலும் போதாது; மங்களரூபியாயும் அடியவர்களுக்கு ஸமஸ்த அர்த்தங்களையும் ஸாதித்தருளுபவளாயும் மிகுந்த பாக்யசாலியாயுமுள்ள பார்வதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவியே! இவ்வளவு மஹிமை பொருந்திய இம்மந்த்ரமானது (இப்பொழுது) உனக்கு உபதேசிக்கப்பட்டது. இதனை ரகஸ்யமாய் வைத்து ரக்ஷித்துக்கொள்; ரஹஸ்யமாக வைத்துக் கொண்டிருந்தால்தான் மந்த்ரங்களுக்கு ஸித்தி உண்டாகும்; பிரகாசப்படுத்தினால் ஸித்தி ஏற்படமாட்டாது; மேலும் இது எல்லா மந்த்ரங்களுக்கும் மூலகாரணமானது. எவ்வளவு ப்ரயத்னப்பட்டாவது இதனை மிக ரஹஸ்யமாக ரக்ஷித்து வைத்துக் கொள்ளவேண்டும். அப்படி ரக்ஷிக்குங்காற் சீக்கிரம் ஸித்தி ஆகாவிடினும் கொஞ்ச காலத்தில் ஸித்தி ஆகும்; ச்ருதி ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டுள்ள கர்மங்களை அநேகஜன்மாக்களில் ஸரிவர நடாத்திய புண்யவான்களுக்குத்தான் பஞ்சாக்ஷர ஜபத்தில் புத்தி ப்ரவர்த்திக்கும். இவ்வாறு பஞ்சாக்ஷரஜபம்செய்ய வேண்டுமென்று ஒரு மனிதனுக்கு புத்தி ஏற்பட்டமாத்திரத்திலேயே அவனுடைய ஸகல பாபங்களும் நிவாரணமாய் விடும் என்பது திண்ணம். இதில் ஸந்தேகம்வேண்டாம். நாம் கூறுவதெல்லாம் உத்தமமானவையே; அஹோதேவியே! இவ்விதம் பஞ்சாக்ஷர ஸ்வரூப விசாரணாபுத்தி உனக்கேற்பட்டதால் நீயே தன்யர்களுள் முதன்மையானவள்.

[1]ஸாமான்யமான ஒரு மனிதன், உசிதகாலத்திலோ அல்லது (தீராதபக்ஷம்) அகாலத்திலோ, (ஸ்நானாதிகளால்) பரிசுத்தமாகவோ அல்லது அசுத்தமாகவோ, இந்த பஞ்சாக்ஷரத்தை ஜபித்தால் ஸம்ஸாரபந்தத்தினின்றும் உடனே விடுபட்டு மோக்ஷத்தை அடைகின்றான். மங்களரூபியே! (பிராஹ்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்ரர்களாகிய) நான்கு வர்ணிகளுள் பிராஹ்மணர்கள் எவ்வாறு சிறந்தவர்களோ, பஞ்சலோகங்களுக்குள் தங்கம் எவ்வாறு சிறந்ததோ, நவமணிகளுள் காருடமணி எவ்வாறு மேன்மையானதோ, அவ்வாறே மந்த்ரங்களுள் “பஞ்சாக்ஷரம்” சிறந்தது. தேவியே! இதிலேற்பட்ட “நாதம்” “பிந்து” என்பவைகளில் “நாதம்” உனது ஸ்வரூபம்; “பிந்து” நமது ஸ்வரூபம்; இவைகளெல்லாம், ஹே ஸ்வயம் ப்ரகாசே! முன்னர் உன்னால் அறியப்படாமல் இப்போது எம்மால் அறிவிக்கப்பட்டன. ஸமஸ்த

[1]உசித காலத்திலேயே பரிசுத்தத்துடன் பஞ்சாக்ஷர ஜபம் செய்ய வேண்டியதென்று கொள்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாபங்களையும் நிவர்த்தி செய்யக்கூடியதாயும் சிவசக்தி ஸ்வரூபமாயுமுள்ள இந்த பஞ்சாக்ஷரமானது (உச்சாடன முதலிய) கர்மங்களில் இருபத்தைந்து (பேத) ப்ரகாரமாக விளங்குகின்றது. மோக்ஷத்தில் விருப்பமுடைய மாந்த்ரிகன் இந்த மந்த்ரத்தைக் கர்மங்களில் ப்ரயோகிக்கக்கூடாது. (உலக மரியாதையையறிந்த) எந்த வித்வானும் (எவ்வளவு சிலாக்யமான) நிலத்தையும் தங்கக் கலப்பையினால் உழுது, பயிர் செய்யமாட்டான், அல்லவா! அவ்வாறு செய்வானாயின் க்ருஷியின் (உழவின்) பலனை அடையாமலிருப்பதோடும் கூட கலப்பையிலுள்ள தங்கத்தையும் இழப்பான். (கிடைக்கும் பலன் தேய்கிற தங்கத்திற் கீடாகாது.)

மேலும், இம்மந்த்ரமானது ஸர்வநதிகளுள் கங்கையைப் போலவும், ரஸங்களுள் அம்ருதத்தைப்போலவும், மலைகளுள் மஹாமேருவைப் போலவும், நான்கு காற் ப்ராணிகளுள் (பசுக்களுள்) காராம்பசுவைப்போலவும், ருக்குகளுள் (மந்த்ரங்களுள்) காயத்ரியைப் போலவும், ஒளிகளுள் ஸூர்யனைப்போலவும், ம்ருகங்களுள் ஸிம்ஹத்தைப் போலவும், வாஹனங்களுள் யானையைப் போலவும், (தான) பாத்ரங்களுள் வேதத்தை அறிந்த உத்தமமான ப்ராஹ்மணனைப்போலவும் ச்ரேஷ்டமானது; தேவியே! உனது பாக்யவசத்தால் இம்மந்த்ரமானது இப்போது உனக்கு உபதேசிக்கப்பட்டது.

தினந்தோறும் இந்த மந்த்ரத்தை ஆயிரத்தெட்டுமுறை ஜபம் செய்; அதினால் நமக்களவற்ற ப்ரியமுண்டாகும்; இதில் ஸந்தேகமில்லை. நமது சரீரஸ்வரூபமாகிய இந்த மந்த்ரத்தை எவன் ச்ரத்தையோடு ஜபிக்கின்றானோ, அவன் தனது கோடி குலத்தினரோடு நமது கைலாஸத்தில் வஸிக்கின்றான் என்பது உறுதி. மோக்ஷத்தில் விருப்பமுள்ள (மோக்ஷார்த்தி) உத்தமபுருஷன் இதனை ஜபிப்பானாயின், பின்னர் பூமியில் ஜனிக்காமல் மோக்ஷத்தை அடைகின்றான். இம்மந்த்ரம் பிரஹ்மா முதல் ஸ்தம்பப்புழு இறுதியாயுள்ள ஸமஸ்த ப்ராணிகளுக்கும் மோக்ஷத்தை அளிக்கும் சக்தியுடையது; ஆகையால் "இதனைக் குருவிடம் உபதேசிக்கப் பெற்று ஜபிக்க வேண்டியது; இல்லாவிடின் பயன்படாது". ஏனெனில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருவானவர் பரப்ரஹ்மஸ்வரூபியாயும், மேலான கதியாயும் (அடையக்கூடிய உயர்ந்த பதவியாயும்), சிறந்த வித்யாரூபியாயும், விசேஷமாயுள்ள தனரூபியாயும் விளங்குகின்றார். ஆகையால் குருவினிடம் உபதேசம் பெற்றுக்கொண்டு ஜபிக்க வேண்டும். மேன்மையாகிய இம்மந்த்ரத்தைச் சிலர் "பரப்ரஹ்ம" மென்றும், சிலர் "பரசிவ" மென்றும், சிலர் ச்ரேஷ்டமான "பரசைவ" மென்றும், சிலர் "ஆனந்த" மென்றும், "மோக்ஷோபாய" மென்றும் தங்கள் தங்கள் புத்திக்கேற்ப பலவாறாகச் சொல்லுகின்றார்கள்.

பார்வதியே! பரதத்வரூபமாகிய இந்த மந்த்ரத்தின் ஸ்வரூப நிச்சயத்தை ஒருவரும் அறியவேயில்லை; இந்த மந்த்ரத்துக்கு "ரிஷி" யும் "தேவதை"யும் "நாமே;" இந்த மந்த்ரத்தின் "சந்தஸ்" ஜகதீ எனப்படும்; இதற்கு "விளியோகம்" "மோக்ஷம்" அடைவதுதான். மோக்ஷமாகிய புருஷார்த்தத்தின் பொருட்டு ஜபிக்கப்படுமாயின் மற்றைய ஸித்திகள் தாமே கைகூடும். ஆகையால் மோக்ஷத்தின் பொருட்டு இம்மந்த்ரத்தை மிகவும் ஜாக்ரதையாய் ஜபிக்க வேண்டும். மோக்ஷத்திலும் மேலாகிய புருஷார்த்தம் இல்லையன்றோ? ஆதலினால், மோக்ஷமே இம்மந்த்ரத்தின் ப்ரயோஜனமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

𑌸𑍂𑌤𑌃

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍇 𑌦𑍇𑌵𑍇 𑌤𑍁 𑌦𑍇𑌵𑍀 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌮𑌾𑌨𑌸𑌾 ।
𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌪𑌾𑌦𑌂 𑌶𑍁𑌭𑍍𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋𑌃 ॥

𑌕𑌾𑌰𑍍𑌤𑌿𑌕𑍇𑌯𑍋𑌽𑌪𑌿 𑌤𑌤𑍍𑌕𑌾𑌲𑌂 𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌪𑌾𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌃 ।
𑌶𑍈𑌶𑌵𑍇𑌽𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌜𑌗𑍍𑌰𑌾𑌹 𑌸 𑌬𑌾𑌲𑌿𑌶𑌃 ॥

𑌬𑍀𑌜𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌯𑌥𑌾 𑌶𑌾𑌖𑌾 𑌤𑌥𑌾𑌽𑌭𑌵𑌤𑍍 ।
𑌤𑌥𑌾 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌸𑌿𑌤𑌮𑍍 ॥

𑌤𑍈𑌲𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌰𑍍𑌜𑌲𑍇 𑌯𑌦𑍍𑌵𑌤𑍍 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍇 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍇 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑍍 𑌯𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தஷா வ்யாஹரதி ஸா தேவீ ஶிவஜ்ஞாநவஶம் ததா ।
ஜஜாப தேவதேவேசம் ச ஸதா பக்த்யா யதா ॥

தேவோபி ச தயாஸாகரமாகம் கைலாஸமந்திரம் ॥

ஸூதமஹாமுனிவர் சொல்வதாவது:-

இவ்வாறு ஸ்வயம் ப்ரகாசமான பரமசிவன் திருவாய்மலர்ந்தருள, உமாதேவியார் மிகவும் ப்ரீதியோடு ஸமஸ்த விஷய ஞானரூப ப்ரயோஜனத்தைத் தருவதாயும் ச்ரேஷ்டமாயுமுள்ள இந்த பஞ்சாக்ஷர மந்த்ரத்தை ஸாக்ஷாத் ஈச்வரனிடமிருந்து உபதேசம் பெற்றுக்கொண்டாள். அது ஸமயம் தேவியின் மடிமீதமர்ந்திருந்த குமாரக்கடவுளும் அந்த உத்தமமான மந்த்ரத்தை க்ரஹித்துக் கொண்டார். ஆனால் அவர் குழந்தைப் பருவத்தில் இருந்தமையால், இயற்கையாகவே குருவான பிதாவிடமிருந்து உபதேசம் பெற்றோமென்ற கருத்தினோடு க்ரஹித்தாரில்லை. ஆயினும் அவரை அடைந்த அந்த பஞ்சாக்ஷர மந்த்ரமானது, வித்திலுள்ள கிளைகளோடு கூடிய வ்ருக்ஷம் போன்றும், ஜலத்தில் விடப்பட்ட எண்ணெய்த்துளி போன்றும், உத்தமமான பாத்ரத்திற் கொடுக்கப்பட்ட தானம் போன்றும், இயல்பிலே புத்திமானுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்ட சாஸ்த்ரம் போலவும், பலவிதங்களில் வ்ருத்தியடைந்தது. சிவபெருமானிடத்து உபதேசம் பெற்ற காலந்தொடங்கி தேவியான பார்வதி திவ்ய ஞானத்தைக் கொடுக்கக்கூடிய அந்த பஞ்சாக்ஷர மந்த்ரத்தை விசேஷ பக்தியோடு ஈச்வரரால் அனுக்ரஹிக்கப்பட்டவாறு ஜபித்து வந்தாள். தேவியுடன் சிவபெருமான் உத்யானவனத்தை விட்டுக் கைலாஸத்துள்ள அந்தப்புர மடைந்தார்.

கார்த்தம் வஸதே வஷ்டே விஶ்வாஹ்வாஸந கர்மணி ।
ப்ராஹ்மணம் ச ஸமாஹூய நியோகம் க்ருதவாந் ப்ரபு: ॥

ஸ து தேநாஹ்வாநுஜ்ஞாதோ ப்ரஹ்மா கைலாஸமந்திராத் ।
உபாயாய ஸ்வதேவேந ப்ரணவம் ப்ராப்தவாந் பரா ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"இந்தச் சத்ருக்களுக்கு உட்படாத மனிதன் செய்யும் தர்மமானது ஜாதி குணம் என்னும் இரண்டு பேதத்தினால் அநேக ப்ரகாசமாய் விளங்குகின்றது; கர்மத்தினால் மோஹிக்கப்பட்டிருக்கின்ற மனிதர்கள் ஸத்வகுணம் உள்ளோர் ரஜோகுணமுள்ளோர் தமோகுணமுள்ளோரென மூவகை குணமுள்ளவர்களாக உலகத்திலிருக்கின்றார்கள். அவரவர்கள் செய்த கர்மத்திற்கேற்ற புத்தி மனிதர்களுக்குண்டாகின்றது.

யஉுயாஶொ நரவொ ஹுயாகூ விஶெஷாஜுாஜநநந ।
கூயாநா விஜிதம் கிஞிகூ திஷு ஸொகெஷு விஜுதெ ॥

ஜநாமி ஹுாம் கூயா ஜுதம் ஷுஶரீரம் வுஶா விஹொ ।
தாஜுஶஸு ந வஜுவும் கூுஜாதம் ச கிஞுந ॥

"ராஜகுமாரனே! விசேஷமாய் அரசனே தர்மத்திற்காதாரமால் இருக்கின்றான். இம்மூவுலகங்களிலும் உன்னாலறியப்படாதது ஒன்றுமில்லை. மஹாராஜனே! முன்னொருகாலத்தில் உன் சரீரத்தை இந்திரன் அக்னி இவர்களுக்கு நீயே தத்தம் செய்திருக்கின்றனை; அன்றோ? அவ்வளவு தர்மக்ஞனாகிய உனக்குக் கர்மானுஷ்டானத்தினால் ஏற்படும் பயன்களைக் குறித்துச் சொல்வது தகுதியன்று"

யஉுணாஉஹாஶம் சாஹி ஷுூுஷுக்ஷு விஹெஉதঃ ।
ஷுூஷுஶுதி காஶெந ஸுக்ஷுஜெவ ஸஉாசஶேகூ ॥

"ஸ்தூலம் ஸூக்ஷ்மம் என்னும் பேதத்தினால் தர்மத்தில் சிற்சில ரஹஸ்யங்களிருக்கின்றன. இவைகளின் ஸ்தூல தர்மம் சிறிதுகாலத்தில் அழிந்துவிடும். (ஸூக்ஷ்மமோ அப்படியில்லை;) ஆதலால் ஸூக்ஷ்ம தர்மத்தையே அனுஷ்டிக்க வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஊத்ரு: வுண்யம் கரொதெ்ய ஊநம் வொ ஹய தா ரகஃ ।
ஊவ்ஹொஹாக ஸ்ரஹீஷ்ஞி ஸ்ராஹுணா யநவஜி ஜுதா: ॥

வஸ்ராஹி ஈயமஹாஹொ ஹவிஷ்ஞி ந ஸம்ஶய: ।
வாகுதூ வுண்யூஷம் ஹொகெ வாவஷம் வைகதொ நரவ ॥

தஷாஷுஹயத: வுண்யவ்யஷம் ஊநம் ஸஊவஸெுக ॥

தானம்செய்பவனுக்கு உண்டாகும் புண்யமானது கொடுக்கின்றவனையும் ப்ரதிக்ரஹம் செய் (வாங்கு) கின்றவனையும் தாரணஞ் (பாபத்திலிருந்து விடுதலை) செய்கின்றது. தரித்ரர்களாயுள்ள சில ப்ராஹ்மணர்கள் பண ஆசையினாலே (சில விசேஷ) தானங்களை வாங்குகின்றார்கள். பின்னர் அவர்கள் (அதற்குத்தக்க பரிகாரம் செய்துகொள்ள சக்தியோ ஸௌகர்யமோ இல்லாததினால்) நிச்சயமாகவே நரகத்தில் விழுகின்றார்கள். உலகத்தில் ஒரு இடத்தில் புண்யத்தைக் கொடுக்கின்ற சில தானங்களானது, அரசனே! மற்றோரிடத்தில் பாபத்தை விளைவிக்கின்றன. ஆகையால் கொடுக்கின்றவன், வாங்குகின்றவன் ஆக இவ்விருவருக்கும் புண்யத்தைக் கொடுக்கக்கூடிய தானத்தையே செய்தல்வேண்டும்.

ஊதாரம் ச ஸஊஹிஶ ஶாஹிஷ்ாஜி ந கிஞ்ந ।
கம் ஹி ஹொகொவகதூா ச விஶெஷாஷுக்திஊநயி ॥

கதஸ்வம் ஶிக்ஷிதும் யொமெஹா யஊஊமெஹண ஊநஷ ॥

தானம் செய்கின்றவனுடைய விஷயத்தைப்பற்றி (உன்னிடம்) ஒன்றும் நான் கட்டளையிடவில்லை. ஆனால் நீயோ உலகத்திற்கு உபகாரம் செய்பவன்; என்னிடம் விசேஷ பக்தியுமுள்ளவன்; ஆகையால் நீ என்னால் தர்மமார்க்கத்தில் சிக்ஷிக்க (படிப்பிக்க)த் தகுந்தவன்".

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

த்ரீணஹுாஹுாதி ஓாநாநி கநுா வரஷீ ஸாஸுதீ ।
கநுா ஓாநாக் ஸுஹலொகம் மச்செஹுவ ந ஸம்ஶயஃ ॥
ஸுஹகலுாவஸாநெ ச வாநஹாூரள வுஜாயதெ ॥

விஜுாவுஜஸுதுலொகம் மகூா காலுாவஸாநதஃ ।
ஸவூவிஜுாஸுயொ ஹூகூா ஜஹாநுாஜா ஹவிஷுதி ॥

ஹூவுஜஸுவூலொகாஹூஃ ஶிவலொகம் ஸநாதநடு ।
மகூா ஶிவெநஸஹிதஸுவூதெவொஹிஷுதஃ ॥

வஹுகலுாவஸாநெzவி ந யாதி விலயம் நுவ ।
சுதொzயிகம் தெஷு ஜகூா ஹூஜாநம் ச ஸஜாசா ॥

"உலகத்தில் மூன்று தானங்களையே சிறந்த தானங்களாகக் கூறுகின்றார்கள்; அவையாவன, [1]"கன்னிகாதானம்", "பூமிதானம்" "வித்யாதானம்". இவற்றுள் ஒருவன் கன்னிகாதானம் செய்வதினால் ப்ரஹ்மலோகத்தை அடைகின்றான்; இதில் ஸந்தேஹமேயில்லை. ஆனால், ஒரு ப்ரஹ்மகல்பம் முடிந்தவுடன் மறுபடியும் பூமியில் ஜனிக்கின்றான். வித்யாதானம் செய்பவன் ஸத்யலோகத்தை அடைந்து காலமுடிவில் ஸமஸ்த வித்வான்களாலும் அடைக்கலமடையத்தக்க வித்வத்துள்ள ஒரு மஹாராஜனாகப் பிறக்கிறான். பூதானஞ் செய்பவனோவெனின், எவ்வுலகிலும் வஸிப்பதற்குத் தகுதியுடையவனாய் ஸநாதனமாகிய சிவலோகத்தை அடைந்து சிவபெருமானோடுகூட, ஸர்வதேவர்களாலும் ஸ்துதிக்கப்பட்டு அநேக கல்பம் முடிந்துவிட்டதும், அரசனே! அவன் லயத்தை அடையாதிருப்பான். ஆகையினால், கந்யா, ஸரஸ்வதீ

---

[1] சுயாசிதாநி செயாநி ஸவூஜாநாநி யதுதஃ ।
சுஹம் விஜுா ச கநுா ச ஹுநகூிவூஹெுா நதீயதெ ॥

தானங்கள் எல்லாவற்றையும் யாசிக்க (கேள்க)ப்படாமலே கொடுக்கவேண்டும். ஆனால் அவைகளில் அன்னம், வித்யை, கன்னிகை இவைகளைக் கேட்பவருக்கே கொடுக்கவேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ப்ருதிவீ, இந்த தானங்களுள் பூதானமே சிறந்ததெனத்தெரிந்து அதனையே நீயும் செய்வாயாக".

ஶ்ரோத்ரியேப்யோ த்விஜேப்யஸ்து குடும்பேப்யோ தனவ ச ।
யதாஶக்த்யா ச விப்ராணாம் ஸ்வஸ்வவித்தாநுஸாரத: ॥

அஷ்டோத்தர ஸஹஸ்ரம் வா ஶதமஷ்டோத்தரம் வா ।
அஷ்டஷஷ்ட்யாஷ்ட வா ஸ்தாபயேத் பூமிதாநத: ॥

தங்கள் தங்கள் ஐச்வர்யத்தை அநுஸரித்து சக்திக்குத்தக்கபடி ஆயிரத்தெட்டாயினும் நூற்றெட்டாயினும் அறுபத்தெட்டாயினும் அல்லது எட்டாயினும் எண்ணிக்கையுள்ள, வேதாத்யயன ஸம்பன்னர்களாயும் ஏழைகளாயும் ஸம்ஸாரிகளாயுமுள்ள ப்ராஹ்மணர்களுக்குப் பூமி தானம்செய்து அவர்களை அங்கேயே ஸௌக்யமாக வஸிக்கச் செய்யவேணும்.

வஞ்சநா நைவ கர்தவ்யா வித்யதே ஹி நரோத்தம ।
வித்தாநுஸாரணாத்தாநம் ஸத்யோ ப்ரஸவகம் பவேத் ॥

"ஓ ராஜ ச்ரேஷ்டனே! த்ரவ்யத்தை வைத்துக்கொண்டு வஞ்சனை செய்யலாகாது. சக்தியை அநுஸரித்துச் செய்யும் தானமானது சீக்ரத்தில் நிச்சயமாய் பயன் தரும்".

பஹுநாத்ர கிமுக்தேந காயக்லேஶகரேண ச ॥

க்ருஹதோஷ-நிவ்ருத்த்யர்த்தம் ஸாமதோஷாயுதாதநாக ।
தீர்க்யாயுஷ்யாய வா ஸர்வகாமி ஸந்ததி வ்ருத்தயே ॥

வ்ருஷோத்ஸர்காத்ப்ருதி வாதாதா ஶிவஸ்ய ச ।
தத்ர ஸ்வேத ஸ்ரோவர்ணே ஶிவப்ரீத்யை பஹுஸ்ருதாந் ॥

ப்ராஹ்மணாந் ஸ்தாபயேச்சம் ஸம்ஸ்க்ருதைர்ஹிமோஹிதை: ।
ஶரைஸ்ஸஸ்யஸத்ரைஸ்ச கோதாநை: ஶோயநாதிபி: ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெந தெ கீதிபூ॑ஷ॑மூா ஹவிஷ்ஹதி ந ஸஂஶய꞉ ।
ஹ்ஹஷொஷா விநஶ்ஹதி ஸஹாயாஸ்ச ஹவதி ஹி ॥
ஹ்ஹாஸ்ஸவெூ ஸ நக்ஷத்ரா꞉ ஷீ்தொ ஹவதி ஶஜ்ஜா꞉ ॥

"அதிகமாய்ச்சொல்லி காலஹரணம் செய்வதில் யாது பயன் மஹாராஜனே! உனது க்ரஹதோஷநிவர்த்தியின் பொருட்டும் போக மோக்ஷாதி பயன்களைக்கருதியும் நீ தீர்த்த யாத்ரை செய்யவேண்டியது; அப்படிச் செய்யுங்கால் எவ்விடத்தில் ஸாக்ஷாத் பரமாத்மா சிவபெருமான் நேராகவே உனக்கு ப்ரஸாதம் (க்ருபை) செய்கின்றாரோ, அந்த மஹா புண்ய க்ஷேத்ரத்தில் அழகான அநேக வீடுகளைக்கட்டி, பயிர் நிறைந்த வயல்கள், பசுக்கள், தனங்கள் முதலிய ஸம்பத்துகளுடன் சேர்த்து, பக்தியோடு பரமசிவனுக்கு அர்ப்பணம் செய்து, அநேகம் ப்ராஹ்மணர்களுக்கு தானம் கொடுத்து திருப்தி செய்வித்து அவர்களை அங்கேயே ஸந்தோஷத்துடன் வஸிக்கச் செய்வாயாக; அவ்வாறு செய்வாயாயின் அளவற்ற மேலான கீர்த்தியை நீ அடைவாய்; இதில் ஸந்தேஹமேயில்லை. க்ரஹதோஷங்களும் நீங்கிவிடும். நவக்ரஹ தேவதைகளும் உனக்கு ஸஹாயம் புரிவார்கள். நக்ஷத்ரங்களோடுகூடிய ஸகல க்ரஹங்களும் சங்கரரும் உன் விஷயத்தில் ப்ரீதியை அடைவார்கள்".

ஹூமிதா॑வ॑த்வத்தெ யாவஜ்ஜாநஜாதஂ நரவொத்தம ।
கணெ கணெ ஶிவஹவஷூ வஸ்ஊணஂ ஶிவஶநிரெ ॥
நிவஸெச் ஹூமிஶாநாத்து ஶிவெந ஸஹ மொஶதெ ॥

"ராஜச்ரேஷ்டனே! ஒருவன் பூதானஞ்செய்வானாயின் தானம் செய்த பூமியிலுண்டாகும் நெற்களின் எண்ணிக்கை எவ்வளவோ அவ்வளவு தேவ வருஷம் அவன் சிவலோகத்தில் வஸிக்கின்றான். சிவனோடுகூட பரம ஸந்தோஷத்தை அனுபவிக்கின்றான்".

கஹஂ ச தீ஦ஷூசா॑ணஂ மஶிஷெஹ ॥ராஜநந்ந ।
ஶாவிஜஂஸஂ கா॑ா॑ஹ்வாஶஹ யநயாநஹய॑தொ வ்ரஜ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ராஜகுமாரா! நான் தீர்த்த யாத்ரை செய்யப்போகின்றேன். தனதான்யங்களை எடுத்துக்கொண்டு தாமதியாமல் இப்போதே புறப்பட்டு நீயும் தீர்த்த யாத்ரைக்குச் செல்வாயாக", என்று அநுக்ரஹித்தார்.

ஸூத:

ஶ்ருத்வைதத்வசநம் ராஜா க்ருத்வா திவ்யம் யதாவிதி ।
ப்ராஹ்மணாந் போஜயித்வா ச க்ருத-க்ஷீராந்ந-பக்ஷ்யகை: ॥

க்ருதாநுஜ்ஞஸ்ஸ்வயம் க்ருத்வா சலிதோ பந்துபிஸ்ஸஹ ।
வ்ரதஸ்ஸ்தீர்த்த யாத்ராயாம் ஸேநாபி: பரிவேஷ்டித: ॥

ஸூதமுனிவர் சொல்வது:-

இவ்வாறு கௌதமமுனிவர் சொன்ன வார்த்தையைக்கேட்டு சிபி சக்ரவர்த்தி ஸந்தோஷித்து விதிப்படி அவருக்கு அதிதி பூஜை செய்து, நெய் பால் பக்ஷணங்களுடனும் [1]நால்வகை அன்னங்களுடனும் ப்ராஹ்மணர்களுக்குப் போஜனமளித்து, அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சேனைகளால் சூழப்பட்டவராய் பந்துக்களுடன் கூட தீர்த்த யாத்ரைக்குப் புறப்பட்டார்.

---

[1] நால்வகை அன்னங்களாவன :-

1. பக்ஷ்யம் – பற்களினால் கடித்து ஸாப்பிடும் வஸ்துக்கள் (காய், கிழங்கு முதலியன)
2. போஜ்யம் – நாக்கினால் மென்று முழுங்கும் வஸ்துக்கள் (அன்னம் முதலியன)
3. லேஹ்யம் – நாக்கினால் நக்கி விழுங்கும் வஸ்துக்கள் (துவயல்)
4. சோஷ்யம்
5. பேயம்

(4, 5) – வாயினாலுறிஞ்சி சாப்பிடத்தக்க வஸ்துக்கள் (பழ இரஸம் முதலியன)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கௌதமம் ச புரஸ்க்ருத்ய ப்ராஹ்மணைர்பந்துபிஸ்ஸஹ ।
காஶ்யாதி ஸேதுபர்யந்தம் புண்ய ஸ்தாநேஷு புண்யக்ருத் ॥

அவிமுக்தம் ஸமாரப்ய யாவத் ஸேது ஸமாபயி ।
அவிமுக்தம் கயாம் சைவ நைமிஶம் ச ப்ரயாககம் ॥

வேணீ ஸ்நாநம் விஶாலேஶம் விமலேஶ்வரமேவ ச ।
கோதாவரீம் நர்மதாம் ச கௌதமீம் ஸிந்துவாஹிநீம் ॥

ஶோணாம் வேணீம் குலிங்காம் ச நதீஸப்தக ஸங்கமே ।
ஶ்ரீவபூதம் பித்ரூணாம் ஶேஷாசலஸ்ததஃ பரம் ॥

ஶ்ரீகாலஹஸ்தி நகரம் ஶ்ரீமத் காஞ்சீபுரம் ஶுபம் ।
ஶ்ரீமத் விரிஞ்சி நகரம் அருணாசலமேவ ச ॥

வ்ருத்தாசலம் மஹாக்ஷேத்ரம் மணிமுக்தா நதீதடே ।
ததோ வ்யாக்ரபுரம் கத்வா தில்லாரண்யஸ்ய மத்யகே ॥

த்ருஷ்ட்வா தத்ர ஸபாநாயம் ஶிவகங்கா தடே ஶுபே ।
ஶ்ரீமத் ப்ரஹ்மபுரம் ப்ராப ப்ராஹ்மணா பரிஸேவிதம் ॥

புண்யசாலியான அந்த சிபி சக்ரவர்த்தியானவர் ப்ராஹ்மணர்களுடனும் பந்துக்களுடனும் கூட கௌதமமுனிவரை முன்னிட்டுக்கொண்டு, ஶ்ரீ காசி முதல் ஸேதுவாகிய ராமேச்வரம் பர்யந்தமுள்ள ஒவ்வொரு க்ஷேத்ரங்களிலும் ஸ்நாந தர்ப்பண தான ஸந்தர்ப்பணாதிகள் செய்துகொண்டு வந்தார். அந்த க்ஷேத்ரங்களாவன:- அவிமுக்தமாகிய காசி, கயை, நைமிசம், ப்ரயாகை முதலியன. திருவேணியில் ஸ்நாநம் செய்து விமலேச்வரராகிய விசாலேச்வரரை பூஜித்தார். கோதாவரீ, நர்மதை, ஸிந்து, கௌதமீ, சோணா, வேணீ, குலிங்கா இந்த ஏழு நதிகளின் ஸங்கமங்களிலும் ஸ்நாந தர்ப்பணம் செய்து பிதுர் தேவதைகளை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருப்தி செய்வித்தார். பின்னால் ஸ்ரீ பர்வதம், [1]குஹாரண்யம், [2]சேஷாசலம், ஸ்ரீ காளஹஸ்தி, அழகான ஸ்ரீ காஞ்சீபுரம், ஸ்ரீவிரிஞ்சிநகரம், [3]அருணாசலம் முதலிய க்ஷேத்ரங்களைத் தரிசித்து ப்ரஸாதம் பெற்றுக்கொண்டு, மணிமுக்தாநதி தீரத்திலுள்ள வ்ருத்தாசலமென்னும் மஹா க்ஷேத்ரத்தை அடைந்து ஸ்நாந தர்ப்பணாதிகள் செய்தார். பிறகு தில்லாரண்யத்தின் மத்தியிலுள்ள [4]வ்யாக்ரபுரியை அடைந்து அழகான சிவகங்கையில் ஸ்நானம் செய்து அருகிலுள்ள ஸபாநாதரை (நடராஜாவை) தரிசித்து ப்ரஸாதம் பெற்றுக்கொண்டு ப்ரஹ்மாவினால் அநுக்ரஹிக்கப்பட்ட [5]ப்ரஹ்ம க்ஷேத்ரத்தை அடைந்தார்.

ததொ ஜடாயு ஸ்தாநம் வ ஶ்ரீகார்ஜவநம் வாப்ய ।
ஶ்ரீஶ்வேதவநம் வஶ்சாத் காவெரீ தீரஶாஶ்ரயெ ॥

குஶாரண்யம் மர்ஜுவநம் கும்பாரம் கொடிகாவல்யகம் ।
ஶ்ரீஶ வஞ்ஜாஶவிவிநம் ஶ்ரீஶநு-ஶம்மஜ ஶாயகம் ॥

ஶ்ரீஶாயர்வஸ்தும் வைவ ஶ்ரீயஜ்ஞாஜநரெவ வ ।
கும்பவொணம் ஶஹாகெஷத்ரம் ததஃ வஞ்சநஶஸ்தும் ॥

தஸ்ய வஶ்சிஶ ஶெஶெது யொஜநத்ரயஶாத்ரகெ ।
தீரெ காவெரி கந்யாயாஃ க்ஷேத்ரத்ரயஶநுத்தமம் ॥

ஜம்பூநாயம் ரஜ்ஞநாயம் வ்ருஷிஜம் ஹரிவி நாஶதஃ ॥

தக்ஷிண ஶஹிநாயெ யொஜநாஜெ ஶஹாஸ்தும் ।
ஸஹஸ்ரெஸ்வாரஶிதெய்வ வ்ருஷிஜம் ஹரவநத்ரயெ ॥

---

[1]உடுப்பி ஸுப்ரஹ்மண்யம்

[2]திருப்பதி

[3]திருவண்ணாமலை

[4]சிதம்பரம்

[5]ப்ரஹ்மபுரமென்ற சீர்காழி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பின்னர் ஜடாயு ஸ்தலம், [6]ஸ்ரீகரஞ்சவனம், [7]ச்வேதாரண்யம் முதலிய ஸ்தலங்களை தரிசித்துக்கொண்டு காவேரீ தீரத்தை அடைந்து, அங்கே ஆம்ராரண்யம், குஞ்சவனம், குத்தாலம், திருக்கோடிகாவல், பலாசவிபினம், மாயவரம், மத்யார்ஜுநம், கும்பகோணம், [8]பஞ்சநதம் முதலிய மங்களத்தைக் கொடுப்பதான க்ஷேத்ரங்களை தரிசித்து ப்ரஸாதம் பெற்றுக்கொண்டார்.

இன்னும் இந்த பஞ்சநத க்ஷேத்ரத்திற்கு மேற்கில் மூன்று யோஜனை தூரத்திற்கப்பால் காவேரி நதிக்கரையில் உத்தமமாயுள்ள ஜம்புகேச்வரம் ஸ்ரீரங்கம் என ப்ரஸித்திபெற்ற இரண்டு ஸ்தலங்களையும் தரிசித்து, பின் இவற்றிற்குத் தென்புறமாக ஒரு யோஜனை தூரத்திற்கப்பாலுள்ள மூவ்வுலகிலும் பிரஸித்தி பெற்றதாகிய அகல்யேச்வரம் என்னும் மஹாஸ்தலத்தையும் தரிசித்தார்.

𑌕𑍃𑌤𑌮𑌾𑌲𑌾 𑌨𑌦𑍀𑌤𑍀𑌰𑍇 𑌕𑌦𑌂𑌬𑌵𑌿𑌪𑌿𑌨𑍇 𑌶𑍁𑌭𑍇 ।
𑌹𑌾𑌲𑌾𑌸𑍍𑌯𑌨𑌗𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌪𑌾𑌵𑌨𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌯 𑌨𑍈𑌰𑍃𑌤𑌦𑌿𑌗𑍍𑌭𑌾𑌗𑍇 𑌪𑌾𑌦𑌯𑍋𑌜𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑍇 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌨𑌾𑌗𑌮𑍌𑌲𑌸𑍍𑌯 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 ॥

𑌸𑌤𑍍𑌯𑌾𑌚𑌲𑌂 𑌮𑌹𑌾𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑍈𑌰𑍍𑌨𑌿𑌷𑍇𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌯𑌤𑍍𑌰𑌾𑌵𑌿𑌰𑌾𑌸𑍀𑌦𑍍 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

𑌤𑌤𑍍𑌰𑌾𑌗𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑍈𑌃 ।
𑌸𑍍𑌵𑌾𑌶𑌿𑌵𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍀 𑌤𑍀𑌰𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌸𑍍𑌵𑌾𑌹𑌿𑌨𑍀𑌮𑍍 ॥

𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌸𑍍𑌸𑌾𑌕𑌂 𑌸𑌜𑍍𑌜𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌕𑍁𑌮𑌾𑌰𑌵𑌲𑍍𑌲𑌿𑌨𑍍𑌯𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌵𑌿𑌧𑌾𑌯 𑌚 ॥

[6] வைத்தீச்வரன் கோவில்

[7] திருவெண்காடு

[8] திருவையாறு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓாநாநி வஹுஶொ ஊகூா ஸைவம் ஜவதி வாயி௨வெ ।
தவைெவ ஶாஜூரீ வாணீ வ௫ாடு௱ாவஹீஹாாயிவத் ॥

பின், கிருதமாலாநதிதீரத்தில் சோபை பொருந்திய கதம்ப வனத்திலுள்ள மிகப் பரிசுத்தமாகிய ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தை அடைந்து ஸ்ரீ ஹாலாஸ்யநாதரை தரிசித்து ப்ரஸாதம் பெற்றுக்கொண்டு, அதன் கன்னிமூலையில் கால் யோஜனை தூரத்திற்கப்பால் நாகமலைக்குத் தென்பார்சவமாக, பரிசுத்தமுள்ளதாயும் அதிக அற்புதமுள்ளதாயும், கைவல்யத்தின் வாஸமாயும், ஸர்வவேதங்களாலும் நிச்சயிக்கப்பட்டதாயும், குமாரஸ்வாமிக்கு அநுக்ரஹித்து மஹேச்வரர் ஸாந்நித்யம் செய்திருக்கும் திவ்ய க்ஷேத்ரமாயுமுள்ள ஸத்யாசலத்தை அடைந்து, மிகவும் தர்மசிந்தனையுள்ள ராஜரிஷியாகிய அந்த சிபி சக்ரவர்த்தியானவர், ஸ்வாமிபுஷ்கரிணியின் கீழ்பக்கத்தில் தமது ஸைன்யத்தை இறங்கித் தங்கச்செய்து, ப்ராஹ்மணர்களோடு கூட ஸங்கற்ப பூர்வமாக விதிப்படி குமாரஸரஸில் ஸ்நாநம் செய்து நித்ய கர்மாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஏராளமாக தானங்கள் அளித்துவிட்டு, வீற்றிருந்து பஞ்சாக்ஷர ஜபம் செய்துகொண்டிருக்கும் பொழுது, அந்த ராஜச்ரேஷ்டன் முன்னால் சிவபெருமானுடைய ஆகாசவாணியானது மேல்வருமாறு உண்டாயிற்று.

ஶிபெ ஸவஜ்ஜு ராஜஷெ ஶுணு தெ ஸவயா ஹிதத் ।
ஊதகூ ஸத்யாஜி ஶிவாஂ வாஸஹைதி ஸவயா ॥

வெஊஸவாஜிநொ ஜொகெ வ௫வஊதி ஸுராஸுராஃ ॥

கூதஸ்ஂ வவைவவைெஸ்ஸு வ௫ாவ்வாற ஸூஜுஊத்தஊத் ।
கூதைவ மஊதஊநொக்ஷஂ யஊஂ கூாகூா வியாநதஃ ॥

தெந வ௫ாஷூஸி கைவஜூஶிஹஜொகூ ஸுவாநி ச ॥

"ஸகலமும் அறிந்த சிபி சக்ரவர்த்தியே! ஹே ராஜரிஷே! முற்றிலும் உனக்கு ஹித (க்ஷேம) மாயிருக்கும் ஸமாசாரத்தைக் கேட்பாயாக; தேவர்கள் அசுரர்கள் வேதாந்திகள் முதலியோர் இந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸத்யாசலக்ஷேத்ரத்தை "பரப்ரஹ்ம" மென்று உலகத்தில் எப்பொழுதும் கூறுகின்றார்கள். நீ பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ய வசத்தினாலே இந்த உத்தம ஸ்தலத்தை அடைந்திருக்கின்றாய்; கௌதமரால் சொல்லப்பட்ட தர்மத்தை இவ்விடத்திலேயே சாஸ்திரோக்தமாய் அநுஷ்டிப்பாயாக; அதினால் இப்பூவலகின் ஸுகங்களையும் பின்னர் கைவல்யத்தை(நற்கதியை)யும் நீ அடைவாய்;" (என்பதாம்.)

ஊதி ஶ்ரூுகூா ஶிவிஷெஶ்வீ௦ வாசஊாகாஶஸ௦ ஹவாழ் ।
ஞுநடிஹஸாமைா-உஹஸ்ஹொஷ௦ வ்ராவஹ ஹுவதிஃ ॥

ஸதஹதீயெ தத்ஸாகூா ஹக்ஷ்ஹா வாஜயாய தஃ ।
ததுதஹா௦ஶ்ரு நஊஹஸ்ரதஹ ஊநீஞாந வெஊவாமாந ॥

வைெஊஹஸாெ ஊஹாதீயெ வஷ்ஊாஊவ ஜீவநெ ।
ஹிஊாஊவதொயெ ச ஸதூுஸஞ்ஜெவி ச ॥

ஞஹகூ்ணொஊகெ ஸ்நாகூா க்ஷீகூணெ தயைெவ ச ।
வவதொவஸி மஹாயா௦ ஸ்நாகூா ஹக்திஸஊிதஃ ॥

ஸவஷொஷவிநிஊக்ஷ்ஃ ஶஜாதஃகாணொ நரவஃ ।
ஞுஞுய௦ ச வ்ரவிஶஹாய ஊாகஊணெய௦ ஊஹாஊநிழ் ॥

ஊரஷ்ஹா நகூா வநஶ்ஹாநஹாந ஊநீஙெஊாஹவாமாந ।
ஶிஷஹகொடிஸஊாயக்ஷாந தீயயாதாயஊாமதாந ॥

நாஊாஊீந நரவொ ஹக்ஷ்ஹா வ்ரணஊஹ விநயாஙிதஃ ॥

ததுதஹ வைெஹவ௦ ஸவ௦ ஶ்ரூுகூா வைெநாஷெந த ।
ஊாஹாதஹ ஶ்ரவணாஷெவ ஸதஹாஜி ஶிவாஶ்ரயாகஃ ॥

கநருஹாநஹெஶஸஹ கரதகரதெஹாஹவஊரவஃ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்விதம் பிறந்த பரமசிவனுடைய அசரீரி வாக்கை சிபி சக்ரவர்த்திகேட்டு ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினவராய் பரம ஸந்தோஷத்தை அடைந்து. பின் மிகுந்த பக்தியோடு ஸத்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, வேதாத்யயன ஸம்பத்தோடு கூடிய அங்குள்ள முனீந்த்ரர்களை நமஸ்கரித்தார்; பிறகு புஷ்பம்போல் ம்ருதுவாயுள்ளதாயும் பனிபோல் குளிர்ந்துள்ளதாயும் இருக்கும் வைத்ய ஸாரம் என்னும் தீர்த்தத்திலும், புத்ர கூபம், ப்ரஹ்ம குண்டம், க்ஷீரகுண்டம் முதலியதான தீர்த்தங்களிலும், பர்வதத்தின் உச்சியிலுள்ள கங்கையிலும் பக்தியுடன் ஸ்நாநம் செய்து, ஸமஸ்த தோஷங்களினின்றும் விடுபட்டவராய் மிகவும் பரிசுத்தமாக்கப்பட்ட மனதுடன் அவ்வரசன் ஆலயத்திற்குள் ப்ரவேசித்தார். அவ்விடத்தில் மார்க்கண்டேய மஹாமுனிவரைக்கண்டு நமஸ்கரித்தார். இன்னும் சிஷ்யகோடிகளோடு தீர்த்தயாத்ரைக்கு வந்துள்ள வேதாந்த பாரகர்களான நாரநாதி முனீச்வரர்களையும் தரிசித்து மிக வினயத்தோடும் பக்தியோடும் வணங்கினார். அந்த க்ஷேத்ரத்தின் மாஹாத்ம்யத்தை (மஹிமையை) எல்லாம் நாரதமஹாமுனிவர் எடுத்துரைக்கக் கேட்டமையாலும், அவ்வுத்தம ஸ்தலத்தை அடைந்தமையாலும், அவ்விடத்தில் மஹேச்வரரின் அநுக்ரஹம் பெற்றமையாலும், சிபிசக்ரவர்த்தி க்ருதார்த்தராயினார்.

ப்ரஹ்மப்ரதிஷ்டாஞ்சைவ கரோமீதி மஹர்ஷயே |
விமாநம் ப்ரேஷயாமாஸ ப்ராஹ்மணாநயநோத்ஸுக: ||

காஶ்மீரவாஸிந: பஞ்சஶதஸஹஸ்ரா ஸமந்விதாந் |
ஸகுடும்பாந் ஸாக்நிஹோத்ராந் வேதஶாஸ்த்ரஸமந்விதாந் ||

ஸமாநய விமாநேऽஸ்மிந் மாஸமாத்ரேண ஸாரதே |
ஆநயேதி ப்ரேஷயித்வா ஸாரதிம் நரபதிஸ்தத: ||

"இவ்விடத்தில் ப்ராஹ்மண ப்ரதிஷ்டை செய்யப்போகின்றேன்" என்னும் எண்ணத்தினால் மிக்க ஸந்தோஷமடைந்த மனத்தினோடு, சக்ரவர்த்தி தன் விமானத்தை வரவழைத்து "காச்மீர தேசத்திற்குப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போய் அங்கே குடும்பிகளாயும் அக்னிஹோத்ரிகளாயும் ச்ருதி ஸ்ம்ருதி தர்ம சாஸ்த்ரங்களில் ப்ரவீணர் (தேர்ந்தவர்) களாயும் ஐந்நூறு ப்ராஹ்மணர்களை குடும்பத்துடன் இந்த விமானத்தில் ஏற்றிக்கொண்டு ஒரு மாதத்தினுள் அழைத்துவா" என்று தன் ஸாரதிக்குக் கட்டளையிட்டனுப்பினர்.

𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑌾𑌹𑍂𑌯 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌾𑌨𑌤𑌃 ।
[illegible] ॥

[illegible] ।
𑌕𑌾𑌰𑌯𑌾𑌮𑌾𑌸 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 [illegible] ॥

பின்னர் விச்வகர்மாவை அழைத்து ஸத்யாசலத்திற்கு ஈசான்ய திக்கில் மிக ச்ரேஷ்டமான பூமியில் வாஸ்து சாஸ்த்ரத்தை அனுஸரித்து நாற்சந்திவீதிகள் போட்டு மனைகள் அமைத்து பதினாறு வாசல்கள் அடங்கிய அநேகம் வீடுகளை ப்ராஹ்மணர்கள் வருமுன் முறைப்படி கட்டுவித்தார்.

𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌕𑍍𑌰𑌮𑍇𑌣𑍈𑌵 [illegible] 𑌗𑍃𑌹𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 ।
[illegible] ॥

𑌏𑌵𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌮𑌹𑌾𑌰𑌾𑌜𑍇 𑌸𑌮𑌾𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸𑌾𑌰𑌥𑌿𑌃 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌃 𑌪𑌞𑍍𑌚𑌶𑌤𑍈𑌸𑍍𑌸𑌾𑌕𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌮𑌨𑍀𑌷𑌿𑌭𑌿𑌃 ॥

𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑌾𑌨𑌂 𑌨𑍃𑌪𑌤𑌿𑌃 [illegible] ।
𑌸𑌾𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯𑌾𑌶𑍁 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿 ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
𑌇𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌗𑍃𑌹𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 [illegible] ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்த பர்வதத்தை வலம் வந்து வீடுகளுக்கு புண்யாஹவாசனம் செய்துவிட்டு ஸகல ஸம்பத்துகளும் நிறைந்த அவ்வீடுகளுக்குள் சிபிசக்ரவர்த்தி செல்லும்பொழுது, ஸாரதியானவன் ஐந்நூறு ப்ராஹ்மணர்களையும் விமானத்திலேற்றி அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். ப்ராஹ்மணர்களிடத்தில் விசேஷபக்தியுள்ள அந்த மகாராஜன், லோகபூஜ்யர்களான அந்த ப்ராஹ்மணர்கள் ஏறிவருகின்ற அவ்விமானத்தைப்பார்த்து அதிஸந்தோஷத்துடன் ப்ராஹ்மணர்களுக்கு ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து விட்டு, ஸ்வாமி ஸந்நிதானத்தில் உட்கார்ந்து கொண்டு "இப்பொழுது நான் செய்யும் பூமி தானத்தினாலே ஸுப்ரஹ்மண்யரும் அம்பிகா ஸமேதரான கருணாநிதி ஸத்யாசலாதீசரும் என் விஷயத்தில் எப்பொழுதும் ப்ரீதி அடையவேண்டும்" என்று ஸங்கற்பஞ் செய்துகொண்டு, வந்திருக்கும் ப்ராஹ்மணர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் ஒரு வீட்டையும் பூமியை (வயலை) யும் ஜலத்துடன் தாரை வார்த்து தானம் செய்தார்.

ஸகலம் ந ஶ்ரேஷ்டவாந் விப்ரோபமதாநாம் நரவஸ்தா ।
ஸாந்த்யேகம் ஶ்ரீஹம் ஶ்ரேஷ்டா ஷிஷ்யோவ நாஶாயிவ: ॥

கஹோ ஜெ வாவ ஶாஹ்மலாகு ப்ராஹ்மணோ நாமதோzத்ர ச ।
ஸக்ஷ்வஸ்ய வரயா ஹமயாகு ப்ரதஹஸ்ர ஜாயதெ ॥

க்ஷிஶொாஶி க்ஷ்வ ஶத்தாஶி கூத்ருவாzணெஷயாஶி ச ।
கத்ருத்யா ஹஸ்வாஸ்வெ வாநப்ரஸ்தாஶ்ரமிதா: ॥

உசாகல்யம் நாநாஶ்வரஞ்சி நிஸ்ஸ்வஹாஸஶவஜிதா: ॥

அவ்வாறு செய்யுங்காலத்தில், வந்த ப்ராஹ்மணர்களுள் ஒருவர் காணப்படாத்தினால் ஒரு வீடு ப்ரதிக்ரஹம் வாங்கப்படாமல் சூன்யமாயிருப்பதை அரசன் கண்டு அதிவிசாரத்துடன் மேல்வருமாறு கவலைகொண்டு ஆலோசிப்பாராயினார்; "எனது பாப வசத்தால் ஒரு ப்ராஹ்மணன் இங்கு வரவில்லை; நான் செய்த ஸங்கற்பம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபெருமான் "ஸத்யாசலாதீசர்" என்னும் பெயரினையுடைய பிராம்மண வடிவந்தாங்கி, மனைவி மக்களுடன் கூடி சிபிசக்ரவர்த்தி முன்தோன்றி க்ருஹதானம் வாங்கி அவரை ஆசீர்வதித்தல்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ்யர்த்தமாய்ப் போய்விடுமே! எனது விரதத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிட்டதே! யான் எங்கு செல்வேன்! என்ன செய்வேன்! எங்கே போய்த் தேடுவேன்! இங்குள்ள ப்ராஹ்மணர்களோ வானப்ரஸ்தாச்ரமத்தை அனுஷ்டித்தவர்களாய் ஆசையற்றவர்களாயும் பற்றற்றவர்களாயும் இருக்கின்றார்கள். எனது வார்த்தையைக் கேட்கிறார்களில்லையே?" என்று அரசர்கோன் இவ்விதம் துக்கப்பட்டு மூர்ச்சையடைந்தார்.

𑌇𑌤𑌿 𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍇 𑌭𑍂𑌪𑍇 𑌦𑍁𑌃𑌖𑌾𑌰𑍍𑌤𑌂 𑌚 𑌸𑌭𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 ।
𑌶𑌿𑌵𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌃 ॥

𑌨𑌾𑌨𑌾 𑌸𑌤𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌧𑍀𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌃 ।
𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌭𑌕𑍍𑌤𑌶𑌿𑌰𑍋𑌮𑌣𑌿𑌮𑍍 ॥

𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑍀 𑌸𑌮𑌾𑌗𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌗𑌂𑌭𑍀𑌰𑌯𑌾 𑌗𑌿𑌰𑌾 ॥

அவ்வேளையில் ஸாக்ஷாத் சிவபெருமான் தாமே ஒரு ப்ராஹ்மண வேஷம் தரித்து ஸகல வித்யா பாரங்கதராய் "ஸத்யாசலாதீசர்" என்னும் திருநாமம் பூண்டு, பக்தசிகாமணியான அவ்வரசன் செய்துகொண்ட சங்கற்பத்தை ஸத்யமாக செய்யவேண்டுமென்னும் திருவுள்ளங்கொண்டு, மனைவி மக்களோடு தோன்றி (ஸ்தலத்தை) பூமியை அபேக்ஷித்து வந்திருக்கின்றேன்" என்று அரசனிடம் கம்பீரமாய்ச் சொன்னார்.

𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ।
𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌂 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌮𑍁𑌦𑌾𑌰𑌧𑍀𑌃 ॥

𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑍇𑌣 𑌸𑌦𑌾𑌯𑌤𑍍𑌤𑌃 𑌕𑍃𑌤𑌾𑌦𑌰𑌾𑌹𑍃𑌤𑌿𑌸𑍍𑌵𑌰𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌚𑌾𑌰𑍈𑌃 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌯 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌦𑌦𑍌 𑌰𑌾𑌜𑌾 𑌤𑌦𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑌹𑌾𑌧𑌿𑌕𑌮𑍍 ॥

𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑌾𑌲𑍋 𑌗𑌤𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌯𑌂 𑌵𑍇𑌦𑌿𑌕𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌦𑌶𑌪𑌾𑌦𑌾𑌸 𑌤𑌤𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑍇 𑌦𑌿𑌵𑍋𑌕𑍍𑌸𑌃 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதவேதாங்கங்களின் உண்மையை அறிந்தவராயும், ப்ரஹ்மதேஜஸ்ஸால் ஜ்வலித்துக்கொண்டிருப்பவராயும், மனைவிமக்களோடு கூட வந்திருப்பவராயுமுள்ள அந்த ப்ராஹ்மணரைப் பார்த்து விசாலபுத்தியோடு கூடிய அவ்வரசன் ஆச்சர்யம் அடைந்து, தான் மிகவும் அதிர்ஷ்டசாலியென்று மனத்தினுள் நினைத்துக்கொண்டு, ப்ராஹ்மணோத்தமரை ஸகலவிதத்திலும் விசேஷமாய் உபசரித்துப் பூஜித்து, பூமி முதலிய ஸம்பத்துகளோடு கூட மீதியிருந்த கிருகத்தை அவர் கையில் தானஞ்செய்ய ப்ராஹ்மணரும் ப்ரதிக்ரகத்திற்குரிய மந்த்ரத்தைச் சொல்லி தானத்தைப் பெற்றுக்கொண்டார். உடனே மஹேச்வரர் ப்ரத்யக்ஷமாய் அரசனுக்குக் காக்ஷி அளித்தருளினர்.

ஹக்ஷ)ா வா௱வஜொ ஹூகூா வதிகூா ஓணுவஜ்ூவி ।
ஹூகூாzம ஷொத்ருவயெூஸ்ு ௱ாஜா வ௱ணாூஉநொ௱ம: ॥

தஷூள கூுதாஜுஹிஸூா०ப ஹூஉ௱வாஅ கூுவாகா௱: ॥

அரசனும் பக்தியினால் பரவசமாகித் தண்டாகாரமாக (தடி போல்) பூமியில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து, சிறந்த அநேகம் ஸ்தோத்ரங்களினாலே சிவபெருமானை ஸ்துதித்து, தனது மனோபீஷ்டம் நிறைவேறினவராய், அஞ்சலிபத்தராய் (கைகளைக் கூப்பிக் கொண்டு) நிற்க, அவரைப்பார்த்து கருணாநிதியான அம்பிகாபதி திருவாய் மலர்ந்தருளுவாராயினார்.

ஸஉ)க்ஷூுதஷூயா ௱ாஜந யஜெூா யஉூவிஊா० நுவ ।
வ௱ண)க்ஷெதெ அ ௱ாஜஷெூ ஸதாதெ ஹூஉிஊாநத: ॥

யஶாzஹஉிதஜொ௱யூஜைூநூத௱ஷ)ாஉி நு௱ாயிவ ।
தயா தெ கீதிூ௱த௱ஜா ஹவிஷ)தி ந ஸ०ஶய: ॥

கஸூ௱ உஙிஷயா ஹக்ஷிஜெூாகூ ஸாதூாஜ) ஊாயிநீ ।
ஐத)௱க்ஷூாzஹஉூயெ ஶ०ஹு: ஸத)ஜ்ஞாநமிஙீஸூ௱: ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"தர்மத்தை அறிந்தவர்களுள் சிரேஷ்டனான அரசனே! உன்னால் சிறந்த தர்மமானது நன்றாக அநுஷ்டிக்கப்பட்டது. ஹே ராஜரிஷே! மஹா புண்ய ஸ்தலமாயுள்ள இந்த க்ஷேத்திரத்தில் உத்தம ப்ராஹ்மணர்களுக்கு பூதானம் மூலமாய் நீ செய்த தர்மத்தினால் நன்கு திருப்தியுற்றோம்; மற்றைய தர்மங்களைச் செய்வதால் நமக்கு அவ்வளவு த்ருப்தி உண்டாக மாட்டாது; ஆதலினால் நிச்சயமாய் உனக்கு நிகரற்ற கீர்த்தி உண்டாகும்; இதில் ஸந்தேஹமில்லை. மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைக் கொடுக்கும் நமது விஷயமான பக்தியானது உனக்கு ஏற்படட்டும் என்று அநுக்ரஹித்துவிட்டு பகவான் ஸத்யஞ்ஞானகிரீச்வரர் அந்தர்த்யானமாயினர்.

கூதகூத்யம் தஷா ஜெநெ ராஜா ஹக்தஶிரோமணிஃ ॥
஬்ராஹ்மணாஸ்ச மஹாந் ப்ராப்ய ஸ்வைர்யம் ஸஂநிதாந் ।
ஆஶீர்வாதாம்ஸ்ச கூத்வாதி ராஜ்ஞஸ்தஸ்ய மஹாத்மநஃ ॥

பக்தசிரோமணியான அவ்வரசரும் தாம் செய்ய வேணுமாய்க் கருதியவைகளை எல்லாம் செய்துமுடித்தவராக எண்ணிக் கொண்டார். ப்ராஹ்மணர்களும் அவ்வரசனை நன்கு ஆசிர்வதித்து விட்டு அஷ்டைச்வர்யங்களோடு கூடிய தங்கள் வீடுகளை அடைந்தார்கள்.

அத ராஜா தஷாஶீஹிஃ ப்ரஸாதாமஂஜிகாவதைஃ ।
ஸஸ்ஷோஷ விநிஷ்க்ரஸ்ஸஸஂஸஸ்தஜிதஃ ॥
பந்ஸ் ஸெதர் வயஸ்ஸம் அவாப பாரதவிக ।
ஹ்ரஹ்மாநந்தம் ஹ்ரஹ்மாஸ்ந் தீயமாபரண வைஷவாக ॥
அரிகா விஷ்ணும் ஹரிம் ஸ்வஸம் ப்ராப்ய பர்ணஂகூதக ।
கஸ்வெயெந யஜ்ஞந தோஷயிகா ஶஹ்ெஸ்வர ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கைெறாஸஉமஃஸ வஸ்ராகஸ நிவிஜாநதூாயி நீழ ।
ஷாவயிகூா ச ஹைஒொகை கீதிஃஊாவநுதாரகூழ ॥

தைைவ ஶிவஸாயுஜ்யம் ஸம்வ்ராவாதஜகஉரஜ்ஊஹழ ॥

பின்னர் சிபிசக்ரவர்த்தி ப்ராஹ்மணர்களுடைய ஆசீர்வசனத்தினாலும் அம்பிகாபதியாகிய பகவானுடைய அநுக்ரகத்தினாலும் ஸகல தோஷங்களினின்றும் விடுபட்டு, ஸமஸ்த ஸம்பத்துகளோடும் கூடினவராய் மறுபடியும் யாத்ரை செய்து ஸேதுபர்யந்தமுள்ள க்ஷேத்ரங்களை தர்சித்தார். தீர்த்தயாத்ரையின் மஹிமையால் நவக்ரஹதேவகைளும் அநுக்ரஹ கிரஹங்களாகவே ஆய்விட்டன. விசாலமாயுள்ள பூமியில் தீர்த்தயாத்ரை செய்துவிட்டுத் தமது தேசத்தை அடைந்து புண்யசாலியான சிபி சக்ரவர்த்தியானவர்; அச்வமேத யாகத்தினால் மஹேச்வரரை த்ருப்தி செய்வித்து, பின் அளவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய கைலாஸத்தை அடைந்தார். சந்த்ரஸூர்யர்கள் இருக்கும் வரையில் நிலை நிற்கக்கூடியதான விசேஷமாயுள்ள தன் கீர்த்தியை பூமியில் ஸ்தாபித்துவிட்டு, எவர்க்கும் கிட்டுதற்கு மிகவும் அரியதான சிவஸாயுஜ்யத்தை அந்த சக்ரவர்த்தி அடைந்தார்.

ஸதாஉரஶெ ஊஹாக்ஷெதெ ஸத்ஜ்ஞாநாஹியாநகெ ।
நிவஸந்தி ச யெ ஊத்யூாஃ க்ஷணஊாதெ ச யஊதஃ ॥

ஶரண்வந்தி யெ ஸகூரதா தம் ஊஹிஊாநம் த்விஜொத்தஊாஃ ।
ஸத்யா தெஷாம் கூரஸ்தம் வை வரரஷாயஊ சதரஷ்யழ ।

(109½)

இதி ஸ்ரீ ஶைவெ ஊஹாவரணெ
ஸகாஉஶரஜ் ஸம்ஹிதாயாஊவஸிஹாஉெ க்ஷெத்ரவஜ்ஜெ
ஸத்ய்கிரிஊாஹாத்ம்யெ த்ரதீயொஉத்ய்ாயஃ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதலினால் "ஸத்யஞ்ஞானகிரி" எனப் பெயர் விளங்கிய இந்த மஹாபுண்ய க்ஷேத்ரத்தில் எந்த மனிதர்கள் நிமிஷகாலமாவது வஸித்து, தங்கள் சக்திக்கேற்ப தான தர்மம் செய்து, இந்த க்ஷேத்ர மாஹாத்ம்யத்தை (ஸ்தல புராணத்தை) மிகுந்த பக்தி சிரத்தையோடு ஒரு தடவையாவது கேட்கின்றார்களோ, ப்ராஹ்மண ச்ரேஷ்டர்களே! அவர்களுக்கு மோக்ஷ ஸாம்ப்ராஜ்யம் ஸித்திப்பதற்கு ஸாதனமான நான்கு [1]புருஷார்த்தங்களும் இவ்வுலகத்தில் கிடைக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. (109½)

மூன்றாவது அத்யாயம்

முற்றிற்று

[1] தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பன நான்கு புருஷார்த்தங்களாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அத சதுர்த்தோ(அ)த்யாய:

ஸூத:

புநரந்யத் ப்ரவக்ஷ்யாமி ஸத்யாத்ரி ஸ்தாந-வைபவம் ।
ஶ்ருண்வதாம் படதாம் ஸத்ய: ஸர்வபாபவிநாஶநம் ॥
காலவோ நாம தர்மாத்மா முநி: பரமதார்மிக: ।
மாத்ருபூஜா பரோ நித்யம் பித்ருபூஜா பராயண: ॥

ஸ்வதர்மேண தபஸ்தேபே ஶிஷ்யைஶ்ச வ்ரதசாரிபி: ।
க்ருஹாஶ்ரமோசிதோ தேவ்யா கௌதமீதீர உத்தமே ॥

நான்காவது அத்யாயம்

ஸூதர் சொல்வது:-

கேட்பவர்கள் படிப்பவர்களுடைய பாபத்தை உடனே நிவர்த்தி செய்வதாகிய இந்த ஸத்யாத்ரி (திருப்பரங்குன்ற) க்ஷேத்ரத்தின் மஹிமையை மறுபடியும் எடுத்துரைக்கின்றேன். (கேளுங்கள்.) தர்மசிந்தையுள்ளவராயும் மாதா பிதாக்களை உபசரித்துப் பூஜிப்பதில் எப்பொழுதும் விசேஷ பக்தியுள்ளவராயுமிருக்கும் காலவர் என்னும் முனிவர் தமது ஆச்ரமத்திற்கேற்ப நியமத்தோடு கூடிய சிஷ்யர்களுடன் மேன்மையான கௌதமி நதிக்கரையில் தன் தர்மத் திற்கேற்ற தபஸ் செய்து வந்தார்.

தஸ்மிந்க்ஷணே தைவாத்தைவத்யுதிருபாகத: ।
தம் த்ருஷ்ட்வாதீவ ஸந்துஷ்டோ காலவோ முநிபுங்கவ: ॥
அர்க்யாதிபி: பூஜயித்வா யதாவச்ச வராஸநே ।
ந்யஷேதயததித்யே ஸக்த்யா பர்யாயத: ॥

அந்தஸமயத்தில் தைவாதீனமாக "தைவத்யுதி" முனிவர் அங்கு வந்து சேர்ந்தார். காலவமுனிவரும் அவரைப் பார்த்து மிக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸந்தோஷமடைந்தவராய் அர்க்யம் பாத்யம் ஆசமனீயம் மதுபர்க்கம் முதலிய உபசாரங்களால் அவரை உபசரித்து மிகுந்த பக்தியுடன் விருந்திற்கழைத்தார்.

ஸைவஃ்யுதிஸ்து தஆாகூ்ஃ ஶ்ரு ஃகா ஹா மவதொதூஃ ।
தயைவாஸ்திதி தஂ வ்யாஹ வ்யஸதீர்யூ வைஹவஃ ॥

பாகவத சிரேஷ்டரான தைவத்யுதி முனிவரும் அவ்வார்த்தையைக் கேட்டு அப்படியே ஆகட்டுமென்று சொல்லி, அந்த ஸந்தர்பத்தில் தீர்த்த வைபவத்தைப்பற்றி அவருக்கு உரைக்க ஆரம்பித்தார்.

ஸைவஃ்யுதிஃ -

ஹொஹொ மாமுவ ஸவஜ்ஞ ஸவஜீவஃயாவா ।
ஶ்ரணுஷ்வ வசநஞ்தகு ஸாவயாநெந செதஸா ॥

தீர்யூயாத்ராவஸோஹஂ வை ஃவாஶி வரயிவீஶிஃ ।
கெஷாஹ ஸஶாஹ்யாவஞெ ஸெதுவஙநஃ ॥

தநயெ்ய து விஶிஷ்டாநி தீர்யூநி வ்யவஶி தெ ॥

தைவத்யுதி முனிவர் கூறுவது:-

“எல்லாவற்றையும் அறிந்தவரும் எல்லா ப்ராணிகளிடத்திலும் இரக்கமுள்ளவருமான காலமுனிவரே! நான் சொல்லும் இந்த வார்த்தைகளை ஸாவதானமான மனத்துடன் கேளும். நான் தீர்த்த யாத்ரை செய்வதில் விருப்புற்று இப்பூமியில் கேதாரம் முதல் ஸேது பர்யந்தம் ஸஞ்சாரம் செய்து வருகின்றேன். அதன் மத்தியிலுள்ள விசேஷ தீர்த்தங்களை உமக்குச் சொல்லுகின்றேன், கேளும்”.

கெஷாஹ வக்ஷாஂ தீர்யூஂ காஶ்யாஹ ஃணிகணிகா ।
வெணீ தீர்யூஂ வ்யாமெ து மயாயாஂ விதரதீர்யூகஃ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அலம்பஸே வஹ்நிதீர்த்தம் மணிகூடே த்ரிபுஷ்கரம் ।
ஸப்தாரண்யே ப்ரஹ்மதீர்த்தம் வடாரண்யே குஹாஶ்ரயம் ॥

காஞ்ச்யாம் வேகவதீம் சைவ ஸர்வதீர்த்தம் மஹத்தரம் ॥

ப்ரபாஸே வாருணம் தீர்த்தம் மாலவே ஸூர்யதீர்த்தகம் ।
ஶ்ரீமத்வ்யாக்ரபுரே புண்யே ஶிவகங்காஹ்வயம் பரம் ॥

ஶ்வேதாரண்யே ச காயத்ரீ மாயா மாயாவநே ஸ்ம்ருதா ।
காருண்யாம்ருதகம் தீர்த்தம் மத்யார்ஜுநேஶஸ்ய ஸந்நிதௌ ॥

ஶ்ரீகும்பகோண நகரே காவேர்யாம் சக்ரதீர்த்தகம் ।
சந்த்ரபுஷ்கரிணீ தீர்த்தம் ஶ்ரீரங்கே ச மஹத்தரம் ॥

வ்ருஷாத்ரௌ மஹாரண்யே நதீ நூபுரஸம்ஜ்ஞகா ।
ஸ்வர்ணபுஷ்கரிணீ தீர்த்தம் ஹாலாஸ்யே [illegible] ॥

ஸஹ்யாத்ரௌ ஸஹ்யதீர்த்தம் ச ஸ்வாமிபுஷ்கரிணீதி ச ।
ஸேதுபந்தே தநுஷ்கோடி லக்ஷ்மணாக்யம் மஹாஸர: ॥

[illegible] தாம்ரபர்ண்யாஸ்து [illegible] ।
பாபநாஶம் மஹாதீர்த்தம் ஹஸ்திதீர்த்தம் ச முக்திதம் ॥

த்ரிகூடாத்ரௌ மஹாரண்யே சித்ராநாமா நதீ ஶுபா ॥

"கேதாரத்தில் புஷ்கர தீர்த்தமும், காசியில் மணிகர்ணிகை, ப்ரயாகையில் திருவேணி, கயையில் பித்ருதீர்த்தம், அலம்புஸத்தில் வன்னிதீர்த்தம், மணி கூடத்தில் த்ரிபுஷ்கர தீர்த்தம், ஸப்தாரண்யத்தில் ப்ரஹ்ம தீர்த்தம், வடாரண்யத்தில் குஹாச்ரய தீர்த்தம், காஞ்சீபுரத்தில் வேகவதி தீர்த்தமும் மிக்க மஹிமை வாய்ந்த ஸர்வ தீர்த்தமும், ப்ரபாஸ க்ஷேத்ரத்தில் வருண தீர்த்தம், மாளவத்தில் ஸுர்ய தீர்த்தம், சிதம்பரத்தில் சிவகங்கா தீர்த்தம், ச்வேதாரண்யத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(திருவெண்காட்டில்) காயத்ரீ தீர்த்தம், சாயாவனத்தில் சாயா தீர்த்தம், மத்யார்ஜுனத்தில் காருண்யாம்ருத தீர்த்தம், கும்பகோணத்தில் காவேரி நதிக்கரையில் சக்ர தீர்த்தம், ஸ்ரீரங்கத்தில் மேன்மையாகிய சந்த்ரபுஷ்கரணி தீர்த்தம், வ்ருஷபகிரியில் (அழகர் மலையில்) நூபுரகங்கை, த்வாதசாந்த க்ஷேத்ரமாகிய ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தில் (மதுரையில்) ஸ்வர்ணபுஷ்கரிணீ தீர்த்தம் (பொற்றாமரை), ஸத்யாத்ரியாகிய திருப்பரங்குன்றத்தில் ஸத்ய தீர்த்தமும், ஸ்வாமிபுஷ்கரிணீ தீர்த்தமும், ராமேஸ்வரத்தில் தநுஷ்கோடியும் லக்ஷ்மண தீர்த்தமென்னும் பெரிய தடாகமும், அனந்தசயநத்தில் (திருவனந்தபுரத்தில்) தர்மாதர்ம தீர்த்தம், தாம்ரபர்ணியின் உற்பத்தியில் பாபவிநாச தீர்த்தமும் முக்தியளிக்கக்கூடிய ஹஸ்தி தீர்த்தமும், மஹாபுண்ய க்ஷேத்ரமாகிய திருக்குற்றாலத்தில் சித்ரகங்கை என்னும் நதியுமே யாம்".

க்ஷேத்ரம் வேகவதீ தீரே யச்ச ஸத்யவ்ரத ஸஞ்ஜ்ஞிதம் ।
ஹாஸ்த்ராஶைலே நைஜஸுதே ஹாஸ்யே ப்ரயோக்தம் ஸர்வஸித்திதம் ॥

தச்ச ஸர்வாவநிஷ்ச ஸாரம் ஸப்தஸ்ஸித்திகரம் பரம் ।
ஸர்வஸ்ரேயிகம் புண்யம் ஸர்வதீர்த்த ஸமாஶ்ரயம் ॥

ஶ்ரூயந்தே பஹுதீர்த்தாநி தத்ர ஸந்தி மஹாந்தி ச ॥

தீர்த்தாநாம் நவகம் தேஷு ப்ரஸித்தம் ஸர்வதந்த்ரயே ।
தேஷு ஸர்வோத்தமம் பும்ஸாம் ஸ்வர்கஸோபாநகம் ॥

கிரௌ பர்த்தா த்ருஹாமே கிந்திஶாநகோணகே ।
தீர்த்தம் சந்த்ரஸஸ்ஸாக்ஷாத் க்ஷயரோக விநாஶநம் ॥

ஸர்வரோகஹரம் ந்ருணாம் பூர்ணஸ்நாநபாநத: ।
தத்ர ஸ்நிதம் பயா புண்யம் பாஸபாத்ரம் த்ரிஜோத்தம ॥

கிந்நாஶ்யர்கம் ப்ரஹ்மதிஹாஸம் புராதநம் ।
ஸக்ருத்ஸ்நாநமாத்ரேண ஸர்வபாபவிநாஶகம் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"இவற்றுள் வேகவதிக்கரையில் மதுரைக்குத் தென்மேற்கிலே ஸத்யாசலம் என்னும் ஒரு க்ஷேத்ரத்தைக் குறிப்பிட்டேனே, அந்த க்ஷேத்ரம் உபநிஷத்தின் ஸாரமாய் விளங்குகின்றது. ஸகல ஸித்திகளையும் வெகு சீக்கிரத்தில் கொடுக்கவல்லது; விசேஷமான புண்ய ஸ்தலம். எல்லா தீர்த்தங்களுக்கும் இருப்பிடமாயது. அந்த க்ஷேத்ரத்தில் அநேக புண்ய தீர்த்தங்களிருக்கின்றன. அவைகளில் ஒன்பது தீர்த்தங்கள் மூவுலகங்களினும் பிரஸித்திபெற்றவைகள். பர்வதத்திற்குச் சிறிது வடகிழக்கிலே ஸகல வ்யாதிகளையும் குணமாக்கத்தக்க "வைத்யஸாரம்" என்னும் பெயருடைய தீர்த்தம் ஒன்றிருக்கிறது. அந்த தீர்த்தமானது சந்த்ரனுடைய க்ஷய ரோகத்தை நிவர்த்தி செய்திருக்கின்றது. அந்த தீர்த்தத்தில் ஸ்நாநம் பானம் தர்சனம் செய்வோர்களுடைய பிணிகள் யாவும், முக்யமாய் க்ஷயரோகமும் நீங்குகின்றன. ப்ராஹ்மண ச்ரேஷ்டரே! முன்னொரு காலத்தில் அவ்விடத்தில் நான் ஒரு மாஸ காலம் தாமதித்திருந்தேன்; ஒருதடவை கேட்ட மாத்திரத்தில் ஸகல துக்கங்களையும் போக்கடிக்கத் தக்கதும் மிக ஆச்சர்யமாயுள்ள, அந்த இடத்தில் நடந்த புராதன கதை ஒன்றிருக்கின்றது. (சொல்கின்றேன்; கேளும்.)'

வ⁻ரா ஓ்ராவிஉஷெஶீயொ ராஜா யஉ்வ⁻ராயணঃ ।
கொவிஓா⁻ஹுஜொநாஉ ஸவைவூஙுயூஸஊிதঃ ॥
விஶாஒுநமரெ ஹூிகூா ஶஶாஸ உஹதீம் உஹீஃ ॥

தஷிஹவஸரெ ஶைவாஉமஷ்யூா உ⁻நிவ⁻ஜவঃ ।
தஶா⁻ஊாமதொ யீஊாஒ ஶிவய௯ாந வ⁻ராயணঃ ॥

ஶிஷ்யைঃ வ௲ஶிஷ்யை௯ஸஹிதொ வெஉவெஊாஜவா⁻மைঃ ॥

முன் ஒரு காலத்தில் திராவிட தேசத்தில் ஸர்வைச்வர்யங்களும் பொருந்தினவனும் தர்மமார்க்கம் தவராதவனுமாகிய "கோவிதாரத்வஜன்" என்னும் அரசன் "விசாலபுரி" என்னும் நகரத்திலிருந்துகொண்டு அகண்ட பூமண்டலத்தை பரிபாலனம் செய்துவந்தான். அந்த ஸமயத்தில் சிவத்யானபராயணராயும்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பேரறிவுடையவராயும் உள்ள முனிசிரேஷ்டராகிய கும்பமுனிவரான அகஸ்த்ய மஹரிஷியானவர், வேத வேதாங்கங்களை நன்கு கரைகண்டிருக்கும் தமது சிஷ்யகோடிகளோடு தற்செயலாய் கோவிதாரத்வஜனுடைய அரண்மனை வாசலை அடைந்தார்.

𑌆𑌗𑌤𑌂 𑌕𑍁𑌮𑍍𑌭𑌜𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍𑌮𑌾 𑌦𑍈𑌵𑌮𑍋𑌹𑌿𑌤𑌃 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌾𑌭𑌿𑌗𑌮𑌨𑌂 𑌵𑌨𑍍𑌦𑌨𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌭𑌾𑌷𑌣𑌮𑍍 ॥
𑌨 𑌚𑌾𑌕𑌰𑍋𑌦𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍋𑌵𑌿𑌦𑌾𑌰𑌧𑍍𑌵𑌜𑍋 𑌨𑍃𑌪𑌃 ॥

மஹா பாபியும் தைவாதீனத்தினால் புத்தி இழந்தவனுமாகிய கோவிதாரத்வஜன், ஆசாரவாசலில் வந்திருக்கும் கும்பஸம்பவருக்கு எழுந்திருத்தல், எதிர்கொண்டழைத்தல், வணங்கல், ப்ரியவார்த்தை பேசுதல் முதலிய உபசாரங்கள் ஒன்றும் செய்தானல்லன்.

𑌤𑌸𑍍𑌯𑌾𑌵𑌮𑌾𑌨𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌥𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑍋 𑌮𑍁𑌨𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌶𑌿𑌷𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌹𑍂𑌯 𑌤𑌦𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌿𑌷𑍍𑌠𑌾𑌭𑌿𑌧𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥

𑌶𑌪𑌸𑍍𑌵𑍇𑌤𑌿 𑌨𑍃𑌪𑌂 𑌚𑌾𑌜𑍍𑌞𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌶𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑌤𑌾𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌯𑌥𑌾𑌗𑌤𑌂 𑌯𑌯𑍌 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌲𑍋𑌕𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 ॥

முனிவர் பெருமானாகிய கும்பமுனிவரும் அரசனால் செய்யப்பட்ட அவமானத்தினாலே வருத்தமுற்று, தர்மசிந்தனை பொருந்தியவரும் ப்ரஹ்மநிஷ்டருமாகிய "ப்ரம்மிஷ்ட" ரென்னும் தமது சிஷ்யனைப் பார்த்து, "இவ்வரசனை தேஹம் முழுவதும் வெண்குஷ்டம் உடையவனாகும்படி சபித்துவிடு" என்று ஆக்ஞாபித்துவிட்டு, உலகத்துக்கு அநுக்ரகம் செய்கின்ற விஷயத்தில் ஆசையுடையவராய் சீக்ரமாக வந்தவழியே திரும்பிவிட்டார்.

𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍇𑌣 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌿𑌷𑍍𑌠𑍋 𑌨𑍃𑌪𑌤𑌿𑌂 𑌤𑌦𑌾 ।
[illegible] ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருவின் உத்தரவுப்படி ப்ரம்மிஷ்டர் அரசனைச் சபித்து விட்டு மறுபடியும் குருவை அடைந்து நடந்த விஷயத்தை அவரிடம் தெரிவித்தார்.

ராஜா து யௌவநைஶ்வர்ய ப்ரமாதாஹங்க்ருதி தோஷத: ।
ஸாபேந ஹதஸௌஹஸ்தே ஶ்வித்ர குஷ்டதநு: க்ஷணாத் ॥

விசார்ய பஶ்சாத் ஸந்தப்த இதி சிந்தயா ॥

அரசனும், இளமை, செல்வச்செருக்கு, கர்வம், மமதை இந்த தோஷங்களினால் ஸம்பாதிக்கப்பட்ட ரிஷி சாபத்தின் பலனை உடனே அடைந்தவனாய், அந்த நிமிஷமே தேஹ விகாரத்தையும் வெண்குஷ்ட ரோகத்தையும் அடைந்தான். அதன்பின் நான் ரிஷியால் சபிக்கப்பட்டிருக்கிறேன்" என்று உணர்ந்து விசாரத்தையும் அடைந்தான்.

கஷ்டம் மோஹநிபாதேந் கஷ்டம் மே துஷ்டமாநஸம் ।
கஷ்டம் மே துர்ப்ரமத்தஸ்ய பஶ்ய பஶ்ய துராத்மந: ॥

ப்ராப்தம் ஶாபரூபா பாபாத் விரூபகரணாத்மகம் ।
ராஜ்யப்ரஷ்ட: கதம் ஜீவே லஜ்ஜிதோ ஹ்யவி ॥

பதிதோ மே நாஸ்தி ராஜ்யஸ்ய பாலநே ஸம்ஶய: ॥

இதி வ்யாகுல சித்தாத்மா பரிதப்ய ப்ரமாதேந பரிஜநை: ।
ப்ரணம்ய தீநயா வாசா ரக்ஷ ரக்ஷேதி சாப்ரவீத் ॥

"ஐயோ! கஷ்டம், என்னுடைய மயக்கத்தையும் கெட்ட மனதையும் என்னவென்று சொல்வேன்; பாக்யமற்ற துர்ப்புத்திக்காரனான எனது கஷ்டத்தைப் பாருங்கள்; நன் முன் செய்த பாவத்தினால் விரூபத்தைக் கொடுக்கக்கூடிய இந்த சாபமானது எனக்கு நேரிட்டது; ராஜ்யத்தை இழந்து லஜ்ஜைக்காளாகி நான் எவ்வாறு ஜீவித்திருப்பேன்! ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்கிற

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

விஷயத்தில் வம்சவிருத்தி செய்பவனாகிய புத்திரனும் எனக்கில்லையே! என்று புலம்பி, கலங்கிய மனமுடையவனாய், ப்ராஹ்மணோத்தமரை மறுபடியும் அடைந்து நமஸ்கரித்து, தீனமான குரலோடு "என்னை ரக்ஷித்தருள்மின், ரக்ஷித்தருள்மின்" எனப் ப்ராரர்த்தித்தான்.

ஸ்ரஹ்ஷொ ஶுநிஶாஜூ⁰ஷொ நரவெணைவம் ஸ்ராவாதிதஃ ।
ஶாகஹாவஶுவாமஸ்ர ஸ்ராஹ ஶாவாவஷாநகூ ॥

ப்ரம்மிஷ்ட முனிசிரேஷ்டர் அரசனால் இவ்வாறு ப்ரார்த்திக்கப்பட்டதும் பொறுமையை அடைந்து அவனுக்கு சாபவிமோசனத்தைச்சொல்ல ஆரம்பித்தார்.

கூயா ஸ்ராவாதிதொ யஷாதூநஸெஷஹீவதெ ।
ஶாவஶொக்ஷம் வஶாஜஸ்ர ராஜஸ்ர ஸ்ராவூிம் வநஸுதெ ॥

வாணஸ்ர ஜெஶெzஷூி ஷுஶுஹாங வவூதஷூதஸ்ர ஷஂஜூகஃ ।
ஷாக்ஷாதூிவஶயொ ராஜங வெஶாகவதிவாஜிதஃ ॥

ஶக்ஷிணெ வெமவதஸ்ராஷூ வாஶயொஜந ஶாதூகெ ।
ஶுஜூஷஸ்ர ஶக்ஷிணெ வாஷெவூ தஷெஸ்ராவஶி ஶஹாஹூதஃ ॥

வாதாஉமஹூாஷஶிமும் கூஶாராஜூா ஷஶாமதஃ ।
ஶஶூநாகூ ஷவூவாவநூம் ஷஶஹுஶுஶிதாவஹஃ ॥

அரசனே! நீ என்னை இவ்வாறு வேண்டிக்கொண்டமையால் சாபவிமோசனத்தையும் ராஜ்யத்தைத் திரும்பி அடையும் உபாயத்தையும் இப்பொழுது உனக்குக் கூறுகின்றேன், (கேள்); பாண்டியதேசத்தில் வைகை (வேகவதி) ஆற்றின் தென் பக்கத்தில் இரண்டரை மைல் தூரத்திற்கப்பால் மிக மேன்மை பொருந்தியதாயும் ஸாக்ஷாத் சிவ வடிவமாயும் வேதாந்தங்களால் வெளியிடப் பட்டதாயும் உள்ள, "ஸத்யாசலம் எனப் பெயர் பெற்ற க்ஷேத்ரம் ஒன்று இருக்கின்றது. அந்த ஸத்ய மலையின் உச்சியிலுள்ள கொடுமுடியின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தென்பாகத்தில் குமாரஸ்வாமியின் ஆக்ஞையினாலுண்டான அத்யத்புதமான பாதாளகங்கை என்னும் தீர்த்தமிருக்கின்றது. அது தரிசித்த மாத்திரத்தில் ஸமஸ்த பாபங்களையும் தீய செயல்களையும் போக்கக்கூடியது.

கெவஞூாதூா வ~ஈாவிஷ்ணு: கஸூாஹெ ஸரஷிஜைஹூத ।
தக ஷணெ நாஹிகஉஞூாஉஹூதஸுத~ஈாநந: ॥

வஸூாக வ்ஹூாவகூவாணிஉகூா ஹுகூா விஸெஷத: ।
ஜமஹூரஷ~உவாயஜெ கஷயஹூ உஹூாவ்ஹொ ॥

முன்னாளிலே! ப்ரளயகால முடிவில் சுத்தஸ்வரூபியான மஹா விஷ்ணுவானவர் உலகத்தை சிருஷ்டி செய்ய விரும்பினார்; தத் க்ஷணத்திலேயே நாபிகமலத்தினின்று ப்ரஹ்மாவானவர் உத்பவித்தார். பின்னர் அவர் சக்ரபாணியை நமஸ்கரித்து விசேஷமாய் ஸ்தோத்ரம் செய்து, மஹா ப்ரபோ! உலகத்தை சிருஷ்டி செய்யும் உபாயத்தை எனக்குச் சொல்லியருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்.

ஐதஷெ வஉஜெ விஷ்ணுவீக்ஷ வெயஸஉவ்வீக ।
ஹொஹொ வ்ஹுந ஜமக வஷு~ம் ஶிவவ~ஜாம் க~ஈ~ஷ்ஹொ ॥

தஹூ~ணஉஹஷணாவி யஜெணாநெந வஉஜ ।
ந வ்ராவம் ஸரஷி ஸாஉயம் தஸாஜெதொவவஉாஉஹூ ॥

தவொவாய ஹிதம் வ~ணம் ஶரண~ஷ்வ கஉஞூாஸந ॥

அப்பொழுது, மஹாவிஷ்ணுவானவர் ப்ரஹ்மாவைப் பார்த்துச் சொல்கிறார்; "ஹே! ப்ரஹ்மந்! உலகசிருஷ்டி உபாயம் பெறுவதற்காக நீர் சிவபூஜை செய்யவேண்டும். அப்புண்யவசத்தால் அல்லாது வேறு எவ்வித தர்மத்தினாலும் சிருஷ்டி ஸாமர்த்தியம் அடையத்தகாது. அதினால், ஹே கமலாஸநா! தபஸ் செய்வதற்குரிய உபாயத்தையும் அதற்கு யோக்யமாயுள்ள புண்ய ஸ்தலத்தையும் சொல்கின்றேன் கேட்பீராக."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

த்³வாத³ஶாந்தே ஸ்த²லே புண்யே ஸத்யாத்³ரிக்ஷேத்ரமுத்தமம் |
ஸ்தி²தம் தத்ர ஷண்முகே²ந ஸ்தா²பிதம் லிங்க³மைஶ்வரம் ||
ஸத்யபூ⁴தரநாதா²க்²யம் ஸர்வஸித்³தி⁴ப்ரதா³யகம் ||
தத்ர வாணீ தபஸ்தேபே பராஶக்தி ஸமுத்³ப⁴வா ||
த்வம் க³த்வா மஹாதீர்த²ம் த³ண்டே³ந குரு தத்ர ச |
தஸ்மிந் ஶைலே விக்⁴நராஜம் ப்ரதிஷ்டா²ப்ய யதா²விதி⁴ ||
விக்⁴நேஶம் ஶிவலிங்க³ம் ச தே³வ்யா ஸாகம் ஷடா³நநம் |
ஸம்பூஜ்ய விதி⁴வத்³ப⁴க்த்யா பஶ்சாது³த்³வாஹ்ய பா⁴ரதீம் ||
ஸ்ருஷ்ட்வா ஸ்ரஷ்டிகர்த்ருத்வம் லோகாதீ⁴ஶத்வமாப்நுஹி ||
புராஹம் தத்ர ஸத்யாக்²யம் ஸத்யாதீ⁴ஶம் ஸநாதநம் |
ஸம்பூஜ்ய தத்கடாக்ஷேண ப்ரகாஶாத்மஸ்வரூபவாந் ||

"புண்ய ஸ்தலமாகிய "த்வாதசாந்த" த்தில் (அந்தர்கதமாய்) "ஸத்யகிரி" என்னும் அற்புத க்ஷேத்ரம் ஒன்று இருக்கின்றது அவ்விடத்தில் ஷண்முகக் கடவுளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு "ஸத்யபூதரநாதர்" என்னும் திருநாமம் பூண்ட ஒரு சிவலிங்கம் உள்ளது. அந்த பகவான் ஸகல ஐச்வர்யங்களையும் ஸ்ருஷ்டியாதி சக்திகளையும் அளிக்கவல்ல மூர்த்தி. பராசக்தியின் அம்சபூதையான ஸரஸ்வதிதேவி அங்கே தவம் புரிந்தாள். நீரும் அவ்விடத்திற்குப் போய் உமது தண்டத்தினால் மஹாதீர்த்தத்தை உண்டுபண்ணி, அப்பர்வதத்தில் விக்னேச்வரரை விதி ப்ரகாரம் ப்ரதிஷ்டை செய்து, விநாயகரையும், ஷண்முகநாதரையும், உமாதேவியாரோடு பரமேச்வரனையும் பக்தியுடன் நன்றாய்ப் பூஜித்து, ஹே கமலோத்பவா! பின், ஸரஸ்வதியை விவாஹம் செய்துகொண்டு ஸ்ருஷ்டி கர்த்ருத்வத்தையும் ஜகதீசத்தையும் அடைவீராக. முன்னாளிலே நான் அவ்விடத்திற்குச் சென்று மூலப்பொருளாகிய ஸத்யாதீசரை ஆராதித்து அவர் கடாக்ஷத்தினால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உலகத்தை ரக்ஷிக்கும் ஸாமர்த்தயத்தை அடைந்தேன்", எனத் திருவாய்மலர்ந்தருளினர் கமலநாதர்.

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌮𑌲𑌾𑌨𑌾𑌥𑌸𑍍𑌸𑌹𑌾𑌦𑌾𑌯 𑌸𑌰𑍋𑌜𑌜𑌮𑍍 ।
𑌪𑌰𑌾𑌚𑌲𑌂 𑌸𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌪𑌰𑌶𑍈𑌲 𑌪𑌤𑌿𑌂 𑌶𑌿𑌵𑌮𑍍 ॥

𑌪𑍂𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨𑌨𑌾𑌮 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌹𑌰𑌿𑌃 ॥
[1]𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑌨𑍁𑌜𑍍𑌞𑌯𑌾 𑌶𑌂𑌭𑍋𑌃 𑌵𑌿𑌦𑍍𑌰𑍁𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌕𑌃 ।
𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌤𑌸𑍍𑌥𑍌 𑌶𑌙𑍍𑌕𑌰𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥

மஹாவிஷ்ணுவானவர் இவ்விதம் சொல்லி ப்ரஹ்மதேவரை அழைத்துக்கொண்டு பராசல க்ஷேத்ரத்தை அடைந்து பரசைல பதியாகிய பரமசிவனைப் பூஜித்து நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்து, பின் சம்புவின் ஆக்ஞையினால் "வித்ருமாஸ்யர்" எனப் பெயர் பூண்டு சங்கரருடைய ஸந்நிதானத்திலே மேற்குமுகமாய் எழுந்தருளினர்.

[2]𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌕𑍁𑌮𑌾𑌰 𑌕𑌾𑌸𑌾𑌰𑍇 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌧𑍀𑌃 ।
𑌧𑌨𑍁𑌶𑍍𑌚𑌤𑍁𑌶𑍍𑌶𑌤𑌾𑌨𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌶𑍁𑌭𑍍𑌰𑌾𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌸𑍍𑌯 𑌵𑌾𑌮𑌤𑌃 ॥

𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍

[1]𑌤𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌤𑌿 𑌵𑍈 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌵𑌿𑌦𑍍𑌰𑍁𑌮𑌾𑌸𑍍𑌯𑌃 𑌕𑍃𑌪𑌾𑌕𑌰𑌃 ।
𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌤𑌸𑍍𑌥𑍌 𑌤𑌤𑍍𑌰 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 ॥

𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍

[2]𑌪𑌤𑍁𑌙𑍍𑌗𑍇 𑌨𑌿𑌮𑍂𑌰𑍁𑌤𑌰𑌂 𑌗𑌿𑌰𑍇𑌰𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍍𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌕𑍋𑌣𑍇 𑌤𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍁𑌣𑍍𑌡𑌂 𑌮𑌹𑌤𑍍𑌤𑌰𑌮𑍍 ॥

𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌶𑍁𑌣𑍍𑌡𑌕𑍃𑌤𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌧𑌨𑍁𑌶𑍍𑌚𑌤𑍁𑌶𑍍𑌶𑌤𑌾𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌶𑍁𑌭𑍍𑌰𑌾𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌸𑍍𑌯 𑌵𑌾𑌮𑌤𑌃 ॥

𑌤𑌦𑍀𑌯𑌂 𑌲𑍋𑌕𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌚 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிஞ்சித்வாயவ்யே கோணே து தீர்த்தம் க்ருத்வா ஸ்வதண்டத: ।
தஸ்மிந் ஸ்நாத்வா விக்நராஜம் ப்ரதிஷ்டாப்ய விதாநத: ॥
கல்பவிக்நேஶ்வரேதி தஸ்யாக்யாமகரோத்விபு: ॥
ததா ப்ரப்ருதி விக்நேஶஸ்தஸ்மிந்நேவ ஸாதரம் ॥

பின்னர் ப்ரஹ்மாவானவர் குமார புஷ்கரிணியில் ஸ்நாநம் செய்து நிர்மலமான அறிவை அடைந்து, துர்க்காதேவியின் இடது பக்கமாகச் சிறிது வாயுமூலையில் நானூறு வில்லடி தூரத்திற்கப்பால் தனது தண்டத்தினால் "ப்ரஹ்மகுண்டம்" என்று ஒரு தீர்த்தத்தை உண்டுபண்ணி அதிலும் ஸ்நாநம் செய்து விதிப்ரகாரம் விக்னேச்வரரை ப்ரதிஷ்டை செய்து அவருக்கு கல்ப விக்னேச்வரர் எனத் திருநாமம் சாத்தினார். அதுமுதல் விநாயகமூர்த்தி அந்த இடத்திலேயே ப்ரஸந்நமாயிருக்கின்றார்.

வதார்த்தம் மஹிஷாக்யஸ்ய தாநவேந்த்ரஸ்ய சண்டிகா ।
புரா ஸத்யகிரிக்ஷேத்ரம் ப்ராப்தீர்த்தாவகாஹநம் ॥

சக்ரே தபஶ்ச பூஜாம் ச ஸத்யஶைலாதிபம் ப்ரதி ।
உமா ஹைமவதீ தத்ர தப: க்ருதவதீ புரா ॥

தைவவர்ஷப்ரமாணேந வர்ஷாணாம் த்ரயம் ததா ॥

முன்னொரு காலத்தில் சண்டிகாதேவியான துர்கா பகவதியானவள், ஸத்யகிரி க்ஷேத்ரத்தை அடைந்து ஸத்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து ஸத்யசைலாதிபரைப் பூஜித்து, தாநவராஜனான மஹிஷாஸுரனை வதஞ்செய்யக்கருதி, அந்த ஈச்வரனைக் குறித்து தேவ வருஷத்தில் மூன்று வருஷ காலம் தபஸ் செய்தாள்.

ததா ஸத்யாசலாதீஶஶ்சண்டிகாயை மஹேஶ்வர: ।
பரித்ராணாய தேவாநாம் ஸஜ்ஜநாநாம் த்விஜந்மநாம் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌰𑌿𑌮𑌹𑌿𑌷𑌸𑍍𑌯 𑌵𑌧𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌃 ।
𑌸𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵𑌾𑌯𑍁𑌧𑌂 𑌶𑍂𑌲𑌂 𑌦𑌦𑍌 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌰𑍍𑌧𑌶𑍇𑌖𑌰𑌃 ॥

𑌅𑌨𑍇𑌕𑌶𑍂𑌲𑌿𑌨𑍀𑌸𑌙𑍍𑌘𑍈𑌃 𑌪𑍍𑌰𑍇𑌷𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑌂𑌯𑍁𑌗𑍇 ।
𑌉𑌪𑌾𑌦𑌿𑌶𑌤𑍍𑌤𑌦𑍈𑌵𑌾𑌸𑍍𑌯𑍈 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌮𑌹𑌾𑌮𑌨𑍁𑌮𑍍 ॥

அப்பொழுது அந்த மஹேச்வரன், தேவர்கள் ஸாதுக்கள் ப்ராஹ்மணர்கள் முதலானவர்களை ரக்ஷிப்பதற்காகவும், தேவ சத்ருவான துஷ்ட மஹிஷாஸுரனைக் கொல்வதற்காகவும் சண்டிகா தேவிக்கு தமது சக்தி சூலம் மஹத்தான கதை முதலிய ஆயுதங்களையும் ப்ரஸாதித்தருளி, நிகரற்ற பஞ்சாக்ஷர மந்த்ரத்தையும் உபதேசித்து, அநேக சூலினிக் கூட்டங்களைச் சேர்த்துக்கொண்டு யுத்தத்திற்குப் போகும்படி அவளை பரமேச்வரன் அனுப்பினார்.

𑌅𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌵𑌾𑌸𑌵𑌾𑌃 ।
𑌸𑍍𑌵𑌤𑍇𑌜𑌾𑌂𑌸𑌿 𑌸𑍍𑌵𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑌿 𑌦𑌦𑍁𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈 𑌮𑍁𑌦𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥

அப்படியே ப்ரஹ்மா விஷ்ணு முதலாகிய மற்றைய எல்லா தேவர்களும் அதிஸந்தோஷத்துடன் தங்கள் தங்கள் தேஜஸ்ஸையும் ஆயுதங்களையும் சண்டிகாதேவிக்குக் கொடுத்தார்கள்.

𑌤𑌥𑌾 𑌸𑌾 𑌚𑌣𑍍𑌡𑌿𑌕𑌾 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑍀 𑌶𑌿𑌵𑌾 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌮𑌾𑌲𑍍𑌯𑌸𑍍𑌰𑌕𑍍 𑌦𑌿𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌸𑍍𑌸𑍁𑌶𑍋𑌭𑌿𑌤𑌾 ॥

𑌮𑌹𑌾𑌮𑌹𑌾𑌶𑍍𑌚𑌾𑌟𑍍𑌟𑌹𑌾𑌸𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍀 𑌜𑌨𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌮𑍍 ॥

அப்பொழுது ஸர்வ தேவர்களுடைய சக்திகளையும் ஆயுதங்களையும் தரித்தவளும் மங்களத்தைக் கொடுக்கிறவளும், திவ்யமான ஆடை ஆபரணங்கள் சந்தனம் புஷ்பமாலை முதலானவைகளை தரித்திருப்பதால் அதிக காந்தியுடன் பிரகாசிக்கின்றவளுமாகிய அந்த சண்டிகாதேவியானவள்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜனங்களுக்கு மிக்க ஆச்சர்யத்தைக் கொடுக்கக்கூடியதாய் அடிக்கடி அட்டஹாஸம் செய்தாள்.

[illegible] ।
[illegible] ॥

தேவதைகளின் சத்ருவாகிய அந்த மஹிஷாஸுரன் துர்கா தேவியைப் பார்த்து கோபமடைந்து தனது ஸைந்யங்களால் சூழப்பட்டவனாய் யுத்தஞ்செய்ய ஆரம்பித்தான்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

அப்பொழுது, ஸகல ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு ஸர்வ தேவதைகளின் ஸ்வரூபமாய், ஸமஸ்த தேவதைகளாலும் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு விளங்கும் துர்கா பரமேச்வரியானவள், ப்ரளயகாலாக்னிபோல கோபமுற்று அந்த மஹிஷாஸுரனுடைய சேனாதிபதியான சிக்ஷூரன் முதலிய அஸுரர்களையும் இன்னும் மற்ற கோடானுகோடி ஸைந்யங்களையும் நொடிப்பொழுதில் நாசம் செய்தாள்.

[illegible] ।
[illegible] ॥

பின் மஹிஷாஸுரன் சினம்கொண்டு மஹிஷ (எருமைக்கடா) ரூபத்தை எடுத்துக்கொண்டு ஸ்தாவரஜங்கமங்களான மூவுலகங்களையும் தனது பலத்தினால் கலங்கச்செய்தான்.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதனைப் பார்த்து துர்காதேவியானவள் கடுஞ்சினம் கொண்டு கையில் சூலத்தை ஏந்தி, மஹிஷாஸுரனைப் பாசத்தினால் கட்டி இழுத்துத் தன் பாதத்தினால் அவன் சிரஸை மிதித்து அமுக்கிக் கொண்டு, பெரிய சூலாயுதத்தினாலே (அவன் மார்பைக்குத்திப் பிளந்து) சீக்ரமாக அவனது ப்ராணனை அபஹரித்தாள்.

தஸ்யைவ வக்ஷஸ்யஸ்ராணி வஸ்யைஸ்மைதி ஸூஸஸ: ।
ஸ்துத்வா ஸுரா நிஜ ஸ்தானம் ஸ்வஸ்தானம் ப்ரதிஜக்முஸ்தே ॥

அந்தக் காலத்தில் ஆகாயத்திலிருந்து இந்த்ராதி தேவர்கள் புஷ்பமாரி வருஷித்து தேவியை ஸ்தோத்திரம் செய்துவிட்டு தமது இருப்பிடஞ் சென்றார்கள்.

ததா ப்ரப்ருதி ஸா தேவீ மஹிஷாஸுரமர்தினீ ।
ப்ரதான தேவதா ஜாதா ஸத்யாத்ரௌ ஸர்வஸம்மதா ॥

அதுமுதல் மஹிஷாஸுரமர்த்தினியாகிய துர்க்காபரமேச்வரியானவள் ஸத்யாத்ரி என்னும் திருப்பரங்குன்றம் க்ஷேத்ரத்திலுள்ள எல்லா தேவதைகளிலும் ப்ரதான தேவதையாய் அவ்விடத்திலேயே ஸாந்நித்யமாய் விளங்குகின்றாள்.

புரா ஹிரண்யகர்பஸ்ய ஸுதஸ்ய பரமேஷ்டின: ।
விவாஹார்த்தம் ஸரஸ்வத்யா ச்ரியா ஸஹிதோ ஹரி: ॥

ஸத்யாத்ரௌ ஸத்யஸங்கல்பஸ்ஸர்வைர்தேவைஸ்ஸமாகத: ॥

முன்னொரு காலத்தில் மஹாவிஷ்ணுவானவர், பரமேஷ்டி என்றும் ஹிரண்யகர்பரென்றும் பெயர் பெற்ற தனது புத்திரரான ப்ரஹ்மதேவருக்கு ஸரஸ்வதி தேவியை விவாஹம் செய்து வைக்கக் கருதி, லக்ஷ்மீதேவி ஸமேதராய், ஸமஸ்த தேவர்களையும் அழைத்துக் கொண்டு ஸத்யகிரிக்கு வந்து சேர்ந்தார்.

உத்வாஹார்த்தம் ஸமாரப்ய ப்ரஹ்மணம் ப்ரஹ்மணஸ்பதி: ।
ஹிரண்யகர்ப்ப மகவான் ஸத்யாத்ரிப்ரஸ்தாதத: ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



திருப்பரங்குன்றம் க்ஷேத்ரத்தில் விக்னேச்வரர், துர்க்காதேவி, ஸத்தியாசலேச்வரர், ஸுப்ரஹ்மண்யர், மகாவிஷ்ணு, கல்பவிநாயகர், நந்திமண்டபம் முதலிய ஆலயம் அமைப்பு.

பக்கம் - 102

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

अनुज्ञया चक्रपाणेः देवसेनापतेः प्रभोः ।
कश्यपात्रि भरद्वाजविश्वामित्रादि सत्तमैः ॥

व्यासादिभिर्वसिष्ठाद्यैः कल्याणाय समागतैः ।
ऋषिभिः परिवीतस्सन् सन्मुहूर्ते शुभे दिने ॥

विवाहारम्भकालीनं श्रीशस्य सत्यगिरिस्थले ।
[1]उद्वाहमङ्गलं सृष्टिकर्तृत्वं लभते विधिः ॥

தன்னுடைய விவாஹ ஆரம்பத்தில் வேதங்களின் பதியாகிய விக்னேச்வர மூர்த்தியை பூஜை செய்து ஷாட்குண்ய பரிபூர்ணரான ப்ரஹ்ம தேவரும் ஸ்ரீ ஸத்யாத்ரீச (ஸத்யகிரிநாத) ருடைய கிருபையால் ஸ்ரீ சக்ரபாணியால் அனுக்ரஹிக்கப்பட்ட பிரகாரம், ஸத்யகிரி ஸ்தலமாகிய திருப்பரங்குன்றத்தில், தேவஸேநாதிபதியான ஸ்ரீஸுப்ரஹ்மண்யர் ஸந்நிதானத்தில், திருக்கல்யாண மஹோத்ஸவ தரிசனத்தின் பொருட்டு வந்திருப்பவர்களான கச்யபர் அத்ரி பரத்வாஜர் விச்வாமித்ரர் ஸ்ரீவேதவ்யாஸர் வஸிஷ்டர் முதலான பூலோக தேவர்களான மஹரிஷிகளால் சூழப்பட்டவராய்க்கொண்டு, மங்களகரமான நல்ல தினத்தில் சுபமுகூர்த்தத்தில் ஸரஸ்வதி தேவியை விவாஹம் செய்துகொண்டார். இவ்விதமாய் விவாஹ மங்களத்தையும் ஸ்ருஷ்டி கர்த்ருத்வத்தையும் ப்ரஹ்மதேவர் அடைந்தார்.

वाग्विज्ञान स्वरूपा सा देवदेवाङ्गवासिनी ।
पतिं प्राप्याहि तथैव यथा कात्यायनी शिवम् ॥

पाठान्तरम्

[1]ततस्सत्यगिरीशानं सम्पूज्य तत्कटाक्षतः ।
वाग्विज्ञानकलाश्च सतां पाणिं गृह्य विधिवत्तदा ॥

उद्वाहमङ्गलं सृष्टिकर्तृत्वं च जगत्पतिः ॥

सम्प्राप्य स्वस्य लोकस्य ययौ भक्त्या सहात्मजः ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காத்யாயனிதேவி பரமேச்வரனை அடைந்ததுபோல, வாக்ரூபிணியும், ஞானரூபிணியும் வேத வேதாந்தங்களைக் கரைகண்டவளுமான அந்த ஸரஸ்வதி தேவியும், அந்த ஸ்தலத்திலேயே ப்ரஹ்மதேவனை பதியாக அடைந்தாள்.

ஸவெ௷ ச ஶ௱நயஷ்து ஓரஷா வைவாஹிகம் ஶ௱ஹ௶ ।
வெஓஶைஜ்யூ௱ஹகரெை௭ஃ ஞூஶீவ௷ாஶாஜ வ்ருசகிரெ௭ ॥

மஹரிஷிகள் எல்லோரும் விவாஹ மஹோத்ஸவத்தை தரிசித்து விட்டு பின்னர் மங்களகரமான வேத மந்த்ரங்களினால் ஆசீர்வாதங்களைச் செய்தார்கள்.

ஸொவி ஞூவாஶிஷம் ஒவீம் ஸவ௷விஓாஶயீம் வியிஃ ।
தீயூ௷ம் ச தத்ரு ஸம்ஷ்வாவ௮ ஸொகாநு௱ஹ் ஹ காஶயா ॥
ஷ்வயாஶ வ்ருதிவஓாஶ௱ ௭ெஓஶ ஒவாா ஸஹாத்ஶஹ௱௭ஃ ॥

ஸ்வயம்புவாகிய அந்த ப்ரஹ்மதேவரும் ஸமஸ்த வித்யாரூபிணியாகிய ஸரஸ்வதி தேவியையும் மஹரிஷிகளின் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு, லோகாநுக்ரஹார்த்தமாக அந்த க்ஷேத்ரத்தில் (1) "ப்ரஹ்மதீர்த்த" த்தையும் ஏற்படுத்திவிட்டு சீக்ரமாக தனது ப்ரஹ்மலோகத்தை அடைந்து தேவியோடு ஸுகமாயிருந்தார்.

ததீயூ௷ம் யஶ௷காஶாய௷ஶொக்ஷஶம் வா௱ஶாயகஃ ॥

கம் ச ஸதாாசஞூம் ஶாஜை மகா க்ஷிவ்ருஶநு௱தஶ ।
கரகா ஷ்நாநம் வ்ருஹக௭வெ தக க்ஷணாநூ௱கிஶெஷாவி ॥

"அரசனே! அந்த ப்ரஹ்ம தீர்த்தமானது தர்ம-அர்த்த-காம-மோக்ஷமாகிற நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கும் சக்தியுள்ளது; மனோபீஷ்டங்களை பூர்த்திசெய்யும் மேன்மை

[1] "சன்யாசிக்கிணறு" எனப் பெயர் வழங்கும் தீர்த்தம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருந்தியது. ஆகையால் நீரும் ஸத்யாசலத்திற்குப் போய் உத்தமமான அந்த ப்ரஹ்மகூபத்தில் ஸ்நாநம் செய்வீராகில் சீக்கிரத்தில் சாபவிமோசனம் பெற்று வெண்குஷ்டம் நீங்கி ஸுகமடைவீர்."

ஊதீரிஂ ஸஊநு³ஜ்ஞாவ௱ ஸ்ரூஹிஷெ வெஊவாாமஃ ।
யயா ஶதஂ யயள வஸ்ஊஶஸ்௱ாநு³ஊதெ ஸ்ஷிதஃ ॥

என்று இவ்வாறு அநுக்ரஹித்துவிட்டு, வேதங்களைக் கரை கண்டவரும் அகஸ்த்ய முனிவரின் சிஷ்யருமான ப்ரஹ்மிஷ்டர் வந்தவழி சென்று, பின் அகஸ்த்ய மகரிஷியின் உத்திரவுப்படி நடந்தார்.

ராஜா து³ தெந வாகெ௱ந ஸஞ்²ஷொ ஶைவயொஶதஃ ।
ஜவாக ஸத௱ாசலஂ ஶகா ஸ்ரஹகூ³ண்ஜஂ ஸஊெத௱ ச ॥

நகா ஸஜ்ஜு ஸகீவஂ ச ஸ்ராஹணாநாஊநு³ஹாக ।
ஸஂஸ்நாகா ஊ³ச௱தெ ஸஊ௱ஸ்ஸாவஷொஷாக கூ³ரவதஃ ॥

அரசனும் ப்ரஹ்மிஷ்டரின் வார்த்தையைக் கேட்டு மிக்க ஸந்தோஷித்து அதிர்ஷ்டவசத்தால் சீக்கிரமாய் ஸத்யாசல க்ஷேத்ரமென்னும் திருப்பரங்குன்றத்துக்குப் போய் ப்ரஹ்மகுண்டத்தை அடைந்து நமஸ்கரித்து, ப்ராஹ்மணர்களின் அநுக்ரஹத்தைப் பெற்று ஸங்கல்ப பூர்வமாய் அதில் ஸ்நாநம் செய்த மாத்திரத்தில் மஹரிஷி சாபத்தாலேற்பட்ட குஷ்டத்தினின்றும் விடுபட்டார்.

ஊாநாநி ஊகா விஸ்ரெ௱ஹஸ்ஸவூ தீயூாநஶாஹ௱ ச ।
நகா ஸத௱ாசலாயீஶஂ ஸு³ஸ்ரஹண௱ஂ ஸ்ரணஊ௱ ச ॥

ஸஞ்²ஷஃ ஸ்ரயயள ராஜா ஸ்வெஶஂ கெஷிதா தீயூயொஃ ।
ஸ்ரஶஸ௱ஊாநஃ ஸ்வஜநைஊூஹிஊாநஂ ஊஹாஜு³தஃ ॥

பின்பு மற்றைய தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்து ப்ராஹ்மணர்களுக்கு தானமளித்து ஸ்ரீ ஸத்யகிரீச்வரரையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியையும் தர்சித்து நமஸ்கரித்துவிட்டு, மிக ஸந்தோஷ சித்தனாய் அந்த க்ஷேத்ரத்தினுடைய மஹிமையையும் தீர்த்தத்தினுடைய மஹா ஆச்சர்யத்தையும் குறித்து தன் பரிஜனங்களோடு புகழ்ந்து கொண்டாடிக் கொண்டு, கோவிதாரத்வஜ மகாராஜன் தனது தேசத்துக்குத் திரும்பிச்சென்றார்.

தஹா தத்ர ஷூிதொஹம் ச க்ஷெத்ர தீர்த்ர வாணாயண: ।
ஸதக ஸவர்ம் ஊயாஷ்ரஷம் தீர்த்ர ப்ரஹவிநிஜிர்தெ ॥

தவ வைதநூயா வெ்ராக்ஷம் வர்ஸஹூாக ப்ராஹணோத்தஃ ॥

க்ஷேத்ரயாத்ரை தீர்த்தயாத்ரை செய்துகொண்டிருந்த நான் அக்காலத்தில் அவ்விடத்திலிருந்தேன். ப்ரஹ்மதேவரால் நிர்மாணம் செய்யப்பட்ட அந்த ப்ரஹ்மகூபத்தில் இப்போது சொல்லிவந்த ஆச்சர்யங்களெல்லாம் நடந்தபொழுது என்னால் நேரில் பார்க்கப்பட்டது. "ஹே ப்ராஹ்ம ணோத்தமரே! வார்த்தையோடு வார்த்தையாய் இந்த தீர்த்த மகிமையாவற்றையும் உமக்குரைத்தேன்".

உதி ப்ரொவாணெ விவெ்ரநெ் மாமுவொஉநிவ ஜவ: ।
ஸவெ்ராவசாரைஸ்ஸம்வ ஜ்ய நகூா வைவஷ்ரதிம் சிஜஷ ॥

வொஷயிகூா ஸவெநாஜெ ஸதர்ாதீ்ரஸெதி ஹகிிஊர ॥ (91)

உதி ஸ்ரீ ஸைவெ உஹாவாணெ
ஸகாஉமாஷ் ஸம்ஹிதாயாஉவரிஹாமெ க்ஷெத்ரவணெ
ஸதர்கிரிமாஹாதெ்ர் சதுர்வெ்ராzஸர்ாய:

என்று இவ்வாறு ப்ராஹ்மணச்ரேஷ்டரான தைவத்தியு முனிவர் கூற, அவரை காலவமுனி புங்கவர் ஸர்வோபசாரங்களாலும் பூஜித்து விருந்தளித்து நமஸ்கரித்து அனுப்பிவிட்டு, ஸத்யாசலேச்வரரிடத்தில் விசேஷ பக்தியுடையவராகி ஸுகமாய் பக்திசெய்து வந்தார். (91)

நான்காவது அத்யாயம்.

முற்றிற்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌅𑌥 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

𑌸𑍂𑌤𑌃

𑌏𑌤𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍 𑌪𑌾𑌪𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌪𑌠𑌨𑌾𑌦𑍍𑌧𑌰𑍍𑌮 𑌕𑌾𑌮𑌾𑌰𑍍𑌥 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌦𑌂 𑌦𑍇𑌵𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑌮𑌾𑌜𑍇 𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌚𑍍𑌛𑌿𑌵 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ।
𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌮𑌠𑍇𑌽𑌥𑌵𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑌠𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑍈𑌃 ॥

𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍈𑌶𑍍𑌚 𑌕𑌲𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 ॥

ஐந்தாவது அத்யாயம்

ஸூதர் சொல்கிறார்:-

"முன் சொன்னபடி ஈச்வரனால் கட்டளையிடப்பட்டவரான ப்ரஹ்மதேவர், ஸரஸ்வதியோடும், தேவர்களோடும் முனிக்கூட்டங்களோடும் கூடினவராகி சீக்ரமாய் பராசல க்ஷேத்ரம் வந்து சேர்ந்து, வைகாசி மாஸத்தில், குமாரஸரஸ் என்னும் சரவணப் பொய்கைக் கரையில் மூன்று அச்வமேதயாகங்களை விதிப்படி செய்துமுடித்து, ஹே சௌநகாதி மஹரிஷிகளே! அந்த புத்திமானாகிய ப்ரஹ்மதேவரானவர், யக்ஞேச்வரனும் மஹேச்வரனும் பராத்பரனுமாகிய ஸத்யாசலேச்வரரைப் பூஜித்துத் த்ருப்தி செய்து வைத்தார். பிறகு தேவதச்சனாகிய விச்வகர்மாவை வரவழைத்து, ஷண்முகப்பெருமானுக்கு மஹாரதம் ஒன்று நிர்மாணம் செய்வித்து, மங்களகரமான கார்த்திகைமாஸத்தில் கார்த்திகை நக்ஷத்திரத்தன்று நல்ல முகூர்த்தத்திலே, ரொம்ப விசேஷமான உபசாரங்களோடும், சங்கம் துந்துபி ம்ருதங்கம் படகம் முதலிய நானாவித வாத்தியங்கள் கோஷிக்கவும், வாய்ப்பாட்டு சதர் வாத்யம் முதலிய நானாவித சங்கீத வைபவங்களோடும், அகஸ்த்யாதி மஹரிஷிகள் செய்யும் ஸ்வஸ்திவாசனங்களோடும், சைவாகம விதியை அறிந்தவர்களும் வேதவேதாந்தங்களைக் கரை கண்டவர்களுமான ப்ராஹ்மணர்களால், ஸர்வ ஜனங்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியதான ரதோத்ஸவ மஹோத்ஸவத்தை, ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்கு, வெகு விமர்சையுடன் நடத்திவைத்தார். ஸத்யகிரிநாதரான குஹ பரமாத்மாவின் க்ருபையால் பொய் சொன்னதினாலுண்டாகிய தோஷத்திலிருந்து விடுபட்ட ப்ரஹ்மதேவரானவர், கோடிக்கணக்கான பார்த்திவ லிங்கங்களை (சிவலிங்கங்களை) ப்ரதிஷ்டை செய்து, விதிப்ரகாரம் பஞ்சாக்ஷர மந்த்ரத்தினாலே பூஜை செய்து, ஹே மஹரிஷிகளே! பசுபதியாகிய பரமசிவனுடைய அநுக்ரஹத்தினாலே உத்தமோத்தமமான பதத்தை-அடைந்து, தேவகணங்களோடு கூட முன்போல தமது மேலான ஸ்தானத்தை சீக்ரமாய்ச்சேர்ந்தார்".

தஸ்மாத் ஸத்யகிரிச்ரேஷ்டே ப்ரஸித்தம் ப்ரதிஹாயநம் ।
ஸுரவர்க் கார்த்திகேயஸ்ய ப்ரஹ்மா ஹ்யகாரயதுத்ஸவம் ॥
பாபவ்ருக்ஷவிநாசஸ்ய குஹஸ்ய பரமாத்மந: ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



திருப்பரங்குன்றத்தில் ப்ரஹ்மதேவர் அசுவமேதயாகமும்
கோடிலிங்க ப்ரதிஷ்டையும் செய்து சபாவிமோசனம் பெறல்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ஹே ஸௌநகாதி மஹரிஷிகளே! அது முதல் பராசல நாதரான குஹஸ்வாமிக்கு, கார்த்திகேய பரமாத்மாவிற்கு, ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்கு, வருஷந்தோறும் ப்ரஹ்மோத்ஸவம் என்ற ரதோத்ஸவமானது உலகத்தில் ப்ரஸித்தமாயிற்று".

𑌯 𑌊𑌰𑍍𑌜𑍇 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑍁 𑌪𑍁𑌣𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑍇 ।
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌕𑍁𑌮𑌾𑌰𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌶𑌤𑌪𑍍𑌰𑌦𑍇 ॥
𑌪𑍍𑌰𑌭𑍁𑌂 𑌸𑌕𑌲𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌤𑌾𑌰𑌕𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ।
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌨𑍁𑌜𑌾 𑌲𑍋𑌕𑍇 𑌸𑌕𑍃𑌦𑌾𑌪𑌿 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃 ॥
𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌪𑌤𑍍𑌸𑌹𑌿𑌤𑌾𑌃 ।
𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑌰𑌮𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌶𑌾𑌙𑍍𑌕𑌰𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌮𑍍 ॥

"ஹே மஹரிஷிகளே! உத்தமோத்தமமான பராசல க்ஷேத்ரத்தில் கார்த்திகை மாஸத்தில் க்ருத்திகா நக்ஷத்திரத்தன்று, அநேகம் ப்ராஜாபத்யக்ருச்ரபலத்தைக் கொடுக்கிறதான சரவணப்-பொய்கையில் ஸ்நாநம் செய்து, எல்லா தேவர்களுக்கும் ரக்ஷகரும் தாரகாஸுரனை ஸம்ஹாரம் செய்தவரும் தாரகப்ரஹ்ம ரூபியுமான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியை, உலகத்தில் ஒரு தரமாவது தரிசனம் செய்கிறவர்கள், எல்லா துக்கங்களிலிருந்து விடுபட்டவர்களாகி ஸகல ஸம்பத்துக்களோடும் கூடி வாழ்ந்து, தேகாந்தத்தில் ரொம்ப மேலானதும் அழிவற்றதுமான பரமசிவன் பதத்தை அடைகிறார்கள்.".

𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑌤𑍍𑌯𑌾𑌚𑌲𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌚𑌰𑌿𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾 𑌵𑍍𑌰𑌤𑌮𑍍 ।
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌮𑌨𑍁𑌜𑍋 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥

ஸத்யாசல க்ஷேத்ரத்தில் ப்ரஹ்மதேவரால் அனுஷ்டிக்கப்பட்ட க்ருத்திகா வ்ரதத்தை பக்தியோடு அநுஷ்டிக்கின்றவன் ஸகல அபீஷ்டங்களையும் அடைவான்.

𑌨𑌾𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌨 𑌦𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑍍𑌯𑌂 𑌨𑌾𑌪𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌭𑌯𑌨𑍍𑌤𑌥𑌾 ।
𑌨𑌵𑍍𑌯𑌾𑌧𑌯𑍋 𑌨𑌾𑌰𑌿𑌭𑍀𑌤𑌿𑌃 𑌨𑌾𑌨𑌪𑌤𑍍𑌯 𑌭𑌯𑌨𑍍𑌤𑌥𑌾 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நரவாஹி வொாகீாூ வநாஉஹ0தாஜிஹிஷயா ।
ஸாஜுஸஹிாயெஹெ நாவி ஊு-வம் ந ஹவதிசிஜா: ॥
வனெ வாாசஞெஷதெ கூதிகாவூ தவாஸிணாஂ ॥

"ச்ரேஷ்டமான பராசலக்ஷேத்ரத்தில் க்ருத்திகா வ்ரதத்தை அநுஷ்டிக்கிறவர்களுக்கு, ஹே மகரிஷிகளே! அமங்களமேனும், தரித்ரமேனும், அபம்ருத்யு பயமேனும், வ்யாதியேனும், சத்ருபயமேனும், பிள்ளை இல்லை என்கிற வ்யஸனமேனும், அரசர்களாலும் தீயினாலும் திருடர்களாலும் ஜலத்தினாலும், பாம்பு முதலிய விஷ ஜந்துக்களாலும், பிசாசு முதலிய பூதங்களாலும், பயமேனும், கிடையாது. அப்படியே நாக பயமும் கிடையாது. இது நிச்சயம்".

ஜஷய:

ஸ்நூஸ வெவெவஸ வாம் வீதிகாம் ஊஹகூ ।
கூதிகா வூதஊஹாத்ஓம் வக்ஷு ஊஹாூஸி ஸாவூஊஂ ॥
யஊஹிதந ஊஹாஹாம வூதாஙாஊநாதஊஂ ॥

சௌநகாதி மஹரிஷிகள் கேட்கிறார்கள் :-

"ஹே ஸூதமஹரிஷே! தேவாதிதேவனாகிய ஸ்கந்த பரமாத்மாவிற்கு மிக்க ஸந்தோஷத்தை உண்டு பண்ணுகிறதும் ரொம்ப விசேஷமானதுமான க்ருத்திகா வ்ரதத்தினுடைய மகிமையை இப்பொழுது சொல்லவேண்டும்", என்று ப்ரார்த்தித்தார்கள்.

ஸூத:

கூயாஊ ஊஹாதாநொ ஊநயஸ்ஸுரணாதாஊாகூ ।
வூதாநி தீணி ஸஹீஸ தநயஸ வாாதந: ॥
மாஹஸ காணாஸிஸொாஸ்ஸவூஸிஃகாாணி ச ।
கூதிகாஹவூதம் ஸ்ரேஷும் ஷஷீவூதஊநாதஊஂ ॥
பாகூவாா வூதம் வெதி வூஸிஃம் விஷவதுயெ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸூதமஹரிஷி சொல்லுகிறார்:-

"மகான்களாகிய ஹே சௌநகாதி மஹரிஷிகளே! நீங்கள் கேட்டதைச் சொல்லுகின்றேன், ஆதரவுடன் கேளுங்கள். கருணைக் கடலும் ஈச்வர குமாரனும் குஹபரமாத்மாவுமான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினுடைய மூன்று வ்ரதங்கள், க்ருத்திகா நக்ஷத்ர வ்ரதமென்றும், ஷஷ்டி வ்ரதமென்றும், சுக்ரவார வ்ரமென்றும், இம் மூன்று வ்ரதங்களும் மேலான ஸர்வ ஸித்திகளையும் கொடுக்கிறவைகளாய் மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்றுள்ளன.

வ்ருதாநாம் சைவ ஸவெ௫ஷாஶு௱த்தஶம் க்ருத்திகா வ்ருதழ் ।
யஸ்யாநுஷ்டாந ஶாதைூண வாஜவெய ஸ௫ம் ஹவெக் ॥

ஊஜெ௫ஶாஸ்ய வளஷெ௵ வா ஶாஜ்௫நெ வாய ஶாயவெ ।
யஜிநம் க்ருத்தியா யுக்தம் தக் வ௨வ௫ ஶிவஸெ வ்ருதீ ॥

ஊகஹு௱ஜ் நியஜொவெதஃ ஸுருஹசய௫ வ௱ாயணஃ ।
ஸம்வுராத்தெ க்ருத்திகாதாா ஶிவஸெ த௱ ஶ௱ஹாவஹெ ॥

உஷஸெ௵வ ஸ௫௱கூாய ஸ்நாந ஸஙு௵ாஶி கஶ௫ ச ।
விமாய விமிவத்வுாக் ஸுுாஹணாரு ஹொஜயெச௱ாரு ॥

தாம்ப௱௯ ஶக்ஷிணாஹு௵ாம் ச வீுணயிக்ஷா யமாப௯௫ழ் ।
வுஶக்ஷிண நஶக்ஷ௱ாஸொ௱ஃ வுாமாயெக் வுயதொ வ்ருதீ ॥

ஶூா௱வெஸ௵க்ருத்திகாதாா வ்ருதம் ஹ௯ஸ௱௱ ஸதுஶாஃ ।
க௱வ௫ஷுநு௱ஶ்ரு ஹம் வீுத௵ா வ்ருதம் ஸாஜ்ஜம் ஹவக்ஷிதி ॥

வுாமாயிகைவஶாசாய௫ஶ௱வதஸு௱ ஸஶாஹிதஃ ।
ஸ௫௱வொஷ௵ ஶிநாஜெ த௱ ஸ்நாக்ஷா ஸஙு௵ாஶ௱வாஸ௵ ச ॥

க௱ம் ஹம் ஸம்ஹுாவ௵ விமிவக் காத௫ஷுண௫ஶயீம் ஶ௱ஹாழ் ।
வுதிஶாம் க்ஷுநு௱௯வாம் ச ஹுாவெ௵ாவமி ஶ௱ஸொ௱ஶ௫௱வாக் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யதுக்த விதிநா யஸ்ய வாஜபேய ஃபலம் லபேத் ।
ஸர்வேஷாம் வ்ரதானாம் ச க்ருத்திகா வ்ரதமுத்தமம் ॥

ஹவிஷ்யம் வாபி பக்ஷ்யம் வா ஸக்ருத்புக்த்வா விதாநத: ।
ஸமாசரேத் க்ருதீ ஸம்யக் வ்ரதோத்யாபந கர்ம ச ॥

ஏவம் யேந க்ருதம் ஶ்ரீமத் க்ருத்திகா வ்ரதமுத்தமம் ।
ஸர்வாந் காமாநவாப்யைவ ஸ்கந்தஸாயுஜ்யமஶ்நுதே ॥

எந்த வ்ரதத்தை அநுஷ்டானம் செய்தமாத்திரத்தினாலே வாஜபேய மென்கிற யாகம் செய்த பலனுண்டாகிறதோ, அப்பேர்ப்பட்ட க்ருத்திகா நக்ஷத்ர வ்ரதமானது எல்லா வ்ரதங்களுக்கும் மேலானதாயிருக்கிறது. கார்த்திகை மாஸத்திலாவது, தை மாஸத்திலாவது பங்குனி மாஸத்திலாவது வைகாசி மாஸத்திலாவது, எந்த தினத்தில் கார்த்திகை நக்ஷத்ரம் வருகிறதோ அந்த தினத்திற்கு முதல் நாள், வ்ரதம் அனுஷ்டிப்பவன் ஒருவேளை போஜனம் அருந்தி, விஷயாதிகளில் (ஸ்த்ரீ ஸம்ஸர்க்கம் முதலியவைகளில்) இச்சை இல்லாதவனாக நியமத்துடன் இருக்கவேண்டும். மங்களகரமான கார்த்திகை நக்ஷத்ர தினம் வந்ததும் உஷ:காலத்தில் (விடிய ஐந்து நாழிகைக்கு) எழுந்திருந்து ஸ்நாந ஸந்த்யாவந்தனாதி நித்யகர்மா-னுஷ்டானங்களை விதிப்படி செய்து முடித்துக்கொண்டு, பெரியோர்களாகிய ப்ராஹ்மணர்களுக்குத் தன் சக்திக்குத் தக்கபடி போஜனம் செய்வித்து தக்ஷிணை தாம்பூலாதிகள் கொடுத்து த்ருப்தி செய்துவைத்து, அவர்களை வலம்வந்து நமஸ்காரம் செய்துவிட்டு, வ்ரதம் அனுஷ்டிப்பவன் ரொம்ப நியமத்தோடும் பயபக்தியோடும் கூடினவனாகி அந்த ப்ராஹ்மணர்களைப் பார்த்து "ஹே ப்ராஹ்ம-ணோத்தமர்களே! இந்த வ்ரதமானது ஸாங்கமாய் நடக்கும் படி தாங்கள் ப்ரீதியுடன் அநுக்ரஹஞ் செய்யவேண்டும். நான் வ்ரதம் ஆரம்பிக்கிறேன்," என்று சொல்லி ப்ரார்த்தனை செய்ய வேண்டியது. இவ்விதம் ஆசார்யரையும் ப்ரார்த்தித்த பின்னர், அடங்கின மனமுடையவனாகி, அவர் (ஆசார்யர்) சொன்னபடி பகல் உபவாஸமிருந்து சாயங்காலத்தில் ஸ்நாநஸந்த்யாவந்தனாதி-

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

களைச் செய்து முடித்துக்கொண்டு, விதிப்படி கும்பத்தை ப்ரதிஷ்டை செய்து, மங்களகரமானதும் தங்கத்தினால் செய்யப்பட்டதுமான ஸுப்ரஹ்மண்ய ப்ரதிமையை ஆசார்யர் சொல்லுகிறபடி கும்பத்தின் மேல்வைத்து ப்ராணப்ரதிஷ்டை முதலிய செய்து, கார்த்திகேயனாகிய ஷண்முகமூர்த்தியை கல்பத்தில் சொல்லியிருக்கும் விதிப்படி பூஜைசெய்து, மறுநாள் காலையில் பாரணை செய்யவேண்டும். மாஸந்தோறும் இதேவிதமாய் பூஜை செய்யவேண்டியது. இந்த வ்ரதம் செய்கிறவன் ஆரம்பகாலத்தில் ஆறு வருஷமாவது அல்லது ஒரு வருஷமாவது இவ்விதம் வ்ரதத்தை அநுஷ்டிப்பதாய் ஸங்கல்பம் செய்துகொண்டு ஆரம்பித்துச் செய்துவந்து, விதிப்படி இந்த வ்ரத ஸமாப்தியையும் நன்றாய்ச் செய்து முடிக்கவேண்டியது. இந்தப்படி மங்களகரமும் உத்தமமுமான இந்த கார்த்திகை வ்ரதமானது எவனால் அநுஷ்டிக்கப்படுகிறதோ, அவன் இஹ லோகத்தில் ஸகல அபீஷ்டங்களையும் அடைந்து வாழ்ந்து, சரீர முடிவில் ஸ்கந்த ஸாயுஜ்யத்தை அடைகிறான்.

𑌵𑍍𑌰𑌤𑌦𑌾𑌨 𑌤𑌪𑍋𑌯𑌜𑍍𑌞 𑌜𑌪 𑌹𑍋𑌮𑌾𑌰𑍍𑌚𑌨𑌾𑌨𑌿 𑌚 ।
𑌜𑌪𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌨𑌿𑌯𑌮 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑌂𑌤𑌰𑍍𑌪𑌣𑌾𑌨𑌿 𑌚 ॥

𑌕𑍃𑌤𑌾𑌨𑌿 𑌸𑌤𑍍𑌯𑌗𑌿𑌰𑌿𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌕𑌾𑌨𑌿 𑌚 ।
𑌬𑌹𑍁𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍍𑌯𑌾𑌸𑌨𑍍 𑌜𑌨𑌯𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌵𑍈𑌭𑌵𑌾𑌤𑍍 ॥

𑌜𑌨𑍍𑌮𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌭𑌯𑍋𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨 𑌜𑌨𑍍𑌤𑍁𑌰𑍍𑌯𑌃 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌸𑌤𑍍𑌯𑌾𑌚𑌲𑍇 𑌶𑌿𑌵𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌸𑌂𑌸𑌾𑌰𑌭𑌯𑌹𑌾𑌰𑌿𑌣𑌾 ॥

“ஹே சௌநகாதி மஹரிஷிகளே! ஸத்யகிரி க்ஷேத்ரத்தில் செய்யப்பட்ட வ்ரதங்கள், தானங்கள், தபஸ்கள், தர்மங்கள், ஜபங்கள், ஹோமங்கள், பூஜைகள், யாகங்கள், நியமவேதாத்யயனங்கள், ப்ராஹ்மண போஜனங்கள், இவைகளெல்லாம் ரொம்ப ஸ்வல்பமாக இருப்பினும் இந்த க்ஷேத்ரத்தின் மஹிமையால் வெகு புண்யங்களைத் தருகின்றவைகளாக ஆகின்றன. ஆகையால் ஜனன மரணங்களில் பயத்தை அடைந்தவனாலே ஸத்யாசல மென்னும் சிவக்ஷேத்ரத்தில்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ரொம்ப முயற்சியோடாயினும் ஸ்வல்பமாயாவது தர்மம் செய்யத்தக்கது".

க்ஷேத்ராஶயா வா வநிதாஶயா வா
தநாஶயா வா தஸ்கரவ்ருத்த்யா வா |
முஹூர்த்தமாத்ரம் வஸதாம் நராணாம்
ஶரீரபந்தோ ந பராசலேஸ்தி ||

"மண்ணாசையினாலேனும், பெண்ணாசையினாலேனும், பொன்னாசையிலேனும், திருட்டுத்தன ஜீவனத்தில் ஆசையினாலேனும், ஒரு முகூர்த்த காலமாவது இந்த பராசல க்ஷேத்ரத்தில் வஸிக்கும் மனுஷ்யர்களுக்கு ஜனன மரண பயம் கிடையாது.

யஃ க்ருத்திகாதார வ்ரதம் ச
ஷஷ்டீவ்ரதம் காவ்யதிந வ்ரதம் வா |
கரோதி பக்த்யா ஸ லபேத புத்ராந்
இஷ்டார்த்த ஸித்திம் ச ததாபவர்கம் ||

எந்த மனிதன் க்ருத்திகா வ்ரதத்தையேனும், ஷஷ்டி வ்ரதத்தையேனும், சுக்ரவார வ்ரதத்தையேனும், பக்தியோடு அனுஷ்டிக்கின்றானோ, அவன் இவ்வுலகில் நல்ல பிள்ளைகளையும் இஷ்டமான கார்ய ஸித்திகளையும் பெற்று, பிறகு மோக்ஷத்தையும் அடைகின்றான்.

ஶ்ருணோதி யோ ப்ரஹ்மக்ருதோத்ஸவம்
வ்ரதப்ரபாவம் ச படேத்ஸக்ருத்வா |
ஸம்புக்தபோகஸ்ஸகலாநி பஶ்சாத்
விஜித்ய ஸர்வாந் லபதே ஶ்ரியம் ச ||

ப்ரஹ்மதேவரால் ஏற்படுத்தப்பட்ட ரதோத்ஸவ மஹிமையையும் வ்ரதங்களுடைய மஹிமையையும் எவன் ஒருதரமேனும் படிக்கின்றானோ, எவன் கேட்கின்றானோ, அவன் எல்லா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சத்ருக்களையும் ஜயித்து, ஸமஸ்தபாபங்களிலிருந்தும் விடுபட்டவனாய், ஸகல ஐச்வர்யங்களையும் அடைகின்றான்.

யதுஶகூதநயாம் ஸஉ²சஹஜ ஸத்ய
மொதுவா ஸாநூநிஷ்டிதஃ ।
தத்ஷாஜ்வ யமூஉம் மூஹஸ்ஷா
ஹூக்திஉக்தி வருஉம் ஹஜாஉஹெ ॥ (59)

ஐதி ஸ்ரீ ஸைவ உஹாவஊாணெ
ஸகாஉஶாஊ ஸம்ஹிதாயாஉவரிஹாமெ க்ஷெத்ரவஞெ
ஸத்யமிரிஉாஹாதெ்ய ஸகாஉமொzஷ்யாயஃ

எந்த ஸத்யாசல க்ஷேத்ரத்தில் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்தி-யானவர் தேவராஜ குமாரியான தேவஸேனாம்பிகையை திருக்கல்யாணம் செய்துகொண்டு அந்த ஸத்யகிரியின் உத்தமமான தாழ்வரையின் கண்ணே எழுந்தருளியிருக்கின்றானோ, போகமோக்ஷங்-களைக் கொடுக்கிறதான அந்த குஹஸ்வாமியினுடைய இரண்டு பாதகமலங்களையும் எப்பொழுதும் பூஜிக்கின்றோம். (59)

பதினோறாவது அத்யாயம்.

முற்றிற்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஃய ஓாஉஶொZஃ஥ாயஃ

ஐஷயஃ

வாாஐூள ஒெவஸெநாயாஃ வாணிஏூஹண ஐஜூஃ |
ஜஏதாம் ஶ்ரேயஸெZஷூாகும் வக்ஷூஹூஷி விஸூாாஃ ||

பன்னிரண்டாவது அத்யாயம்

சௌநகாதி மஹரிஷிகள் சொல்லுகிறார்கள் :-

"ஹே ஸூதமஹரிஷே! பராசலமாகிற திருப்பரங்குன்றம் க்ஷேத்ரத்தில் நடந்த தேவஸேனையினுடைய விவாகமங்களத்தை, உலகங்களுக்கெல்லாம் க்ஷேமம் உண்டாகும் பொருட்டு தாங்கள் எங்களுக்கு விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டும்", என்று வேண்டிக் கொண்டார்கள்.

ஸூதஃ

ஶாணஃஉரஷயஸ்வெூ ஸவூகுஜாணகாாணழ |
வஓதாம் ஶாணதாம் வாஸாம் ஸஜெூா ஓாஶிதநாஶநழ ||

ஒெவதாஸாவூஹளஉஸூ ஷ்கஃஸூ காணாதூநஃ |
கஜூாண உஶிதம் ஒெவஸெநாயாஃ கயொஶி வஃ ||

ஸநக்ஷூஊாா ஓநயெ யஶொக்தம் நஜிநா வாா ||

"ஹே மஹரிஷிகளே! ஸர்வ மங்களங்களுக்கும் காரணமாயும், படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் உடனே பாபத்தை நாசம் செய்கிறதாயும் உள்ள, தேவதாஸார்வ பௌமனும் கருணாமூர்த்தியுமான ஸ்கந்த ஸ்வாமிக்கும் தேவஸேனை அம்மைக்கும் நடந்ததான திருக்கல்யாண மஹோத்ஸவ சரித்திரத்தை, முன் ஸநத்குமார மஹரிஷிக்கு நந்திகேச்வரர் உரைத்தபடியே, நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன். எல்லோரும் அன்பினோடு ச்ரவணம் செய்வீர் (கேட்பீர்)களாக."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌪𑌰𑌾𑌦𑍍𑌰𑌿𑌨𑌾𑌥𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌃 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌃 ॥

𑌸𑌰𑍍𑌵𑌗𑌶𑍍𑌶𑌰𑍍𑌵𑌨𑌨𑍍𑌦𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌶𑌿𑌖𑌾𑌮𑌣𑌿𑌃 ।
𑌕𑍁𑌮𑌾𑌰𑌃 𑌕𑍇𑌶𑌵𑌮𑍁𑌖𑍈𑌰𑍍𑌬𑌹𑍁𑌕𑌾𑌲𑌤𑍋 𑌗𑌣𑍈𑌰𑍍𑌮𑍁𑌹𑍁𑌃 ॥

𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑍋𑌨𑍁𑌜𑍍𑌞𑌯𑌾𑌕𑌾𑌮𑌂 𑌶𑌂𑌭𑍁𑌨𑌸𑍍𑌯 𑌚 𑌦𑍈𑌵𑌤𑍈𑌃 ।
𑌵𑍀𑌰𑌬𑌾𑌹𑍍𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑍀𑌰𑍈𑌃 𑌸𑍍𑌵𑌤𑍁𑌲𑍍𑌯𑍈𑌃 𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑍈𑌃 ॥

𑌕𑍇𑌕𑌿𑌰𑌾𑌜𑌂 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌯𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌦𑌾𑌨𑌵𑌾𑌧𑌿𑌪𑌃 ।
𑌤𑌤𑍍𑌰𑌾𑌮𑍍𑌭𑍋𑌨𑌿𑌧𑌿𑌗𑌂 𑌵𑍀𑌰𑌮𑌾𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌪𑍁𑌰𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 ॥

𑌗𑌤𑍍𑌵𑌾𑌸𑍌 𑌦𑌤𑍍𑌤𑌨𑌿𑌦𑍇𑌶𑌂 𑌪𑌰𑌸𑍈𑌨𑍍𑌯𑍈𑌸𑍍𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌮𑍍 ।
𑌅𑌷𑍍𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌾𑌨𑌾𑌮𑌧𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥

𑌶𑍂𑌰𑌪𑌦𑍍𑌮𑌂 𑌦𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍁𑌰𑌰𑍍𑌷𑌿𑌗𑌣𑌕𑌣𑍍𑌟𑌕𑌮𑍍 ।
𑌸𑌹𑌤𑌾𑌰𑌕𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑍍𑌯𑌂 𑌸𑌸𑍁𑌤𑌜𑍍𑌞𑌾𑌤𑌿𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌮𑍍 ॥

𑌨𑌿𑌹𑌤𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌹𑌿𑌤𑌾𑌯 𑌚 ।
𑌸𑍍𑌵𑌾𑌨𑌿 𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑌧𑌿𑌕𑌾𑌰𑌾𑌣𑌿 𑌶𑌕𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑍁𑌪𑌰𑍍𑌵𑌣𑌾𑌮𑍍 ॥

𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌶𑍍𑌰𑍀𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌨𑌗𑌰𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌦𑍈𑌵𑌤𑍈𑌃 ।
𑌪𑌰𑍇𑌦𑍍𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑌾𑌸𑌾𑌯 𑌹𑌰𑍍𑌷𑌪𑍍𑌰𑌹𑌾𑌷𑌿𑌦𑍈𑌵𑌤𑍈𑌃 ॥

𑌪𑍁𑌨𑌃 𑌪𑌰𑌾𑌚𑌲𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌦𑌾𑌯𑌕𑌮𑍍 ।
𑌸𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌸𑍁𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌸𑍁𑌰𑌰𑍍𑌷𑌿𑌗𑌣𑌸𑍇𑌵𑌿𑌤𑌃 ॥

பராசலேச்வரரும், ஷாட்குண்ய பரிபூர்ணரும், ஸர்வவ்யாபியும், பராபரஸ்வரூபியும், ஈச்வரகுமாரனும், ஸர்வக்ஞரும், ஸர்வ தேவசிகாமணியுமான குமாரக்கடவுளானவர், மஹாவிஷ்ணு முதலான தேவகணங்களால் வெகுகாலம் அடிக்கடி ப்ரார்த்திக்கப்பட்டவராகி, ச்ரேஷ்டமான மயில் வாகனத்தில் தாம் ஆரோஹணித்துக்கொண்டு, வீரபத்ர தேவருக்கு ஸமமான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பராக்ரமமுடைய வீரபாகு முதலான பூதபதிகளோடு கூட, அஸுரேந்த்ரனாகிய சூரபத்மாஸுரன் வஸிக்கும்படியானதும் ஸமுத்ரமத்தியிலிருப்பதுமான வீரமகேந்த்ரபுரத்தை அடைந்து, பரமசிவனால் கொடுக்கப்பட்டு ஸகலமான வரங்களையும் பெற்றுக்கொண்டதினால் மிகவும் கர்வத்தை அடைந்தவனாயும், ஆயிரத்தெட்டு ப்ரஹ்மாண்டங்களுக்கும் ஈச்வரனாயும், தேவரிஷிகணங்களை நாசம் செய்கிறவனாயுமிருக்கும் சூரபத்மாஸுரனையும், அவன் தம்பிமார்களான தாரகாஸுரன், சிங்கமுகாஸுரன் அவன் மகனாகிய பானுகோபன் இவர்களையும், தாயாதிகளையும் மற்ற பந்துக்களையும், யுத்தத்தில் கொன்று, எல்லா தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் இந்த்ராதி திக்பாலகர்களுக்கும் அவரவர்களுடைய அதிகாரத்தைக்கொடுத்து, பூதபதிகளோடு கூட சீக்ரமாக திருச்செந்தூர் வந்து சேர்ந்து, அங்கு ஒரு ராத்திரிப் பொழுது தங்கியிருந்து, மறுநாள் காலையிலெழுந்திருந்து, தேவரிஷி கணங்களால் ஸேவிக்கப்பட்டவரான பாலஸுப்ரஹ்மண்ய மூர்த்தியானவர் ஹரி ப்ரஹ்மாதி தேவர்களோடு கூட பரமானந்தத்தைக் கொடுக்கிறதான பராசல க்ஷேத்ரமாகிய திருப்பரங்குன்றத்திற்கு மறுபடியும் வந்து சேர்ந்தார்.

ततश्चैत्य विधातृस्थां गुरुणा च शिवस्तुतिः ।
सैन्यैः सहसा जातं पाणिग्रह विधानतः ॥

गृहाय स्वात्मजां सर्वशुभलक्षण लक्षिताम् ।
प्रणम्य शिरसा चरणौ हस्तावनतकन्धरः ॥

प्राञ्जलिः प्राह गिरिजानन्दनं सहर्षपूरितः ॥

அப்பொழுதே தேவேந்த்ரன், எல்லா சுப லக்ஷணங்களோடும் ப்ரகாசிக்கும் தனது குமாரியாகிய தேவஸேனையை, ஸ்ரீ குஹ ஸ்வாமிக்கு பாணிக்ரஹணம் செய்து கொடுக்க வேண்டுமெனக் கருதி, ப்ரஹ்மதேவர் மகாவிஷ்ணு தேவகுருவாகிய ப்ருஹஸ்பதி பகவான் முதலானவர்களுடன் நன்றாய் ஆலோஜித்து, பூர்ணபக்தியுடன் பார்வதி தனையனாகிய ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியை சிரஸால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நமஸ்கரித்து வணங்கின கழுத்துடன் அஞ்சலிபத்தராயிருந்து கொண்டு ஸ்கந்த பரமாத்மாவைப் பார்த்து தேவேந்த்ர மஹா ராஜாவானவர் மஹாவிஷ்ணுவுடன் கூடினவராய் இருந்துகொண்டு சொல்லுகின்றார்.

ஔவெநூ ஃ

ஹமவந ஸவ பூஜெவெஶ ஸவ பூஶத்ருநிஷூஉந ।
சுஜொவஶக்தி ஸம்வஷ ஹக்ஷாநாஉஹயஜ்ஞா ॥

விஜ்ஞாவநம் ஓஜெஶாநீம் ஶரணவிஷ்வம் ஹாநவ ।
ஸாக்காயபூாணி ஸவபூாணி ஸாயிதாநி சுயா வூஹொ ॥

வாஜிதாஹொ வயம் ஸாய ஹவதா ஹவநநந ।
சுதைவ ஸதஜ்ஞாநாஜி ஹூமெ வாஉவாவநெ ॥

ஓூதுஜாம் ஓஹாஹாம ஸஉூவாஹ வியாநதஃ ।
வாஹிநஃ சுரவயாஜெவ ஹவசு உாண கிஜ்ஞாநு ॥

தேவேந்திரன் சொல்லுகிறார்:-

"தேவாதி தேவா! ஷாட்குண்ய பரிபூர்ணா! ஸர்வசத்ரு ஸம்ஹாரா! பக்தர்களுக்கு அபயமளிக்கும் அமோகசக்தி ஸம்பன்னா லோகரக்ஷகா! பரிசுத்தரான ஸுப்ரஹ்மண்ய ப்ரபோ! இப்பொழுது என் விக்ஞாபனத்தைச் சற்று செவிசாத்தியருளல் வேண்டும். தங்களால் தேவகார்யங்களெல்லாம் ஸாதிக்கப்பட்டன. ஹே பரமசிவனார் அருமைத்திருமகனே! தங்கள் க்ருபையால் நாங்கள் நன்றாய் ரக்ஷிக்கப்பட்டோம். பரம பரிசுத்தமான இந்த ஸத்யஞானகிரி க்ஷேத்ரத்திலேயே, ஹே தேவா! மஹா பாக்கியசாலியாகிய தாங்கள் என்னுடைய கன்னிகையை விதிப்ரகாரம் விவாஹம் செய்துகொண்டு, தங்கள் சரணாவிந்த தாஸர்களாகிய எங்களை கருணையுடன் ரக்ஷித்தருளவேண்டும்" என ப்ரார்த்தித்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌏𑌵𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌃 𑌸𑌮𑌨𑍍𑌦𑌹𑌸𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌃 ।
𑌅𑌙𑍍𑌗𑍀𑌚𑌕𑌾𑌰 𑌭𑌗𑌵𑌾𑌨𑌨𑌙𑍍𑌗𑌰𑌿𑌪𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌃 ॥

மன்மத சத்ருவாகிய பரமசிவனது குமாரரான ஸ்கந்தபகவான் தேவேந்த்ரனால் இவ்வாறு ப்ரார்த்திக்கபட்டபொழுது, புன்சிரிப்போடு கூடிய பார்வையை உடையவராய், அவரது (இந்திரனது) வேண்டுகோளை அங்கீகாரம் செய்துகொண்டார்.

𑌤𑌦𑍈𑌵 𑌨𑌾𑌰𑌦𑍋 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌕𑍈𑌲𑌾𑌸𑌂 𑌗𑌿𑌰𑌿𑌶𑌾𑌲𑌯𑌮𑍍 ।
𑌨𑌤𑍍𑌵𑌾 𑌸𑌾𑌂𑌬𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌨𑌨𑍍𑌦𑌿𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑍈𑌰𑍍𑌗𑌣𑍈𑌰𑍍𑌵𑍃𑌤𑌮𑍍 ॥

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨𑌿𑌵𑍇𑌦𑌯𑌾𑌮𑌾𑌸 𑌕𑍁𑌮𑌾𑌰𑍋𑌦𑍍𑌵𑌾𑌹𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥

அப்பொழுதே நாரத மஹரிஷியானவர் பரமசிவனுக்கு இருப்பிடமாகிய கைலாஸத்தை அடைந்து, நந்தி முதலான கணங்களால் சூழப்பட்டுள்ள அம்பிகா ஸமேதரான பரமசிவனை நமஸ்கரித்து, ஸுப்ரஹ்மண்ய கல்யாண மங்களம் முதலான ஸகல காரியங்களையும் தெரிவித்தார்.

𑌜𑍍𑌞𑌾𑌪𑌿𑌤𑍋 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌶𑌂𑌭𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍋𑌪𑌿 𑌸𑌹𑍋𑌮𑌯𑌾 ।
𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌵𑍃𑌷𑌂 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌪𑍍𑌰𑌹𑌰𑍍𑌷𑍋𑌤𑍍𑌫𑍁𑌲𑍍𑌲𑌲𑍋𑌚𑌨𑌃 ॥

𑌗𑌣𑍈𑌰𑍍𑌭𑍂𑌤𑍈𑌶𑍍𑌚 𑌦𑍇𑌵𑍈𑌶𑍍𑌚 𑌸𑌿𑌦𑍍𑌧𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑍈𑌃 ।
𑌸𑌂𑌸𑍍𑌤𑍂𑌯𑌮𑌾𑌨𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑌾𑌂𑌬𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑌗𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ॥

𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑍍𑌯 𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌰𑍍𑌷𑌯𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌂 𑌯𑌕𑍍𑌷𑌰𑌾𑌟𑍍 𑌸𑌖𑌃 ।
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 𑌸𑍁𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 𑌮𑌹𑍋𑌤𑍍𑌸𑌵𑌃 ॥

𑌸𑌤𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪 𑌪𑌾𑌵𑌨𑌂 𑌸𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌗𑌿𑌰𑌿𑌸𑍍𑌥𑌲𑌮𑍍 ॥

நாரதமஹரிஷியால் தெரிவிக்கப்பட்ட சம்புவானவர் எல்லாம் அறிந்தவராயிருந்தபோதிலும் ஸந்தோஷத்தினாலே மலர்ந்த கண்களை உடையவராகி, உமாதேவியாரோடு வ்ருஷபவாஹனமேரி, கண நாயகர்களாலும் பூபதிகளாலும், தேவர்கள் கந்தர்வர்கள் ஸித்தர்கள் கின்னரர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதலானவர்களாலும் ஸ்தோத்ரம் செய்யப்பட்டவராய், ஸாம்பமூர்த்தியான பகவான், ஸர்வஜகத் ப்ரபுவானவர் ஆகாசமார்கமாய்ப் புறப்பட்டு ஸகாவாகிய குபேரன் இருக்கும் வழியாய்வந்து அவரையும் அழைத்துக்கொண்டு, மகாபராக்கிரமசாலியாயும் மிக்க அழகு பொருந்தியவராயுமுள்ள குமாரஸ்வாமியினுடைய திருக்கல்யாணத்தைப் பார்ப்பதற்காக, ச்ரேஷ்டமான ஸத்யஞானகிரி க்ஷேத்ரத்திற்கு சீக்கிரமாக வந்துசேர்ந்தார்.

𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌰𑌮𑍇𑌶 𑌵𑌾𑌣𑍀𑌶 𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌾 𑌨𑌿𑌖𑌿𑌲𑌾𑌸𑍍𑌸𑍁𑌰𑌾𑌃 ।
𑌨𑌮𑌸𑍍𑌯𑌾𑌂 𑌚𑌕𑍍𑌰𑌿𑌰𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌨𑌮𑍍𑌰 𑌕𑌲𑍇𑌵𑌰𑌾𑌃 ॥

அப்பேர்ப்பட்ட ஈச்வரனை மகாவிஷ்ணு ப்ரஹ்மதேவர் முதலான ஸகலமானதேவர்களும் பார்த்து பக்தியினால் வணங்கிய சரீரமுடையவர்களாய் நமஸ்காரம் செய்தார்கள்.

𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌤𑌾𑌰𑌕𑌾𑌸𑍁𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌃 ।
𑌪𑍍𑌰𑌣𑌤𑌿𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌚𑌕𑍍𑌰𑍇 𑌪𑌿𑌤𑍍𑌰𑍋𑌃 𑌪𑌿𑌤𑍃𑌮𑌤𑌾𑌂 𑌵𑌰𑌃 ॥

𑌪𑍍𑌰𑌣𑌤𑌂 𑌸𑌹𑌸𑌾𑌦𑌾𑌯 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌜𑌂 𑌗𑌿𑌰𑌿𑌜𑌾 𑌶𑌿𑌵𑍌 ।
𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑍍𑌯 𑌸𑌮𑌾𑌘𑍍𑌰𑌾𑌯 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿 𑌹𑌰𑍍𑌷𑌮𑌵𑌾𑌪𑌤𑍁𑌃 ॥

பிறகு தாரகாஸுர ஸம்ஹாரரும் ஸம்ஸார தாரகரும் (ஸாகரத்தினின்று பக்தர்களைக் கரையேற்றுகின்றவரும்) உத்தமமான பெற்றோர்களை உடையவருமான முருகபிரானும், ஸந்தோஷத்துடன் தமது தாய்தந்தையர்களை சிரஸால் வணங்கி நமஸ்கரித்தார். அப்படி நமஸ்காரம் செய்கிற தங்களுடைய குமாரனை பார்வதீ-பரமேச்வரன் வாரியெடுத்தணைத்து முத்தமிட்டு உச்சிமோந்து ஸந்தோஷத்தை அடைந்தார்கள்.

𑌵𑌿𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 ।
𑌵𑍈𑌵𑌾𑌹𑌿𑌕𑌂 𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 𑌸𑌂𑌭𑌾𑌰𑌾𑌦𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥
𑌚 𑌗𑌣𑍇𑌶𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 𑌶𑌂𑌭𑍋𑌃 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌸𑌂𑌮𑌤𑌮𑍍 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பின்னர் ப்ரஹ்மதேவரானவர் பரமசிவனுடைய ஆக்ஞை-யின்படி ப்ருஹஸ்பதி பகவானோடும் வஸிஷ்டாதி மஹரிஷிகளோடும் ஆலோஜித்து, ஸர்வ சாஸ்த்ர ஸம்மதமானதும் மங்களத்தைக் கொடுக்கிறதுமான சுபமுகூர்த்தத்தைப் பார்த்து குமாரஸ்வாமி-யினுடைய திருக்கல்யாணத்திற்காக, நிச்சயித்து வைத்தார்கள்.

𑌤𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌤𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌂 𑌕𑍃𑌤𑌿𑌨𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ।
𑌪𑍍𑌰𑌾𑌤𑌸𑍍𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌤𑌾𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 𑌮𑌹𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 ॥

𑌕𑌨𑌕𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌰𑌚𑌿𑌤𑌂 𑌨𑌾𑌨𑌾𑌰𑌤𑍍𑌨𑌶𑍋𑌭𑌿𑌤𑌮𑍍 ।
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌕𑌾𑌰𑌯𑌾𑌮𑌾𑌸 𑌦𑍇𑌵𑌰𑌾𑌟𑍍 ॥

𑌕𑌾𑌮𑌧𑍇𑌨𑍁𑌸𑍍𑌤𑌥𑌾 𑌦𑍇𑌵𑌤𑌰𑌵𑌃 𑌪𑌾𑌰𑍍𑌵𑌪𑍂𑌤𑍇 ।
𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌮𑌣𑌿𑌶𑍍𑌚 𑌸𑌹𑌸𑌾 𑌸𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌶𑌿𑌵𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 ॥

𑌯𑍇𑌷𑍁 𑌯𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌣𑍋 𑌭𑍁𑌵𑌨𑍇𑌷𑍁 𑌹𑌰𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 ।
𑌕𑍃𑌤𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌾 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾 𑌯𑍇 𑌚 𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌾𑌃 ॥

𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌸𑍍𑌸𑌾𑌧𑍍𑌯𑌾 𑌗𑍁𑌹𑍍𑌯𑌕𑌾𑌦𑍍𑌯𑌾 𑌯𑍇 𑌚 𑌦𑌾𑌨𑌵𑌦𑌾𑌨𑌵𑌾𑌃 ।
𑌗𑌣𑌾 𑌭𑍂𑌤𑌵𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌮𑌥𑌗𑌣𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌯𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑍍𑌯𑌾 𑌮𑍁𑌨𑌯𑌸𑍍𑌸𑌨𑌕𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌰𑌾𑌜𑌾𑌨𑍋 𑌮𑍁𑌚𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌸𑌭𑍍𑌯𑌾𑌃 𑌸𑌾𑌭𑍍𑌯𑌾𑌃 𑌤𑌥𑌾 ॥

𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌃 𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌮𑌰𑍁𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌵𑌸𑌵𑌶𑍍𑌚 𑌤𑌥𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾 𑌗𑍍𑌰𑌹𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥

𑌤𑌿𑌲𑍋𑌤𑍍𑌤𑌮𑌾 𑌚𑍋𑌰𑍍𑌵𑌶𑍀 𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌚𑍀 𑌮𑍇𑌨𑌕𑌾 𑌤𑌥𑌾 ।
𑌰𑌮𑍍𑌭𑌾𑌦𑍍𑌯𑌪𑍍𑌸𑌰𑌸𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌲𑍋𑌕𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑌃 ॥

𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌕𑍁𑌮𑌾𑌰𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 𑌸𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌾𑌚𑌲𑌮𑍍 ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பின்னர் தேவராஜாவாகிய தேவேந்திரனானவர், உதயகால ஸூர்யமண்டலத்திற்கு ஸமானமான தேஜஸ்ஸுடையதும் ரொம்ப ஆச்சர்யமானதும் விலைமதிக்கத்தகாததுமான அநேக ரத்நங்களால் இழைக்கப்பட்டு, நாநாவிதமான அலங்காரங்களால் சோபை பொருந்தியதாயுள்ள கல்யாண மண்டபத்தை, அதி ஸமர்த்தனாகிய விச்வகர்மாவினால் சீக்ரமாக நிர்மாணம் செய்வித்தார். காமதேனுவும், கல்ப வ்ருக்ஷாதிதேவ வ்ருக்ஷங்களும், சிந்தாமணி ரத்னமும், சிவாக்ஞையினாலே பராசல ஸ்தலத்திற்கு சீக்ரமாகவந்து சேர்ந்தன. எந்த உலகங்களில் தேவர்கள் அதிகாரம் செலுத்திக்கொண்டிருக்கிறார்களோ அந்தந்த தேவர்களும், கந்தர்வர்களும், கின்னரர்களும் கிம்புருஷர்களும் ஸித்தர்கள் ஸாத்யர்கள், குபேரப்ருத்யாள் அஸுரர்கள் மனுஷ்யர்களும், பூதபதிகளும், நாககணங்கள் முதலானவர்களும், தங்கள் தங்கள் பத்னிகளுடன் கூட வ்யாஸவஸிஷ்டாதி மஹரிஷிகளும், தங்கள் தங்கள் ஸைந்யங்களுடனும் பத்நிகளுடனும் கூடினவர்களாய் முசுகுந்தாதி சக்ரவர்த்திகளும் ஸப்தஸமுத்ரங்களும், அஷ்டகுலாசலங்களும், பித்ரு தேவதைகளும், ஸப்தமருத்துக்களும், அஷ்டவஸுக்களும், ஏகாதசருத்ரர்களும், த்வாதசாதித்யர்களும், ஸப்தமாதாக்களும், திலோத்தமை ஊர்வசி விச்வாசீ மேனகை ரம்பா முதலான அப்ஸரஸ்த்ரீ கூட்டங்களும், இன்னும் எல்லா உலகத்திலுமிருக்கிற ஜனங்கள் அனைவரும், சிவாக்ஞையினால் குமாரஸ்வாமியின் திருக்கல்யாண மஹோத்ஸவத்தை தரிசனம் செய்வதற்காக பராசலமாகிற திருப்பரங்குன்றத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

ஸம்வ்ருதைஸ் ஸாஉஹூதைஃ தூ வியாதா ஶஜ்ஞாஜ்ஞயா ।
ஜஷிஹிஸ்ஸஹஸா ஸத்ஜ்ஞாநஶைலாயிவஸ் ச ॥

ஶாஹஸ் ஸ்நாதகாதீநி கஉராணி கூராதெ தஶா ॥

பிறகு நல்ல முகூர்த்தம் வந்த காலத்திலே, ப்ரஹ்ம- தேவரானவர், பரமேச்வரருடைய ஆக்ஞைப்ரகாரம் மகரிஷிகளோடு கூட ஸத்யக்ஞானசைலாதிபராகிய குஹஸ்வாமிக்கு ஸ்நாதகவ்ரதம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(க்ரஹஸ்தாச்ரமத்தை ஸ்வீகரிக்குமுன் முதலாவதாச்ரமமான ப்ரஹ்மசர்ய வ்ரதத்தை முடித்தல்) முதலான காரியங்களைச் செய்து முடித்துவைத்தார்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ குமாரஸ்வாமிக்கும் தேவஸேநாதேவிக்கும் திருக்கல்யாண மஹோத்ஸவக்காக்ஷி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ததொ ஜூஉஸைந்யம் ச ஸம்வாப்ய ஊநஸா வியி: ।
வ்ராஜாக ஶுஹகணாஜ்ஜுதக ஷெஷ்வா ஜூஉஹெதவெ ॥

ஸபஸ ஷெவஸெநாயா: கணெ தஷெவநாயக: ।
ஸமுகஸி கஉஸஉஷ்ஹ்ரீ: வந: கணஉஹஷெயக ॥

"ஹே சௌநகாதி மஹரிஷிகளே! அப்பொழுது மகாவிஷ்ணு-வானவர் இந்த்ரனைப் பார்த்து, ஹே தேவேந்த்ரா! மிக்க அழகு வாய்ந்த உமது குமாரியாகிய தேவஸேனையைத் திருமணக்-கோலத்துடன் இங்கு அழைத்துக்கொண்டு வாரும்" என்று சொன்னார். தேவேந்திரனும் சீக்கிரமாகவே போய் தன் குமாரியை அவ்விதமே அழைத்துவந்தார். லக்ஷ்மீயும் ஸரஸ்வதியும் அவர்களுடன் கூட கல்யாண மண்டபத்திற்கு வந்தார்கள். அங்கிருந்த தேவர்கள் அனைவரும் அப்பொழுது எழுந்திருந்து, உத்தமியான தேவஸேனையையும் மாமியார் மாமனாராகிய பார்வதீ பரமேச்வராளையும் நமஸ்கரித்தனர். அங்கே ஷண்முகமூர்த்தியை முன்னாலே பார்த்து அவள் லஜ்ஜை அடைந்தாள். அக்காலத்தில் பார்வதீநாதரான பரமேச்வரன் தமது கடாக்ஷத்தினால் தேவஸேனையைப் பார்த்து அநுக்ரஹம் செய்தார். தேவர்களுக்கெல்லாம் ஈச்வரியும் லோகமாதாவுமான பார்வதீ தேவியானவள், அந்த தேவஸேனையாகிய தமது மருமகளை அன்புடன் பார்த்து, தமது திருக்கரத்தினால் சரீர முழுதும் தடவிக்கொடுத்து, இருகன்னங்களையும் முத்தமிட்டு, அந்த தேவஸேனை தமது குமாரனாகிய குஹஸ்வாமி இவ்விருவரையும் ஒரே ஸிம்மாசனத்தில் உட்காரவைத்து தாம் பக்கத்திலிருந்தார். ஏகாஸனத்தில் வீற்றிருக்கும் தேவஸேனை அம்மையையும் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியையும் அங்கிருந்த தேவர்கள் எல்லோரும் தரிசித்து நமஸ்காரம் செய்து ஸந்தோஷமடைந்தார்கள். பிறகு இந்த்ராணி கையிலுள்ள ஸ்வர்ண கெண்டியினின்றும் விழும் சுத்தமான ஜலத்தினாலே தேவேந்த்ரன் ஷண்முகநாதனுடைய பாதகமலங்களை ப்ரக்ஷாளனம் செய்து, சந்தனம் புஷ்பம் சாத்தி தூபதீபாதி வெகு உபசாரங்கள் செய்து, அந்த பரிசுத்தமான ஷண்முக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாதாரவிந்த தீர்த்தத்தைப் பிற்பாடு பானம் செய்வதற்காக ஓரிடத்தில் தனித்து பத்ரமாய் வைத்திருந்தார். ஹே சௌநகாதி மஹரிஷிகளே! தேவேந்த்ரன் மறுபடியும் தன் கையில் ஜலத்தை எடுத்துக்கொண்டு "இந்தக் கன்னிகையானவள் ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்கு தர்ம பத்னியாக இருக்கட்டும்" என்று சொல்லிக்கொண்டு தீர்த்த தாரையுடன் கன்னிகாதானம் செய்தார். பின்னர் ப்ரஹ்மதேவர் மங்கள ஸூத்ரத்தை ஸ்மரித்த மாத்திரத்தில் ஸ்ருஷ்டித்துத் தனக்கிஷ்டமான மங்களத்தை அடையவேண்டி ஸுப்ரஹ்மண்ய மூர்த்தி கையில் கொடுத்தார். தேவநாயகரானவர் அதை வாங்கி தேவஸேனையின் கழுத்தில் திருப்பூட்டினார். மறுபடியும் நல்ல வாஸனையுள்ள புஷ்ப மாலைகளாலேயும் அவளது கண்டத்தை அலங்காரம் செய்தனர்.

தத: [illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

ஜுஹாவ ஸமிதந்நாஜ்யாஹுதிபி: பாவகே தத: ।
ப்ரதக்ஷிணா[illegible] விதி: விதிநா ப்ரஹ்மணோதித: ॥

தத: ப்ரதக்ஷிணீக்ருத்ய வஹ்நிம் ஸ்கந்த: ஸ்வயம் ப்ரபு: ।
பாணிநா [illegible]யாமாஸ [illegible] ॥

[illegible] அருந்ததீம் ॥

பிறகு மகா புத்திமானாகிய தேவேந்த்ரன், பெண் மாப்பிள்ளை இருவருக்கும், அநேக ரஸாயனங்கள் அம்ருத மயமான பழங்கள் மற்றுமுள்ள அநேக விதமான நைவேத்யங்கள் இவைகளை ஸமர்ப்பித்தார். அப்பொழுது மேகசப்தம் போன்ற வாத்யகோஷங்கள் ரொம்பவும் முழங்கின. அதுஸமயம் அங்கிருந்த மகான்கள் ஆசீர்வாதம் செய்து மிகவும் ஸந்தோஷமடைந்தார்கள். சௌநகாதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மஹரிஷிகளே! பிறகு ப்ரஹ்மதேவரானவர், ப்ரதக்ஷிண ஜ்வாலையோடு ஜ்வலித்துக்கொண்டிருக்கும் அக்நியில், ஸமித் அன்னம் ஆஜ்யம் முதலான த்ரவ்யங்களால் விதிப்படி ஹோமம் செய்தார். பின்னர் ஸ்வயம் ப்ரபுவாகிய ஸ்கந்தமூர்த்தியானவர், அக்னியை ப்ரதக்ஷிணம் செய்து தன் கையினாலே பத்னியினுடைய பாதத்தைப் பிடித்து அம்மிக்கல்லின் மேலேற்றி வைத்தார். அதன்பின் இந்த தம்பதிகளாகிய ஸேனாஸ்கந்தர் அருந்ததியை தரிசனம் செய்தார்கள்.

தஜதா உஹெஸ்வாிஂ மளஸீஂ விதாஈள ஜமதாஉாஹள ।
தீ்ணி வ்ரு உக்ஷிணாநுத் க்ஷரகா நெஉதா ஈஜஹா ॥

ஷூாவயாஉாஸதா: மளஸீ வாஈஜஸுள நிஜாஸநெ ।
ஸஉாமுறிஜிஸூா்ஷாஂ வாதுஂ க்ஷரவாஉரஷிாவஜெறாக்ஷநள ॥

க்ஷய விஷ்ணுஉாவாஜெவாநு ஹஜுஸிஹாஸநஷிதாநு ।
வருணஉா தாஷாவாஹுக்ஷா உரஷ்வாதாநு ஜெறாவநவீரியாநு ॥

க்ஷய விஷ்ணு விபி வூாஸ உாசாக்ஷநஉாவாநு ஷிதாநு ।
ஜஷீநநாநு வஸிஷ்ஷாதீநு வெஉவெஶாஜுவாஈமாநு ॥

க்ஷநவரஹஷா வஸூாஜைமுஸதாஂபஅுவஸூாஹி: ।
ஸஂஹாவயாஉாஸதா ஷூளதா வ்ருஹஷஉதாமுஜுதள ॥

க்ஷூஷெயரண தஜதா ஜெவா ஷெூாதுஂ சக்ஷாஈஜெஶயொ: ॥

பின் லோகமாதா பிதாக்களாகிய பார்வதீ பரமேச்வரர்களை மூன்று ப்ரதக்ஷிணம் செய்து பக்தியோடு நமஸ்காரம் செய்தார்கள். பார்வதீ பரமேச்வரர்கள் தங்கள் குமாரனையும் மருமகளையும் ஆலிங்கனம் செய்துகொண்டு க்ருபாத்ருஷ்டியினால் பார்த்து தங்கள் ஆஸனத்தில் அமர்ந்திருக்கச் செய்தார்கள். மங்களமான ஸிம்மாஸனத்தில் வீற்றிருப்பவர்களும் பார்க்கப்பார்க்க ப்ரிய-முள்ளவர்களுமான அந்த ஸேனாஸ்கந்தர்களை விஷ்ணு முதலிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவர்கள் தரிசித்து பக்தியுடன் நமஸ்காரம் செய்து ஸ்தோத்ரம் செய்தார்கள். பிறகு வதூவரர்கள் இருவரும் மிகுந்த ஸந்தோஷத்தை அடைந்து, விஷ்ணு ப்ரஹ்மன் முதலிய தேவர்களுக்கும், வேதவேதாந்தங்களைக் கரைகண்டவர்களாகிய வ்யாஸர் வஸிஷ்டர் முதலான மஹரிஷிகளுக்கும், மற்றும் ஸபையிலுள்ள முசுகுந்தாதி சக்ரவர்த்திகளுக்கும், விலைமதிக்கக் கூடாத ஆபரணங்களையும் வஸ்த்ராதிகளையும் ஸம்மானமாகக் கொடுத்து, கந்த தாம்பூலாதி வஸ்துக்களினால் மிகவும் உபசரித்தார்கள். அதன்பின் தேவர்களெல்லாம் ரொம்பவும் ஸந்தோஷத்தை அடைந்தவர்களாய் பார்வதீபரமேச்வராளை ஸ்தோத்திரம் செய்தார்கள்.

ஸஹஸ்ராநநி ஜகா தள தத்ஸஹாயாம் வயவாவள ।
ஸிவேந வ்யஜிதள ஸஹள ஜிவஒஜாஸவிருஹள ॥

தெவஸேநா ஸஹள தத்ர தஸ்ய தா: வாஸாவஸதெ ।
தஜாஸீவபூவநம் ஷிதஜவாஜநவஸமொவாஜ ॥

ஹஸிப்ரஹஜவாடெவாந ஹவாநநஜாநரஷீஸ்வராந ।
யதா யொகஹ்ஷு ஸம்வஜஜ்ஜாந வஜயிகா வந்நா: ॥

வாஸொஹிஹூஷணைஜிபூஷ்வை: கஷ்வரகஷஸஜ்ஜவை: ।
கஜரதஸ்வாஜ ஜிவஜாணை: காஜயெநஸஜ்ஜவை: ॥

கஜரதைஹூக்ஷஜஹொஜஜாஷ்ஜை: யதா யொகஹ்ஜம் ஸஹாஸ்திதாந ।
வஜயாஜாஸ தாடெவாநய தெவஜா ஜஹெஸ்வா: ॥

கநமரஹஜாதுதாந ஸவபூாந தஸ்யாஜநஜத்ர தத்ஸெ ।
ஸஹவெஹவீக்ஷஸ்ஸ தஸ்யிவாந ஸாம்ப ஸஜ்ஜா: ॥

திவ்ய மங்கள மூர்த்திகளாகிய தேவஸேனையும் குஹஸ்வாமியுமான அந்த வதூவரர்கள், அந்த ஸபையிலுள்ளோ-ருக்கெல்லாம் பலதானங்களைச் செய்து, பிறகு பரமேச்வரரால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆக்ஞாபிக்கப்பட்டவர்களாய், ச்ரேஷ்டமான ஆஸனத்தில் வீற்றிருந்தார்கள். அப்பொழுது செய்யப்பட்ட ஆசீர்வாதமானது ஆச்சர்யமாயும் வாக்குக்கும் மனதிற்கும் எட்டாததாயுமிருந்தது. பிறகு தேவேந்த்ர மகாராஜாவானவர், விஷ்ணு ப்ரஹ்மாதி தேவர்களையும், ஸமஸ்த மஹரிஷிகளையும், ஸபையிலுள்ள பூஜிக்கத்-தகுந்தவர்களான மற்றுமுள்ள மகாராஜாக்களையும், கல்பவ்ருக்ஷத்திலிருந்து உண்டான திவ்யமான வஸ்த்ரா-பரணங்களினாலும், காமதேனுவினிடத்தில் இருந்து உண்டான அம்ருதம்போல் ருசியுள்ள அன்னங்களாலும் அம்ருதமயமான பக்ஷ்ய போஜ்யங்களினாலும் அவரவர்களுக்குத் தகுந்தபடி பூஜித்தார். பிறகு ஸாம்ப சங்கரர்களான பார்வதீ பரமேச்வராள் அங்குள்ள எல்லோரையும் அனுக்ரஹித்துவிட்டு, அங்கிருந்து நீங்கி மற்றோரிடத்தில் எழுந்தருளி குமாரஸ்வாமியின் திருக்கல்யாண வைபவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ததஃ வாஂ ஷுவாஶுஹூ ஹுதவைநாயிவள மூஹஃ ।
ஶூஹுய உத்ிணள ஷுியள உறாணூஹுணாவூளள ॥

கஸூக வரஷிமதாஷைய வஸூநி விவியாநி ச ।
கநெகாணூஹுாஉஷு கஐாணாயஹாஹரதாநிஹி ॥

தாநஹுஜமணெஶவஸ வாஹிஜாகு உஸ்ஸகாஶக ।
ஶூநீயாஶ யவாஹாநி ஷெவாநாஹாதஷதஃ ॥

உகா ஶெஷாணி வஸூநி ஷெவாஶு ஷூயநாநி ச ।
கஷாஷெஉகூஷிணெ ஹூஉஷாஂ கொஶெ ஷூவய தஂ யவாஷ ॥

ஐதூக்ஷஉாது தஸூள ச தாநாநிநதூஹிகெ ।

அதன்பின்னர் குஹஸ்வாமியானவர் தமது பக்கத்திலிருக்கும் பூதஸேனாதிபர்களும் தமது மந்திரிகளுமான உக்ரர் அண்டாபரணர் இருவரையும் அழைத்து, நமது ஸ்ருஷ்டியிலடங்கிய அநேக அண்டாந்திரங்களிலிருந்து இப்பொழுது நமது திருக்கல்யாணத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உத்தேசித்துக் கொண்டுவரப்பட்டிருக்கும் பலபல ஆச்சர்யமான வஸ்துக்கள் எவை உண்டோ அவைகள் அனைவற்றையும் நாமும் நமது தமயனாரான கணேசரும் கண்காண நமது சமீபத்தில் சீக்ரமாய்க்கொண்டு வந்து வைத்து, தேவர்களுக்கு அவரவர்கள் அந்தஸ்துக்குத் தகுந்தவாறு அந்த வஸ்துக்களை ஸம்மானம் கொடுத்து மரியாதை செய்துவிட்டு, மீதியுள்ள வஸ்துக்களையும் நமது தேவியாருக்கு ஸ்த்ரீதனமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறவைகளையும் இம்மலையின் தென்புற அடிவாரத்திலுள்ள பொக்கிஷத்தில் வைத்துவிடுங்கள் என்று ஆக்ஞாபித்தனர். உடனே அவ்விருவரும் எல்லாவற்றையும் அவ்வாறே அவர்கள் ஸந்நிதானத்தின் முன் கொண்டுவந்து வைத்தார்கள்.

ததோ குஹஸ்ய ராஜஸ்ய ப்ரஹ்மவிஷ்ணு தம்பதீன் ।
ஸந்தோஷயித்வா விவிதை: பஹுமானைரனேகதா ॥

ஸபாஸ்தான் ஸர்வவிப்ரான் ருஷீனன்யானிஹாகதான் ।
பஹுமானை: பூஜயேதாம் யுவாம் ச தம்பதீஸஹ ॥

இதி ஶ்ருத்வா குஹஸ்யாஜ்ஞாம் மந்த்ரிணௌ தஸ்ய கடாக்ஷத: ।
ததேதி ஶிரஸா தச்ச காரயாமாஸதுஸ்த்வரா ॥

பின் குஹஸ்வாமியானவர் ஸபையிலுள்ள ப்ரஹ்மா விஷ்ணு இந்த்ராதி தம்பதிகளை பலவிதமான பகுமானங்களினால் வெகுவழிகளில் ஸந்தோஷிக்கச் செய்து வைத்து "திருக்கல்யாணத்திற்காக வந்திருக்கும் மற்றைய ஸபையோர்களான மஹரிஷிகள் முதலான பூஜ்யாளையும் தம்பதி ஸமேதாளாய், நீங்கள் இருவரும் பகுமானம் செய்து பூஜியுங்கள்", என்று பின்னரும் மந்திரிகளுக்குக் கட்டளை இட்டருளினர். இவ்விதம் பிறந்த குஹஸ்வாமியின் ஆக்ஞையைக் கேட்டதும், மந்திரிகளிருவரும் அவ்வாக்ஞையை சிரமேல் வகித்து அந்த பகவானுடைய அநுக்ரஹத்தினால் அவ்விதமே பக்தி பூர்வமாய் அனைவரையும் பூஜித்து மரியாதை செய்தார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீணா வேணு ம்ருதங்காதி வாத்யகோஷஸமந்வித: |
அப்ஸரோகண ந்ருத்யாதி நாட்யஶாஸ்த்ரப்ரகாஶக: ||

ஸ்திதே ஸதி குஹே தத்ர தத்தத்கார்யப்ரஸூசகா: |
ஸர்வே தேவாஶ்ச ருஷயோ ராஜாநோ மாநவா: ப்ரஜா: ||

விநயேந குஹாப்யாஶம் ப்ராப்ய ஸாஞ்ஜலய: ஸ்திதா: |
தாநாகதாந் குஹஸ்ஸர்வாந் ஸ்வஸ்வகார்ய ப்ரஸூசகாந் ||

ததாஸ்த்விதி [illegible] ப்ரேஷயித்வா க்ருஹாந் ப்ரதி ||

அப்பொழுது வீணை புல்லாங்குழல் ம்ருதங்கம் முதலிய வாத்யங்கள் ஒலித்தன; கந்தர்வ கானங்கள் முழங்கின; அப்ஸரஸ்த்ரீ முதலிய நாட்டிய ஸ்த்ரீகள் ஸாமர்த்யமாய் அபிநயத்துடன் நடனம் செய்துகொண்டிருந்தார்கள். இந்த வைபவங்களை எல்லாம் பார்த்தும் கேட்டும் குஹஸ்வாமியானவர் ஆனந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஸமஸ்தமான தேவர்களும் ரிஷீச்வரர்களும் மகாராஜாக்களும் மற்ற ப்ரஜைகளும், தங்கள் தங்களுக்குள்ள கார்யங்களை வினயத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறவர்களாய், குஹஸ்வாமியின் ஸமீபத்தில் சென்று அஞ்சலி பத்தர்களாய் (கைகட்டி வாய்பொத்தி) நின்றார்கள். அவ்விதம் தங்கள் கார்யத்தை வினயமாய்த் தெரிவித்துக்கொள்ளும் அவர்களை எல்லாம் குஹஸ்வாமி கடாக்ஷித்து ஸந்தோஷித்து அப்படியே ஆகட்டுமென்று அவரவர்கள் க்ருஹத்திற்குப்போக விடையளித்தனுப்பினார்.

ததாநீம் [illegible] லோகம் ஸ்வாத்யாயம் ப்ராப ஷண்முக: |
ஶ்ருண்வந் ருக்யஜுராதீநி ஸ்தோத்ராணி விவிதாநி ச ||

[illegible] ப்ரேஷயித்வா க்ருஹாந் ப்ரதி |
[illegible] க்ருஹ[illegible] ததா ப்ரபு: ||

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விவெஶாஞ்ஃ வ௱ஶம் ரூஷ்யம் ஹாயபூா ஊத்தகலொா சிஜாஃ ।
ஜெவஸெநாமாஹள தத்ர தஸ்துாஃ வாயாஊஷா ॥

தாவாஶிஹிபூஷ்ஷா ஸவபூஜூஹா ஶஜ்ஞாாள ஜவாகூ ।
சுநா௱ாஹ்ய நிஜம் ஸ்ரூநம் வ்யாவதாஃ ஹாஷஊநவளா ॥

அப்பொழுது ஷண்முகநாதன் தமது பத்னியாரோடு ஆலயம் சென்றனர். போகும்பொழுது வழியிலே மங்களவாத்ய கோஷங்களையும் பலவிதமான ஸ்தோத்ரங்களையும் செவிசாத்திக்கொண்டு போய் கோபுரவாசலில் சற்று தங்கி நின்று எல்லா தேவர்களையும் அவரவர்களுடைய ஸ்தானங்களுக்கனுப்பிவிட்டு, ஹே சௌநகாதி மஹரிஷிகளே! ப்ரபுவான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியானவர், த்வாரபாலகர்களைத் திருமாளிகையின் வாசலில் இருக்கும்படி ஆக்ஞாபனம் செய்துவிட்டு, பத்னியினால் கைலாகை கொடுக்கப்பட்டவராய் மனோகரமான அந்த:புரத்தை அடைந்தார். அந்த விடத்தில் ஸேனாஸ்கந்தர் (தேவஸேனை குஹஸ்வாமி) இருவர்களும் ரொம்பஸந்தோஷமாய் இருந்தார்கள். அப்பொழுது பார்வதீபரமேச்வராள், ஸர்வமங்களமும் உண்டாகவேண்டியதாய் அவ்விருவர்களையும் ஆசீர்வதித்து அநுக்ரஹித்துவிட்டு, ஸந்தோஷ சித்தர்களாய் சீக்கிரமாக தங்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள்.

யெ ஸஊயாஜி மீவபூாணாஃ ஊநயஸ்து ஊஹீஹாஜஃ ।
ஸதுா௫வும் கூஊாஸூ கவ்யாணாயபூம் ஊஹாத்தநஃ ॥

ஊஹாத்ம்யம் க்ஷெத்ரராஜஸ்ய ஸ்ரூகாமஸ்ய ஊவாத்தஷா ।
தீயூாவமாஹநம் கூகா மிஶிம் வ மிஶிஶாகூதிழ ॥

விஶெஷ தீயூஸஹிதம் விவ்யாதம் ஹுவநத்ரயெ ।
ஹக்ஷ்யா வ்ரூகூிணீகூதுா ஹவவாஶவிஶொவகூழ ॥

ஸதெ்ஶம் வணிகாம் ஷ்டிம் ஸாநாஜூஊஶிநூமூ ।
ஸம்ஸெவ்யவாாயா ஹக்ஷ்யா ஷ்வம் ஷ்வ ஷ்ூநஊவாவிஶெ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குமார பரமாத்மாவின் திருக்கல்யாண மஹோத்ஸவத்தைக் கண்டு தரிசிப்பதற்காக ஸத்யாசலத்திற்கு வந்திருந்த தேவர்கள் மஹரிஷிகள் மகாராஜாக்கள் எல்லோரும் அப்பொழுது அந்த உத்தம க்ஷேத்ரத்தினுடைய மகிமையை அகஸ்த்ய மஹரிஷியால் சொல்லக்கேட்டு, விசேஷ தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, முவ்வுலகிலும் ப்ரஸித்திபெற்றதும் விசேஷமான தீர்த்தங்களோடு கூடியதும் பரமசிவஸ்வரூபமாய் இருப்பதுமான அந்த ஸத்யகிரியை ப்ரதக்ஷிணம் செய்து, ஸம்ஸாரபாசத்தை நாசம் செய்கிறவரான ஸத்யாசலேச்வர மூர்த்தியையும், சண்டிகா பரமேச்வரியையும், சத்ரு ஸம்ஹார மூர்த்தியும், திவ்யமங்கள விக்ரஹருமான ஸ்கந்த ஸ்வாமி ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியையும், மிகுந்த பக்தியுடன் ஸேவித்து விட்டு தங்கள் ஸ்தானத்தை அடைந்தார்கள்.

ஸூத:

ஏவம் ஸநத்குமாரஸ்து ப்ரோக்தஶைலாதிநா ததா |
ஸம்ஶயம் ஹ்ருதி க்ருத்வா து ப்ரோக்தவாந் நந்திநம் புந: ||

கதிதாநி த்வயா பூர்வம் நவதீர்த்தாநி சைவ ஹி |
விஶேஷதீர்த்தமித்யுக்தம் த்வயா கிம் தத்ப்ரபோ ||

ஸூதமஹரிஷி சொல்கிறார்:-

இந்த ப்ரகாரம் நந்திகேசரால் சொல்லப்பட்ட ஸநத்குமார மஹரிஷியானவர் மனதில் ஸம்சயம்கொண்டு மறுபடியும் அவரை (நந்திகேசரை)ப்பார்த்துக்கேட்கிறார். “ஹே தேவநாயகா! தங்களால் ஒன்பது தீர்த்தங்கள் முன்னர் சொல்லப்பட்டன. இப்பொழுது விசேஷ தீர்த்தமென்று தங்களால் சொல்லப்படுகிறதே, ஹே ப்ரபோ! அது என்ன காரணத்தினால் விசேஷமானது; அதைச் சொல்லி அருளவேண்டும்” என்று கேட்டார்.

நந்திகேஶ:

நவதீர்த்தாநி யாநீஹ பூர்வம் ப்ரோக்தாநி வை மயா |
விஶேஷாணி ச தீர்த்தாநி காரணம் வக்ஷ்யே ஸாம்ப்ரதம் த்விஜ ||

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

पाण्डवास्तु पुरा विप्र धार्तराष्ट्रपराजिताः ।
प्रार्थयन्तो महतीं श्रियं सर्वारिनाशिनीम् ॥

कृष्णवाक्येन सत्याद्रिक्षेत्रं प्राप्य महत्तरम् ।
तीर्थं स्वनाम्ना निर्माय मासमेकं समाहिताः ॥

उषित्वा तत्र देवेशं देवसेनापतिं गुहम् ।
उपास्य तस्य कृपया सर्वाभीष्टं प्रपेदिरे ॥

तत्तीर्थं लोकविख्यातं पाण्डवाख्यं महामते ॥

நந்திகேச்வரர் சொல்கிறார்:-

"ஹே யோகீந்த்ரா! முன் என்னால் ஒன்பது தீர்த்தங்கள் சொல்லப்பட்டன. இப்பொழுது மேன்மைபொருந்திய விசேஷ தீர்த்தங்களைச் சொல்கின்றேன்; கேட்பீராக. வித்வானாகிய ஸநத் குமார மகரிஷே! முன் காலத்தில் துரியோதனாதிகளால் சூதாட்டத்தில் ஜயிக்கப்பட்டவர்களான பாண்டவர்கள், ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பார்த்து, ஸர்வ சத்ருக்களையும் நாசம் செய்யக்கூடியதான மகத்தான ராஜ்ய லக்ஷ்மியை அடையவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். கிருஷ்ணபகவானுடைய சொல்படி ரொம்ப மேலான ஸத்யாத்ரி க்ஷேத்ரமென்னும் திருப்பரங்குன்றத்தை அடைந்து, மனமடங்கினவர்களாக ஒரு மாஸகாலம் அந்த க்ஷேத்ரத்தில் வஸித்து, தங்கள் பெயரால் ஒரு புண்ய தீர்த்தத்தையும் உண்டு பண்ணி, தேவஸேனாபதியும் தேவநாயகனுமாகிய குஹஸ்வாமியை உபாஸித்து ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினுடைய க்ருபையினால் ஸர்வா பீஷ்டங்களையும் அடைந்தார்கள். மகா புத்திமானான மஹரிஷே! அந்த "பாண்டவதீர்த்த"மானது எல்லா உலகங்களிலும் ப்ரஸித்தி பெற்றிருக்கிறது.

कल्याणाख्यं परं तीर्थं शिवादुत्तरतः स्थितम् ।
कल्याणकारि सर्वेषां स्नानादर्चनतो गुहः ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"கிரிக்கு வடபக்கத்தில் திருக்கல்யாண காலத்தில் எல்லோரும் ஸ்நாநாதிகள் செய்யவேண்டியதற்காக ரொம்பவும் மேலான கல்யாண தீர்த்தம்" என்று பெயருடைய ஒரு புண்ய தீர்த்தத்தை குஹஸ்வாமியானவர் உண்டு பண்ணினார்.

அஸ்யோத்தரத: ஶ்ரீமத் மண்டலாக்²யம் மஹத்தரம் ।
தீர்த²ம் ஸர்வோத்தமம் ஶம்போர்ஜடாமண்ட³லஸம்ப⁴வம் ॥

ஏதாநி த்ரீணி தீர்தா²நி ஸர்வபாபஹராணி ச ।
தஸ்மாத்³ த்³வாத³ஶதீர்தா²நி ப்ரஸித்³தா⁴நி பராசலே ॥

இன்னும் அந்த மலைக்கு வடக்கே பரமசிவனுடைய ஜடா மண்டலத்திலிருந்து உண்டானதும் ரொம்ப விசேஷமானதும் எல்லா தீர்த்தங்களுக்கும் மேலானதுமான "மண்டல தீர்த்தம்" என்று பெயருடைய புண்யதீர்த்தமிருக்கிறது. இந்த மூன்று தீர்த்தங்களும் எல்லா பாபங்களையும் நாசம் செய்யத்தகுந்தது. ஆகையால் திருப்பரங்குன்றத்தில் இந்த பன்னிரண்டு தீர்த்தங்களும் முக்யமாய் ப்ரஸித்தி பெற்றவைகள்."

[பர்வதஸ்யாஸ்ய ஶிக²ரே கூபாத்³யை: ப்ராக் ப்ரதிஷ்டி²தம் ।
ஸித்³த⁴தீர்த²ஞ்சமாஹாத்ம்யாத் தீர்த²ந்த்ரயோத³ஶ ॥]

ப்ரதா⁴நாநி ச தீர்தா²நி நவாநி யமிநாம் வர ।
தேஷு த்ரீணி ச ஶ்ரேஷ்டா²நி மஹாபாபஹராணி ச ॥

காஶீ ச வஹ்நிதீர்த²ம் பரமம் பாவநம் ததா² ।
ஸத்யதீர்த²ம் மஹாபுண்யம் ஸத்யஜ்ஞாநப்ரவர்த்தகம் ॥

பர்வதோபரி பாதாலகங்கா³தீர்த²ம் பராத்பரம் ।
சதுர்விம்ஶதி க்ருச்ச்²ராணாம் ஸக்ருத் ஸ்நாநப்ரஶமகம் ॥

கந்யாதீர்தா²ப்லவம் க்ருச்ச்²ரத்ரயாணாம் ப²லம் ப⁴வேத் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜதி தீயூ வுஸ்ஸ ஹாயாம் ஷூாநெ ஷூநமொாஊூவாகு ।
வெுாக்ஷா ஹவாநெ஼ யொமீநு ஸுதஉெவ ஊயொவுதெ ॥

(மலையின் முன்பாக ஈசான திக்கிலே "ஸித்த தீர்த்தம்" என்றொரு தீர்த்தமிருக்கின்றது. ஆக தீர்த்தங்கள் பதிமூன்று) "ஹே ஸநத்குமாரமஹரிஷே! இந்த தீர்த்தங்களில் ஒன்பது தீர்த்தங்கள் மேலானவை. அவைகளிலும் மூன்று மிகவும் ச்ரேஷ்டமானதாயும் மஹாபாபங்களையும் நாசம் செய்கிறதுகாளாயுமிருக்கின்றன. அவையாவன:- பரிசுத்தமானதும் மஹாபுண்யப்ரதமானதுமான "குமாரபத்மினி" என்னும் "சரவணப்பொய்கையும், ஸத்யம் - ஞானம் - ஸுகம் இவைகளைக் கொடுக்கிறதான "ஸத்யதீர்த்த"மும், மலையின் உச்சியிலிருக்கும் ஸர்வோத்தமமான "பாதாளகங்கா தீர்த்த" முமாம். இவைகளில் ஒரு தரம் ஸ்நாநம் செய்தால் அதினால் இருபத்துநான்கு க்ருச்ர பலன் உண்டாகிறதென்றும் மற்றைய தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்தால் மூன்று க்ருச்ர பலனுண்டாகிறதென்றும், இந்த தீர்த்த வைபவங்கள் பரமசிவனால் பவானீ (பார்வதீ) தேவியாருக்குத் தீர்த்த மஹிமைகளைப் பற்றிச் சொல்லுங்கால் அநுக்ரஹிக்கப்பட்டதாயும் ஸ்கந்த மஹா புராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஹே ஸநத்குமாரயோகீந்த்ர! இவைகளெல்லாம் உள்ளபடி என்னால் உரைக்கப்பட்டன".

வஹுஹிரிஹ கிஊுதெஸுவயூயா ஜெஹஹாஜாம்
ஹவஶதகூதவைநெ஼ஷுதுவாஸஷு முஹூ: ।
ஹவதி வாஊகாலெ வுாணிநாம் கணயூஊலெ
வுவஉதி வாஸெலெ தாரகம் தாரகாரி: ॥

"ஹே மஹரிஷிகளே! இந்த விஷயத்தைப்பற்றி அதிகமாய்ச் சொல்லுவதில் என்ன ப்ரயோஜனம்! அநேக ஜன்மங்களில் செய்த வெகு புண்ணியவசத்தினாலேயே தான் மனிதர்களுக்கு இந்த திருப்பரங்குன்றத்தில் எவ்விதத்திலும் வாஸம் கிடைக்கும்; ஏனெனில் இந்த க்ஷேத்ரத்தில் ஜனங்களுடைய மரணகாலத்தில் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியானவர், அவர்கள் காதில் தாரகோபதேசம் செய்கிறார்."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

𑌸𑍂𑌤𑌃

𑌇𑌤𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌂 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌸𑍍𑌯

𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸 𑌨𑌨𑍍𑌦𑍀𑌶𑌮𑍁𑌖𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑌮𑍍 ।

𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌸𑌕𑌲𑌾𑌗𑌮𑌜𑍍𑌞𑌃

𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 𑌤𑌮𑌤𑌿 𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟𑌃 ॥

𑌤𑌦𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌃

𑌤𑌪𑍋𑌧𑌨𑍈𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌾𑌂 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑍈𑌃 ।

𑌜𑌵𑍇𑌨 𑌕𑍈𑌲𑌾𑌸𑌗𑌿𑌰𑍇𑌰𑍍𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑍈𑌃

𑌸 𑌕𑍌𑌤𑍁𑌕𑌂 𑌸𑌤𑍍𑌯𑌗𑌿𑌰𑌿𑌂 𑌸𑌸𑌾𑌦 ॥

ஸூதமஹரிஷி சொல்கின்றார்:-

ஸகலாகம சாஸ்த்ரங்களையும் அறிந்தவராகிய ஸநத்குமார மஹரிஷியானவர், இந்தப்ரகாரம் நந்திகேச்வரரால் சொல்லப்பட்ட திருப்பரங்குன்ற க்ஷேத்ரத்தின் மாஹாத்ம்யத்தை நன்றாய்க்கேட்டு மிகுந்த ஸந்தோஷமடைந்து, நந்திகேச்வரரை சிரஸால் வணங்கி, அவருடைய உத்தரவினால், மஹாமகிமை பொருந்திய அந்த ஸநத்குமார மஹரிஷியானவர், ப்ரஹ்மவித்வரிஷ்டாளாயும் தபோதனர்களாயுமிருக்கிற மஹரிஷிகளோடுகூட கைலாஸபர்வ-தத்திலிருந்து ஆவலுடன் வேகமாக ஸத்யகிரி-திருப்பரங்குன்றம் வந்துசேர்ந்தார்.

𑌨𑌿𑌷𑍇𑌵𑍍𑌯𑌮𑌾𑌣𑍇𑌷𑍁 𑌚 𑌦𑍇𑌵𑌸𑌿𑌦𑍍𑌧

𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌦𑍍𑌯𑍈𑌸𑍍𑌸𑌹𑌸𑌾 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 ।

𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌤𑍀𑌰𑍍𑌥𑍈𑌶𑍍𑌶𑌿𑌵𑌰𑍂𑌪𑌮𑌦𑍍𑌰𑌿𑌂

𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨𑌾𑌲𑌯𑌮𑌾𑌸𑌸𑌾𑌦 ॥

அந்த க்ஷேத்ரத்தில் தேவர்கள் ஸித்தர்கள் ரிஷீச்வரர்கள் முதலியவர்களால் ஸேவிக்கப்பட்டதுகளான அநேக புண்ய தீர்த்தங்களில் சீக்ரமாய் ஸ்நாநம் செய்து, பரமசிவ ஸ்வரூபமாயும் அநேக புண்ய தீர்த்தங்களோடு கூடியதாயுமிருக்கிறதான அந்த ஸத்யகிரியை ப்ரதக்ஷிணம் செய்து ஆலயத்தை அடைந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தத்ரை௵ ஸ௱நு௱ம் த௱௱ணாகூ ஙிம்ஙா
யா௱தவ்ர ஹும் ஸவூஜமத்து௱ணூ௶ ।
ஷூடிம் ஊ௱கூ௱நாதி ஸ௱ைை௱நிபூஷெவூம்
ஸ ஷெவஸெநம் ஸமணம் ஓஜமூ ॥
தஷைவ தத்வாஜ ஸஸொா௱ஹ ுயம்
வ்ரணஊூ ஹக்கூா ஹவவீதி ஹஜநூ ।
மணெம ஓ௱மூா ஹரி மஜூாவரதம்
மா௱ஹும் ஊ௱நீநை ஸ்ரூ௱திஹி ஸூஊஸ்து௱வகு ॥

அந்த ஆலயத்தில் ஏக காலத்தில் உதயமான அநேகம் ஆயிரம் சூர்யர்களின் காந்திக்குச் ஸமானமான காந்தியை உடையவரும் ஸர்வ லோகங்களையும் ரக்ஷிக்கின்றவரும் தேவஸேனா ஸமேதராய் எழுந்தருளியிருப்பவரும் ஹரி ப்ரஹ்மேந்த்ராதி தேவர்களால் ஸேவிக்கப்பட்டவரும், பூத கணங்களோடு கூடியவருமாயுமுள்ள பரமேச்வர குமாரரான ஸ்கந்த ஸ்வாமியை தரிசனம் செய்தார்.

அப்பொழுதே ஜனன மரணபயத்தை நிவர்த்தி செய்கிறதான அந்த குஹஸ்வாமியினுடைய இரண்டு பாதாரவிந்தங்களிலும் பக்தியோடு நமஸ்காரம் செய்து, கணேசர், துர்காம்பிகை, மஹாவிஷ்ணு, பரமசிவன், இவர்களுடன் எழுந்தருளியிருக்கும் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியை, மஹரிஷிகளுடன் கூட வேத-வாக்யங்களினால் ஸ்தோத்ரம் செய்தார்.

ததஃ வ்ரஸஹஃ வ௱ஸைமுநாமஃ
கூரவாஜரமா வீக்ஷூ கூரவாகூ௱ஹஸ்து ।
கூரதகூ்ரயம் ஙஸ விஊ௱க்கூஊஜூஃ
கஸொாதி ஸவைபூஊூ௱நிஹிஃ கூ௱ஊாஃ ॥

பின்னர், க்ருபாகரரான பரசைலநாதர் ப்ரஸன்னராய், க்ருதக்ருத்யரான அந்த ஸநத்குமாரமஹரிஷியைக் க்ருபா கடாக்ஷத்தால் (கருணைக்கண்ணால்) பார்த்து, எல்லா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மஹரிஷிகளோடும் கூட பந்தத்திலிருந்து நீக்கி முக்தியை அடையச்செய்தார் அந்த ஆதிமூர்த்தியான குமாரக்கடவுள்.

சுய ஸ உ⁻நிர⁻ஸெஷைஸ்வூஸிஃஃ உ⁻நீநைஃ
ஸஹ ஶ⁻ஹ கூவயா ஸ்ரீஸதைஸெஷைஸ்யிஶஃ ।
வர⁻உ வ⁻ர⁻ஷஃஶ ஹாவயஷேவ வித்தெ
ஸகுஹ⁻வந ஹைதெ தது வாஸஂ வகார ॥

பிறகு ஸநத்குமாரமஹரிஷியானவர் குஹஸ்வாமியின் க்ருபையால் திருப்பரங்குன்றத்திலேயே ஸர்வஸித்திகளையுமடைந்து பரமபுருஷனாகிய அந்த ஈச்வரனை மனதில் எப்பொழுதும் பாவித்துக் கொண்டவராகியே, ஸமஸ்த லோகங்களுடைய க்ஷேமத்திற்காகவும் ஸகல மஹரிஷிகளுடனும் சேர்ந்து அந்த க்ஷேத்ரத்திலேயே வாஸம் செய்கிறார்.

ஜஉஂ ஹி ஜெவஸெநாயாஃ
கூஹ்யாணாவ்யாநஜூ⁻த ।
ஶுஜ்வதாஂ வ௦தாஂ ஸஉ்யஃ
ஸவ-கூஹ்யாண காரண ॥

தேவஸேனையினுடைய திருக்கல்யாண கதாரூபமாகிய இந்த அற்புத சரித்திரத்தை கேட்போரும் படிப்போரும் அப்பொழுதே ஸர்வாபீஷ்டங்களையும் அடைகின்றார்கள்.

உயொசுயதெ ஸதஶிரி ஷூஸு
ஊஹாதூஜெதகூ வர⁻உஂ வவிதுஂ ।
ஶுஜ்வஷி ஹக்ஷா ஹ⁻வி யெ உந⁻ஷ்யாஃ
ஶுணஷி காஊநவிஶுஜ ஶுஹஸெ ॥

ரொம்பவும் ஸாரமானதும் பரிசுத்தமானதுமான "ஸத்யகிரி ஸ்தல" மாகிய "திருப்பரங்குன்ற க்ஷேத்ரத்தின்" இந்த மாஹாத்ம்யம் என்னால் சொல்லப்பட்டது. பூவுலகில் எந்த மனிதர்கள் அதை பக்தியோடு கேட்கிறார்களோ அவர்கள் எல்லா இஷ்ட காம்யங்களையும் அடைகின்றார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கஹொ யநூ஁ா வயං ஸவெ஬

ஊ¯நய ஸகூவெஜிநඃ

யக ஸதூ஁ாசஞ ஊஹாதூ஁

ஶ்ரவணாக வഠநாக ஸூ¯டூ ॥ (112)

ஐதி ஸ்ரீ ஶைவெ ஊஹாவ¯ணாணெ

ஊகாஜஶா¯ஜ ஸංஹிதாயாஊ¯வாிஹாஶெ க்ஷெதூவணெ

ஸதூ஁கிரிஊஹாதெூ஁ ஊாஜஶொஜாடூாயඃ

ஸ்ரீ ஸதூ஁கிரி ஊஹாதூ஁ං ஸංவ¯ணஂூ ॥

ஶா¯ஹஊஸூ¯ ॥

ஒூ தததக

தத்வக்ஞானிகளான மஹரிஷிகளே! இந்த திருப்பரங்குன்ற க்ஷேத்ரமாஹாத்ம்யத்தைப் படித்ததினாலும் கேட்டதினாலும் நிச்சயமாய் நாமெல்லோரும் க்ருதக்ருத்யர்களானோம்; மிக ஆச்சர்யம். (112)

ஸ்ரீ சைவ மஹா புராணத்து ஏகாதச ருத்ர ஸம்ஹிதையின் மேல் பாகத்து க்ஷேத்ரகண்டத்தில் ஸ்ரீ ஸத்யாசலமென்னும் திருப்பரங்குன்றம் மாஹாத்ம்யத்தில்

பன்னிரண்டாவது அத்யாயம்

முற்றிற்று

திருப்பரங்குன்ற ஸ்தல புராணம்

முற்றுப்பெற்றது.

சுபமஸ்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிழை திருத்தங்கள்

பக்க எண்	வரி எண்	பிழை	திருத்தம்
80	14	நாரநாதி	நாரதாதி
82	17	காணப்படாத்தினால்	காணப்படாததினால்
96	16	அதினால்	அதனால்
207	9	செய்யப்பட்டவில்லை	செய்யப்படவில்லை
209	5	த்வேத்திற்காக	த்வேத்திற்காக
210	6	மமோசனம்	மவிமோசனம்
221	6	சுக்ரவார வ்ர மெனும்	சுக்ரவார வ்ரதமெனும்
229	கடைசி 3வது வரி	சரணாவிந்த	சரணாரவிந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வித்யாலயத்தின் வெள்ளிவிழா நினைவாக
சமர்ப்பிக்கப்பட்ட
தங்க அம்பாரியில்

அருள்மிகு மீனாக்ஷி சுந்தரேச்வரப் பெருமான்

மதுரை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்

Run by ஸ்ரீகாஞ்சீ மஹாஸ்வாமிகள் சதாப்தி வேத சிவாகம பாடசாலை டிரஸ்ட்

எண்66, ஸந்நிதித்தெரு, திருப்பரங்குன்றம்,

மதுரை - 625 005.